★

# உதயன்



23

www.onlineuthayan.com

26: பக்கங்கள் சுடர் 27 கதிர் 282 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 18 திங்கட்கிழமை (03/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00

# வாக்குறுதிகளை நம்புவதை விடுத்து தீர்வு எட்டப்படுவதனை உறுதி செய்க

## ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு மன்னிப்புச் சபை அறிக்கை

கொழும்பு, செப்ரெம்பர் 3

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் இன்னமும் அங்கு மனித உரிமை மீறல்கள் தொடரவே செய்கின்றன. அத்துடன் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் விடயத்திலும் இலங்கை அரசின் செயற்றிட்டம் திருப்திகரமானதாக இல்லை. இலங்கை அரசு சர்வதேசத்துக்கு வழங்கிவரும் வாக்குறுதிகளை நம்புவதை விடவும் நீதியான தீர்வை வழங்கும் நடவடிக்கைக்கே சர்வதேசம் வலியுறுத்த வேண்டும்- இவ்வாறு கோரியுள்ளது சர்வதேச மன்னிப்புச் சபை.

**சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விரிவான விசாரணைகளை நடத்தி குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டியது அவசியமானது.**

இலங்கையின் தற்போதைய நடைமுறை விடயங்கள் தொடர்பாக ஐ.நாவின் மனித உரிமைகள் சபைக்கு சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையொன்றை அனுப்பிவைத்துள்ளது. இந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை தொடர்பில் தெரிவித்துள்ளது. இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு-

இலங்கையில் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. அத்தோடு இத்தகைய மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச் செயல்களுக்கு தண்டனை

பார்க்க பக்கம் 4

இலங்கைப் படைகளுக்கு பயிற்சியளிக்கும் இந்தியா பாகிஸ்தான் படைகளுக்கும் பயிற்சி வழங்குமா? - பழ.நெடுமாறன் கேள்வி 5

இந்தியாவுக்கு வரும் மஹிந்த ராஜபக்ஷவை கடும் தொனியில் பிரதமர் விசாரிக்க வேண்டும்- டாக்டர் ராமதாஸ் கோரிக்கை 8

பாகிஸ்தானில் 12 இராணுவத்தினரின் தலைகளைத் துண்டித்தனர் தலிபான் தீவிரவாதிகள். அதன் வீடியோவும் வெளியிடப்பட்டது. 10

தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்படாவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். 17

## நாடு திரும்பும் ஈழ அகதிகளுக்கு இங்கு அச்சுறுத்தல் எதுவுமில்லை

### மீள்குடியேற்ற அமைச்சர் உறுதி

கொழும்பு, செப்.3

இந்தியாவிலுள்ள தமிழ் அகதிகள் மீண்டும் தம்முடைய தாய்நாடான இலங்கைக்குத் திரும்பினால் அவர்கள் மீது எதுவித பழிவாங்கல்களோ, சட்ட நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படமாட்டாது. மாறாக அவர்களின் வருகையை இலங்கை அரசு வரவேற்கிறது. - இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் நடைபெற்ற போர் காரணமாக ஏராளமான தமிழர்கள் இந்தியாவுக்கு அடைக்கலம் தேடிச் சென்றுள்ளார்கள். அங்குசென்றவர்கள் இந்திய அரசின் பராமரிப்பிலுள்ள அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர்.

புள்ளிவிவரங்களின்படி, ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட

பார்க்க பக்கம் 4

## இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை தடுக்கும் பொறுப்பு ஆரியசிங்கவிடம்

கொழும்பு, செப்.3

நவம்பர் மாதம் ஐ.நா. மனிதஉரிமைகள் சபையின் பூகோள கால மீளாய்வுக் கூட்டத்தொடரில் இலங்கையில் நிலவும் மனிதஉரிமைகள் நிலை குறித்தும் ஆராயப்படவுள்ளது. இதன்போது கூட்டத்தொடரில் பங்குபற்றவுள்ள இலங்கைக் குழுவுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு ஜெனிவாவில் உள்ள இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவருடன் இலங்கை சட்டமா திணைக்கள அதிகாரிகளும் பங்குபற்றுவர். இதனால் வழமை போன்று இந்தக் கூட்டத் தொடருக்கு இலங்கையில் இருந்து அமைச்சர்களோ அல்லது மூத்த அதிகாரிகளோ செல்லமாட்டார்கள் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனிதஉரிமைகள் சபையின் கூட்டத் தொடரின்போது இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்தைத் தடுப்பதற்கு ஆதரவு தேடும்

பார்க்க பக்கம் 4

## அகதிகளைத் தொடர்ந்து அனுப்பி இந்தியாவை குழப்புகிறது இலங்கை

கொழும்பு, செப்.3

தமிழர்களை அகதிகளாக்கி இந்தியாவின் அரசியலில் இலங்கை அரசு தொடர்ந்தும் குழப்பத்தை உருவாக்கி வருகிறது என்று இந்திய முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் மச்குந்த் துபே குற்றஞ்சாட்டியுள்ளார்.

'மாறிவரும் உலகில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை' என்ற தலைப்பில் விரைவில் நூல் ஒன்றை துபே வெளியிட இருக்கிறார். அந்த நூலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

வங்கதேசம் சக்மா இந்தியாவுக்கு அகதிகளை அனுப்பியது போல் இலங்கையும்

பார்க்க பக்கம் 4

## சட்டப்படி வந்தாலே புகலிடம்

### ஆஸி.குடிவரவு அமைச்சர் திட்டவட்டம்

கொழும்பு, செப்.3

சட்டவிரோதமான முறையில் ஆஸியில் புகலிடம் கோருபவர்களுக்கு இனிமேல் அடைக்கலம் வழங்கத் தயாரில்லை என ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவென் தெரிவித்துள்ளார்.

தற்போது ஆஸிக்கு பெருமளவிலானவர்கள் சட்டவிரோத அடிப்படையில் புகலிடக் கோரிக்கையாளர்களாக வருகின்றனர்.

அதன்படி சட்டவிரோதமான முறையில் பாதுகாப்பற்ற கடற் பயணங்களைத் தெரிவு செய்து படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசித்து வருகின்றனர். இவர்களுக்கு அடைக்கலம் கொடுக்க ஆஸி. அரசு தயாரில்லை எனவும் சட்ட திட்டங்களுக்கு அமைவாக புகலிடம் கோரு

பார்க்க பக்கம் 4

## அரசின் சீன மோகத்தால் இந்திய உறவில் விரிசல்

### சொல்கிறார் மங்களசமரவீர

கொழும்பு, ஓக.3

வரலாற்றுக்காலம் முதல் இருந்த எமது ஆட்சியாளர்களின் காலத்தில் சர்வதேச நாடுகள் அனைத்தினதும் கதவுகள் எமக்காகத் திறந்திருந்தன. அதுபோலவே, எமது அயல்நாடான இந்தியாவும். எம் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் எப்போதும் சுமுகமானதாகவே இருக்க வேண்டும். ஏனைய நாடுகளுடன் ஒட்டி உறவாடிக் கொண்டு இந்தியாவுடன் விரோதம்கொண்டு அதை



நாம் கோபத்திற்குள்ளாக்கக் கூடாது. அது நமது நாட்டின் இறைமைக்குப் பாதிப்பை

பார்க்க பக்கம் 4

## இன்று துக்கதினமே விடுமுறையல்ல

கொழும்பு, செப்.3

கடந்த புதன்கிழமை தனது 103ஆவது வயதில் காலமான இராமான்ய பௌத்த பீடத்தின் மஹா நாயக்கரான வேவல்தெனிய மேதாலங்கார மகாதேரரின் இறுதிக்கிரியை இன்று மிரிகம தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி இன்று திங்கட்கிழமை நாடெங்கும்

பார்க்க பக்கம் 4

## ஆஸி. படகுப் பயணங்களின் மையம் இப்போது வடக்குக் கடற் பகுதியே

### தடுக்க நடவடிக்கை – கடற்படை

கொழும்பு, செப்.3

சட்டவிரோதமான கடற் பயணங்களின் மூலம் ஆஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட நாடுகளுக்குச் செல்ல முயலும் புகலிடக் கோரிக்கையாளர்களின் மையப்பகுதியாக இப்போது வடக்குக் கடற்பகுதி மாறியிருக்கிறது. இதனைத் தடுப்பதற்கு விசேட கண்காணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

குறிப்பாக ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமான படகுப் பயணங்கள் மூலம் செல்ல முயற்சிக்கும் புகலிடக் கோரிக்கையாளர்களை இலக்கு வைத்தே இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் கிழக்கு மற்றும் வடமேற்கு கரையோரப் பகுதிகள் ஊடாகவே ஆரம்பத்தில் இத்தகைய சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களின் பயணங்கள் நடைபெற்றன. ஆயினும் இந்தப் பகுதிகளில் கடற்படையினரால் கூடுதல் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதனைத் தொடர்ந்து அங்கு சட்டவிரோத ஆள்கடத்தல்காரர்களின் முயற்சிகள் கட்

பார்க்க பக்கம் 4

## மாகாண சபைத் தேர்தல் மஹிந்த அரசின் மோசடி

### விக்கிரமபாகு குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.3

மூன்று மாகாணசபைத் தேர்தல் களங்களிலும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தேர்தல்கள் ஆணையாளரே நேரடியாகக் களத்திலிறங்கி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்.

இதனூடாக இந்தத் தேர்தல் மஹிந்த அரசால் நடத்தப்படும் மோசடியான தேர்தல் என அவரே நிரூபித்துள்ளார். அவரது செயற்பாடுகளே அதற்கு சாட்சி

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி அதிகாரிகளை பிரசாரத்தில் உள்ளீர்ப்பதைத் தடுக்க நடவடிக்கை

## தேர்தல் ஆணையரிடம் 'கபே' அமைப்பு கோரிக்கை

கொழும்பு, செப்.3

''சமுர்த்தி அதிகாரிகள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு உள்ளீர்க்கப்படுவதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்''

- இவ்வாறு நீதியானதும், நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிற்குத் அனுப்பியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுவிடயம் தொடர்பில் 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் கையொப்பமிட்டு தேர்தல் ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதேச உறுப்பினர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடன் வீடுவீடாகச் சென்று கையேடுகளைப் பகிர்ந்தளிப்பதற்கான பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.**

கல்முனை, நிந்தவூர் ஆகிய பிரதேசங்களின் பல பகுதிகளில் சமுர்த்தி அதிகாரிகளினூடாக வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதேச உறுப்பினர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடன் வீடுவீடாகச் சென்று கையேடுகளைப் பகிர்ந்தளிப்பதற்கான பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இற்றைக்கு சில நாட்களுக்கு முன்னர் அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய இரு இடங்களில் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளின் இரண்டு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. அதன்போது அம்பாறை மாவட்டத் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சமுர்த்திக் கொடுப்பனவைப் பெறுபவர்களின் வீடுகளைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்குச் செல்வதற்கான வழியைக் காட்டுவது தேர்தல் பிரசாரத்திற்கு உள்ளீர்க்கப்பட்டிருந்த சமுர்த்தி அதிகாரிகளின் ஒரு கடப்பாடாகும். நீல நிறத்திலான தொப்பி, ரீசேட்டுகளை அணிந்து இவர்கள் தோற்றம்பெற்றிருந்தனர்.

அரச சேவையாளர்களான சமுர்த்தி அதிகாரிகளைத் தேர்தல் பிரசாரத்திற்குப் பயன்படுத்துவதானது சட்டவிரோதமானதாகும். இப்படியிருக்கையில், இவ்வாறான செயற்பாடுகளை தெஹியத்த கண்டி, பொத்துவில், சம்மாந்துறை, உகன, தமண ஆகிய பிரதேசங்களிலும் முன்னெடுப்பதற்கு சம்பந்தப்பட்ட வலய அலுவலகங்கள் தயாராக உள்ளன.

எனவே, சமுர்த்தி அதிகாரிகள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ளது.

(ந-சி)

## வலையில் சிக்கிய வெடிபொருள் மீனவனின் கையைப் பறித்தது

யாழ்ப்பாணம், செப்.3

மீன்பிடி வலையில் சிக்கிய மர்மப்பொருள் வெடித்ததால் இளைஞர் ஒருவர் இடதுகையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் முல்லைத்தீவு செம்மலையில் இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலாளியான ஆராக்கியநாதன் செந்தூரன் (வயது-21) என்பவரே மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மர்மப் பொருள் வெடித்ததில் தனது இடது கையின் மூன்று விரல்களையும் முற்றாக இழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாது-

வழமைபோன்று இவர் கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவிட்டு கரைக்கு வந்து பிடிபட்ட மீன்களை வலையிலிருந்து அகற்றிக் கொண்டிருந்தபோதே அதிலிருந்த மர்மப் பொருளைக் கண்டுள்ளார். அதனை வலையிலிருந்து எடுத்தபோது அது வெடித்துச் சிதறியதாகவும் தனது இடதுகையின் பெருவிரல் உட்பட மூன்று விரல்களும் முற்றாகச் சிதறி விட்டன என்றும் செந்தூரன் தெரிவித்தார்.

உடனடியாக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போது யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(16-4)

## இலங்கை வரும் ஐ.நா.குழுவுக்கு போர்ச்சூழல் குறித்த விவரணப்படம்

### தயாரிக்கிறது அரசு

கொழும்புக்கு வரும் ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் தூதுக்குழுவுக்கு இலங்கையின் போர்க்கால வரலாற்றைச் சித்திரித்து விரிவான விளக்கத்துடன் விவரணப் படம் ஒன்றைக் காண்பிப்பதற்கான நடவடிக்கையில் அரசு முழு வீச்சுடன் இறங்கியுள்ளது என அறிய முடிகிறது.

அத்துடன், ஐ.நா. குழுவுக்கு இறுதிக்கட்டப் போர் குறித்து விளக்கமளிக்கையில், விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் முக்கிய தளபதிகளையும் புனர்வாழ்வு பெற்றுவரும் போராளிகளையும், போர்க்காலத்தில் அந்தப் பகுதிகளில் அரச அதிபர்களாக பணியாற்றியவர்களையும் இலங்கை அரசு சாட்சியங்களாகப் பயன்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

புலிகள் இழைத்த போர்க் குற்றங்கள், அரசின் போர் அணுகுமுறைகள் ஆகியவை உட்பட முக்கிய சில விடயங்களை மேற்கூறப்பட்டவர்களினூடாக ஐ.நா.வுக்கு எடுத்துரைத்தால் அதில் நம்பகத்தன்மை அதிகளவில் இருக்கும் என்பதே அரசின் எதிர்பார்ப்பாகும்.

அதற்கேற்ற வகையில் அது தற்போது தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகள், மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு ஆகியவை தொடர்பான புள்ளி விவரங்களையும் அரசு ஐ.நாவுக்கு சமர்ப்பிக்கவுள்ளது.

## படகு விபத்தில் இருவர் சாவு

கொழும்பு, செப்.3

ஜா எல தடுகம் ஓயா நதியில் பயணம் செய்த படகொன்று பழைய கொங்கிறீட் தூணில் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

அப்படகில் ஐவர் பயணம் செய்ததாகவும் அவர்களில் மூவர் பிரதேசவாசிகளால் காப்பாற்றப்பட்டதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஏனைய இருவரும் கரைக்கு கொண்டுவரப்பட்டபோது உயிரிழந்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்விரு ஆண்களும் சீதுவையிலுள்ள தேவாலயமொன்றின் திருவிழாவுக்கு வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பு பலகத்துறை - கொச்சிக்கடை பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர்களே சம்பவத்தில் பலியாகியுள்ளனர்.

# சாட்சிகள் இல்லாததால் தப்பிக்கும் குற்றவாளிகள்

## மக்கள் உதவ முன்வரவேண்டும்; பொலிஸார் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.3

குற்றச்செயல்கள் தொடர்பில் பொதுமக்கள் தமக்கு அறியத் தருவதுடன் அவற்றின் உண்மைத்தன்மை தொடர்பிலும் சாட்சிகளை வழங்குவதற்கு துணிந்து முன்வரவேண்டும் என பொலிஸார் கேட்டுள்ளனர்.

தற்போது குடாநாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதால் அவற்றை கட்டுப்படுத்துவதற்கும் குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எமக்கு உரிய சாட்சிகள் தேவைப்படுகிறது.

குற்றவாளிகளை நீதிமன்றில் முற்படுத்தும் போது சாட்சிசொல்ல எவரும் முன்வராது விடும் பட்சத்தில் குற்றத்தை நிரூபிக்கமுடியாமல் போவதோடு சட்டத்தின் பிடியிலிருந்து குற்றவாளிகள் தப்பிக்கின்றனர். அதனால் குற்றவாளிகள் தொடர்ந்தும் குற்றச் செயல்களில் ஈடுபடுவதனையும் தவிர்க்கமுடியாது போகும் என்று பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது வீதி விபத்துக்கள் அதிகரித்து அதன் மூலமாக உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. கவனவீனமாக விபத்தில் சிக்குவது மட்டுமின்றி போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றாது செல்பவர்கள் மூலமாகவும் உரிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்துபவர்களாலும் விபத்துக்கள் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

அனேகர் மோதிவிட்டு மோதுண்டவரை வைத்தியசாலையில் அனுமதிக்காது தப்பித் தலைமறைவாகி விடுகின்றனர்.

காயப்பட்டவர்கள் வீதியில் துடிதுடிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். பிரதான வீதிகளில் விபத்துக்கள் அதிகமென்றாலும் உள் வீதிகளிலும் விபத்துக்கள் என்னேரமும் இடம்பெறலாம்.

எனவே விபத்து அல்லது குற்றச் செயல்கள் எதுவாக இருப்பினும் இவைபற்றிப் பொலிஸாருக்குத் தகவல் தருவதோடு மட்டுமின்றி அவைபற்றி சாட்சி சொல்ல முன்வர வேண்டும் என கேட்டுக் கொள்கின்றனர்.

(16-4)

# இலங்கை உதைபந்து வீரர்களை திருப்பியனுப்ப உத்தரவிட்டார் ஜெ.

## அனுமதியளித்த அதிகாரியின் பதவியும் பறிபோனது



இலங்கை உதைபந்தாட்ட வீரர்களுக்கு சென்னையில் பயிற்சி அளிக்கப்பட்டமைக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துள்ள முதல்வர் ஜெயலலிதா, அவர்களை திருப்பி அனுப்ப உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் நேரு விளையாட்டு அரங்கில் பயிற்சி அளிக்க அனுமதி அளித்த பொறுப்பு அதிகாரியை தற்காலிக பணிநீக்கம் செய்யவும் முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கைத் தமிழர்கள் சிங்களவர்களுக்கு சமமான உரிமைகளைப் பெறும் வரை அந்நாடு மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும் என்று தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து

இலங்கை இராணுவ வீரர்களை இந்தியாவில் உள்ள வேறு மாநிலத்திற்கு அனுப்பி மத்திய அரசு தொடர்ந்து பயிற்சி வழங்கிவருகிறது.

ஆனால், மத்திய அரசு அதற்கு சிறிதும் மதிப்பளிக்கவில்லை. மாறாக, இது போன்ற பயிற்சிகள் அளிப்பது நிறுத்தப்படமாட்டாது என மத்திய அமைச்சர் தெரிவித்து, தமிழக மக்களின் உணர்வுகளை புண்படுத்தியுள்ளார்.

மேலும், இலங்கை கால்பந்து வீரர்களுக்காக எந்த போட்டிகளும் தமிழகத்தில் நடத்தக் கூடாது என்றும், அவர்களை இலங்கைக்கு உடனடியாக திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதே போல வேலம்மாள் உயர்கல்லூரியுடன் உதைபந்தாட்டப்போட்டிக்கு சென்ற இலங்கை, இரத்தினபுரி ஹில்பர்ன் இன்டர்நேஷனல் பாடசாலையின் 8 மாணவர்கள் மற்றும் ஒரு பயிற்சியாளரையும் திருப்பி அனுப்பி உள்ளதாக ஜெயலலிதா தெரிவித்தார்.

(16)

## மருத்துவர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

வடமத்திய மாகாண மருத்துவர்கள் தமது பணிப் புறக்கணிப்பை இடைநிறுத்தியுள்ளதாக இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அநுராதபுரத்தில் மருத்துவர் ஒருவர் தாக்கப்பட்டதையடுத்து வடமத்திய மாகாண மருத்துவர்கள் இன்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவிருந்தனர்.

இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவினர் அப்பகுதிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகள் குறித்து ஆராய்ந்து விசாரணைகளையும் துரிதப்படுத்துமாறு வடமத்திய மாகாணத்தின் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் ஆளுநருடன் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (16)

## கோஷ்டி மோதலில் ஈடுபட்ட ஐவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், செப்.3

கொக்குவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற கோஷ்டி மோதலுடன் தொடர்புடைய ஐந்து சந்தேக நபர்களைத் தாம் கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் சந்தியில் இரு குழுக்களுக்கு இடையிலான மோதலால் மூவர் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மோட்டார் சைக்கிளில் வந்தோரே முரண்பட்டு தாக்குதல் நடத்தினர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணை மேற்கொண்டு ஐந்து சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர். அது தொடர்பில் மேலதிக விசாரணை நடைபெறுவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை சுதுமலை ஆனைக்கோட்டையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இசைக்கச்சேரியின் போது இரு குழுவினரிடையே ஏற்பட்ட மோதலின் போது யுவதி ஒருவர் தலையில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த பிரபாகரன் கார்த்திகாயினி (வயது-20) என்ற யுவதியே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என அவரது உறவினர் தெரிவித்தார்.

(16-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பளையில் இரு வீதிகள் திருத்தம்

பளை, செப்.3

பளைப் பிரதேசத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட முகமாலைப் பகுதியில் உள்ள வீதிகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

பளைப் பிரதேச சபையின் ஊரெல்லைத் தெருவான முகமாலை பொந்தர் குடியிருப்பு, மாலையான் கந்தன் நெல்லித் தோட்ட வீதி, முகமாலை கரையாதுரவு வீதி ஆகியவையே புனரமைக்கப்படவுள்ளன.

பளைப் பிரதேச சபையால் வேலைகள் நடைபெறவுள்ளதாகச் சபையின் செயலாளர் சி.சிவப்பிரகாசம் தெரிவித்தார். பிரதேசத்தில் மேலும் 3 வீதிகளைப் புனரமைக்க நிதி கிடைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## இரு குழுக்களிடையே மோதல் காயமடைந்த 4 பேர் ஆஸ்பத்திரியில்

வலி. வடக்கு, செப். 3

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் குழுவின் ஆயுதத் தாக்குதல்களால் நான்கு இளைஞர்கள் காயங்களுக்கு ஆளாகிய சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

கொக்குவில் சந்தியில் இடம் பெற்ற இரு இளைஞர் குழுக்களுக்கு இடையேயான மோதலில் ஒருவர் படுகாயங்களுக்கு ஆளாகியதுடன் நால்வர் காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொக்குவில் சந்தியில் சனிக்கிழமை இரவு 8.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. கொக்குவில் சந்தியில் நின்ற இளைஞர் குழுவுக்கும் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் குழுவுக்கும் இடையே இந்த மோதல் இடம்பெற்றது.

மோதல் இடம் பெறுவதை அவதானித்த கொக்குவில் சந்தியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்ததைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிள்களில் வந்த இளைஞர் குழுவினர் தப்பி ஓடினர்.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்றையும் அவர்கள் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிளை மீட்ட இராணுவத்தினர் காயமடைந்தோரை வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர். குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)

# ஆசிரியர் பற்றாக்குறையுள்ள வலயங்களுக்கு இடமாற்றம்

### சேவைக்காலம் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப்.3

*குறிப்பிட்ட ஒரு வலயத்தில் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்கள், பற்றாக்குறையுள்ள வலயங்களுக்கு இடமாற்றம் கோரும் பட்சத்தில் வலய சேவைக்காலம் கருத்தில் கொள்ளாது விடுவிக்கலாம். இந்தக் காரணத்தைத் தவிர வேறு எந்தக் காரணம் கொண்டும் ஏழு வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய பின்னர் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள், இடமாற்றம் பெற்ற பாடசாலையில் உரிய காலத்தைப் பூர்த்தி செய்யாது மீண்டும் முன்னர் கடமையாற்றிய பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள்.*

வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இடமாற்றத்தின்போது பாடசாலைகளை அதிகஷ்டம், கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் என்று வகைப்படுத்தல் வலய இடமாற்றச் சபையால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

இடமாற்ற நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக் காலத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டியது ஆசிரியரதுமட் வலயக் கல்விப் பணிப்பாளரதும் பொறுப்பு. உரிய சேவைக் காலம் பூர்த்தியாவது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கவனம் செலுத்துவர்.

வன்னியைச் சொந்த இடமாகக் கொண்ட ஆசிரியர்கள் 6 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த பின்னரே இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும். தவிர சேவைக்காலங்கள், பாடசாலைகளின் நிலைகளைப் பொறுத்து தீர்மானிக்கப்பட வேண்டும்.

அதிகஷ்டப் பிரதேச பாடசாலையாக அமையும் போது நான்கு வருட சேவைக் காலத்தைக் கொண்டிருக்கும். கஷ்டப் பிரதேசப் பாடசாலையாக அமையும்போது ஐந்து வருடசேவைக் காலத்தைக் கொண்டிருக்கும். வசதியான பாடசாலையாகத் தீர்மானிக்கப்படும் பாடசாலைகளில் ஆசிரியர்கள் ஆறு வருட சேவைக் காலத்தைக் கட்டாயம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

55 வயதுக்கு உட்பட்ட ஆசிரியர்கள் எவராக இருந்தாலும் ஒரே பாடசாலையில் ஏழுவருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்தவராக இருப்பார்களானலும் அவர்களுக்குக் கட்டாய இடமாற்றம் செய்யப்படவேண்டும்.

சில பாடசாலைகளில் பகுதித் தலைவர்கள் மற்றும் சில பொறுப்புக்களை வகிப்பவர்கள் இடமாற்றம் தொடர்பில் சிக்கல் ஏற்படாதவாறு ஒரு பாடசாலையின் பகுதித் தலைவர்களை இடமாற்றம் செய்யும் போது அவர்களுக்குப் பதிலாக பிற பாடசாலையின் பகுதித் தலைவர்கள் இடமாற்றம் செய்யப்படுவதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

ஜீ.சி.ஈ. உயர்தர வகுப்பு ஆசிரிய இடமாற்றம் வருடாந்தம் இந்த வகுப்புக்குரிய பரீட்சை நிறைவடைந்து மூன்றாம் தவணை ஆரம்பமாகும்போதும் ஆரம்ப, இடைநிலை ஆசிரியர்களுக்கான இடமாற்றம் வருடாந்தம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையிலும் இருக்க வேண்டும் என்று கூறினார். (ம-4)

## திருட்டுப்போன 9 சைக்கிள்கள் மீட்பு

வட்டுக்கோட்டையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இரண்டு பேரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்டதில் திருடப்பட்ட 9 சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன. உரியவர்கள் ஆதாரம் காட்டி சைக்கிள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

கடந்த மாதம் இரண்டு சந்தேக நபர்கள் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போதே 9 சைக்கிள்கள் திருடியதை அவர்கள் ஒப்புக்கொண்டனர். பின்னர் திருடப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த 9 சைக்கிள்களும் மீட்கப்பட்டன.

அவற்றில் நான்கு சைக்கிள்கள் மானிப்பாய் பொலிஸ் பிரிவில் திருடப்பட்டுள்ளன. அந்த நான்கு சைக்கிள்களையும் உரியவர்கள் பெற்றுச் சென்றுள்ளனர். மிகுதி 5 பெண்களுக்கான சைக்கிள்களும் இதுவரை எவராலும் உரிமை கோரப்படவில்லை. எனவே அவற்றை உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-4)

## ஒட்டுவெளிப் பகுதி நெல் வயல்களில் 12 வருடங்களின் பின் காலபோகம்

தென்மராட்சி, செப்.3

எழுதுமட்டுவாழ் தெற்கு ஒட்டுவெளி நெல் வயல்களில் 12 வருடங்களின் பின்னர் இந்த வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த வயல்களில் மேற்கொள்ளப்படும் காலபோக நெற் பயிர்களை கட்டாக்காலி கால்நடைகளிடமிருந்து பாதுகாக்கவென சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தினர் கொங்கிறீற் தூண்களையும் முட்கம்பிகளையும் கமக்கார அமைப்பிடம் கையளித்துள்ளனர்.

இதனையடுத்து இந்த வயல்களின் உரிமையாளர்கள் ஒன்றிணைந்து நாளை பாதுகாப்பு வேலி அமைக்கவுள்ளனர் என்று கமக்கார அமைப்பின் செயலாளர் சி.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்தார்.

2000 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் மக்கள் மீளக் குடியமர்ந்ததை அடுத்து பிரிவில் உள்ள பல வயல்களில் காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் துரிதகதியில் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## இளைஞர் குழு தாக்கி இரு பெண்கள் காயம்

கொக்குவில் கிழக்கு பிரம்படியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் இரண்டு பெண்கள் தலையில் காயங்களுக்கு ஆளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். பிரம்படியில் உள்ள குறிப்பிட்ட குடும்பத்தினரின் வீட்டுக்கு இரவு வேளையில் மோட்டார் சைக்கிள்களில் சென்ற சுமார் பதினைந்துக்கும் மேற்பட்டவர்கள் வீட்டில் இருந்த பெண்களை தாக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

பெண்களின் கூக்குரல் கேட்டு அயலவர்கள் வெளியில் வந்த போதிலும் குறிப்பிட்ட இளைஞர் குழு கைகளில் ஆயுதங்கள் வைத்திருந்ததைக் கண்டு தமது வீடுகளுக்கள் முடங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த கும்பல் அங்கிருந்து சென்றதும் அயலவர்களின் உதவியுடன் காயமடைந்தோர் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். (ம-86)

## எழிலூரில் 8 இந்திய வீடுகள் கையளிப்பு



கொழும்புத்துறை எழிலூர் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இந்திய உதவி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 8 வீடுகள் அமைத்து கையளிக்கப்பட்டுள்ளன.

52 வீடுகள் அமைந்திருந்த இந்தக் குடியேற்றத் திட்டத்தில் கடந்த கால போரால் அனைத்து வீடுகளும் சேதமடைந்திருந்தன.

தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதை அடுத்து யாழ். பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இந்திய அரசின் உதவித் திட்டத்தின் கீழ் 8 வீடுகள் அமைக்கப்பட்டு பயனாளிகளிடம் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளன.

ஏனைய வீடுகளையும் விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கிராம அபிவிருத்தி குழு அங்கத்தவர்கள் தெரிவிக்கின்றனர். (ம-135)

## போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள பாடசாலைகளுக்கு முன்பாகப் பொலிஸ்

யாழ்ப்பாணம், செப்.3

வீதி விபத்துக்கள் மற்றும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் பொருட்டு போக்குவரத்து அதிகமாகவுள்ள வீதிகளில் உள்ள அனைத்துப் பாடசாலைகளின் முன்பாகவும் பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரத்திலும் நிறைவுறும் நேரத்திலும் ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் இருப்பார்.

இன்று தொடக்கம் இது நடைமுறைப்படுத்தப்படும் என்று யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

போக்குவரத்து அதிகமாகவுள்ள இடங்களிலுள்ள பாடசாலைகளை அண்மித்தும் வீதி திருத்தப் பணிகள் இடம்பெறும் இந்த நிலையில் வீதி விபத்துக்கள் அதிகமாக இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் உள்ளன. தவிர அசௌகரியம் ஏற்படவும் வாய்ப்புள்ளது. இது பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டது.

பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திலும் நிறைவுறும் நேரத்திலும் மாணவர்கள் அதிகமானோர் நடமாடுவர். அந்த நேரத்தில் அதிகளவில் விபத்துக்கள் இடம்பெற வாய்ப்புகள் அதிகம் உண்டு என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தரை அந்த நேரங்களில் பணியில் அமர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று எரிக் பெரேரா மேலும் தெரிவித்தார். (ம-4)

## சட்டவிரோத செயற்பாடுகளுக்காக 11 லட்சத்து 27 ஆயிரம் ரூபா வசூல்

### யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களக் கட்டுப்பாட்டு அதிகாரி

யாழ்ப்பாணம், செப்.3

யாழ். மாவட்டத்தில் கடந்த எட்டு மாத காலப் பகுதிக்குள் மட்டும் அனுமதியின்றி அரச சாராயம் விற்றமை, வயது குறைந்தோருக்கு புகைபொருள் விற்றமை, சட்ட விரோதமாக கள் விற்பனை செய்தமை போன்ற குற்றத்துக்காக அவர்களிடமிருந்து 11 லட்சத்து 27 ஆயிரம் ரூபா வசூல் செய்யப்பட்டுள்ளது.

அனுமதியின்றி அரச சாராயம் விற்பனை, 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை, சட்டவிரோதமாக கள் விற்பனை போன்ற குற்றத்துக்காக 362 பேருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது இந்தத் தண்டம் அறவிடப்பட்டது என யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களக் கட்டுப்பாட்டு அதிகாரி என்.கிருபாகரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

**இனங்காணப்பட்ட பிரதேசங்களில் இருந்து கடந்த எட்டுமாத காலப் பகுதிக்குள் 362 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் சட்ட விரோத மதுபான உற்பத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட போதும் தீவகப் பகுதிகளில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் அரச சாராயம் பதிவு செய்யப்படாமல் விற்பனை செய்த விற்பனையாளர்கள், 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்குப் புகை பொருள் விற்பனை செய்தவர்கள், சட்டவிரோதமாக வீடுளில் வைத்து கள் விற்பனை செய்தவர்கள் என யாழ். மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களின் தேடுதல் நடவடிக்கைகளின்போது இனங்காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம், அரியாலை, நல்லூர், கல்வியங்காடு, ஆனைக்கோட்டை, ஐந்துசந்தி, வண்ணார் பண்ணை ஆகிய பிரதேசங்களில் மதுவரித் திணைக்களத்தின் சட்டக் கோவைகளுக்கு அப்பால் மது மற்றும் சிகரெட் விற்பனைகள் அதிகம் இடம்பெறுகின்றன. இவற்றைச் சில இடங்களிலே எம்மால் இனங்காண முடிந்துள்ளது.

எனினும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் இனங்காணப்பட்ட பிரதேசங்களில் இருந்து கடந்த எட்டுமாத காலப் பகுதிக்குள் 362 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் கடந்த மாதம் மட்டும் 49 பேர் கைது செய்யப்பட்டனர்.

குற்றத்துடன் தொடர்புடைய 362 பேரும் யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது 11 லட்சத்து 27 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

சட்ட நடைமுறைக்கு அமைவாக அவரவர் குற்றங்களுக்கு 3 ஆயிரம், 4 ஆயிரம் எனத் தண்டப் பணம் அறவிடப்பட்டது.- என்றார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் அடாவடியை மு.கா. பார்த்துக்கொண்டிருக்காது

## பொங்கியெழுகிறார் அமைச்சர் ஹக்கீம்

அரசுடன் இருப்பதற்காக அரசின் அராஜகத்தையும், அடாவடித்தனத்தையும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. சுதந்திரமான நாட்டில் எவரும் எந்த இடத்திற்குச் சென்றும் தங்களது கருத்துகளைக் கூறமுடியும். அது அவர்களின் உரிமை. இதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரிக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

இதன்போது ஹக்கீம் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு -

இந்தக் கூட்டத்தை நடத்துவதற்குக்கூட மாலை மூன்று மணிக்கே பொலிஸார் அனுமதி தந்தனர். நான் பொலிஸ்மா அதிபருடன் கதைத்த பின்னர்தான் அனுமதியைத் தந்தார்கள். இலங்கையில் சமீப கால்த்தில் இருந்த பொலிஸ் மா அதிபர்களில் மிக நேர்மையான ஒரு பொலிஸ்மா அதிபராக தற்போதைய பொலிஸ்மா அதிபரைக் காண்கின்றேன்.

ஒரு அமைச்சரின் எடுபிடியாக அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் ரணகல செயற்பட்டது. உங்களுக்குத் தெரிந்த விடயம். நோன்பு திறக்க வந்தபோது அமைச்சரின் அட்டகாசத்தை தடுத்து நிறுத்த பொலிஸார் எந்தச் செயற்பாட்டிலும் இறங்கவில்லை. இன்று கரையோரப் பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களை கண்காணிப்பதற்காக புதிய பொலிஸ் அத்தியட்சகர் நியமிக்கப்பட்டுள்ளார். பொலிஸ் அத்தியட்சகர் ரணகல இந்தப் பகுதியில் எந்த உத்தரவுகளையும் செய்ய முடியாது.

இனிமேல் பொலிஸார் நீதியாகவும், நியாயமாகவும் நடந்து கொள்வார்கள் என நினைக்கின்றேன். அக்கரைப்பற்றில் முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ள எழுச்சியை கற்கள் எறிவதனாலோ, அராஜகம் செய்வதனாலோ நிறுத்த முடியாது.

நோன்பு திறக்க விடாமல் மக்களை அச்சுறுத்தியது. அக்க்ரைப்பற்று மக்களுக்கு கருப்பு நாளாகும். கடந்த தபால் வாக்களிப்பில் சுமார் அறுபது வீதமானவர்கள் அக்கரைப்பற்றில் முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களித்துள்ளனர். தேர்தல் மோசடிகளைச் செய்து வெற்றிபெறலாம் என்ற அமைச்சரின் ஜம்பம் இனிமேல் பலிக்காது. அக்கரைப்பற்றில் விசேட கவனம் செலுத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். தொடர்ந்தும் அரசினதும் அமைச்சர்களதும் அட்டகாசத்தை முஸ்லிம் காங்கிரஸ் பார்த்துக்கொண்டிருக்காது. ஜனநாயக ரீதியாகப் பதிலடி கொடுக்கும்- என்றார்.

## இன்று துக்கதினமே

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

துக்கதினம் அனுஷ்டிக்குமாறு அரசு அறிவித்துள்ளது.

இன்று நாட்டிலுள்ள அனைத்து மதுபான சாலைகளும் மூடப்பட்டிருக்கும். எனினும் பாடசாலைகள் மற்றும் அரச திணைக்களங்கள் என்பன வழமைபோல இயங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ந)

## நாடு திரும்பும்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அகதிகள் இப்போதும் தமிழகத்தில் உள்ளனர். அவர்களில் 68 ஆயிரம் பேர் இந்திய அரசால் பராமரிக்கப்படும் 112 முகாம்களில் தங்கியுள்ளனர். அத்துடன் அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் 5 ஆயிரம் பேர்வரையில் மீண்டும் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர். இப்போது இலங்கையில் போர் முடிவுக்கு வந்துவிட்டதால், முகாம் வாழ்க்கையை உதறிவிட்டு மீண்டும் தாய்நாட்டுக்கு வர ஈழ அகதிகள் விரும்புகின்றனர். ஆனாலும் தாம் சட்டவிரோதமாக இந்தியாவுக்குச் சென்றதால் மீண்டும் நாடுதிரும்பும் போது ஏதாவது பிரச்சினைகளை சந்திக்க நேரிடுமோ என்ற அச்சம் அவர்களிடத்தில் உள்ளது. அதனாலேயே மீளத் திரும்பும் போது அவர்கள் சிறுசிறு குழுக்களாக வருகின்றனர். ஏனையோர் அரசால் தண்டிக்கப்படக் கூடும் அல்லது பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்தில், இலங்கைக்கு திரும்புவதற்கு விருப்பமிருந்தும் தாய்நாட்டுக்கு வர தயங்குகின்றனர்.

இத்தகைய அச்சம் அவசியமற்ற ஒன்று. இந்திய அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கை மக்கள் தங்களுடைய தாய்நாட்டுக்குத் திரும்பும்போது, அதனை பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து எனது அமைச்சு வரவேற்கும். அவர்களுக்கு எதுவித இடையூறுகளும் இங்கு இருக்கப்போவதில்லை - என்றார்.

(ந-10)

## சட்டப்படி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பவர்களுக்கு மாத்திரமே புகலிடம் வழங்க ஆஸி அரசு தயாராக உள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

அதற்கமைய சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களை தடுத்து நிறுத்தும் நோக்கில் நாடாளுமன்றில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

எனவே, ஆஸியில் குடியுரிமையினைப் பெற விரும்புபவர்கள் உரிய முறையில் விண்ணப்பம் செய்து ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோருவோருக்கு தொடர்ந்தும் வாய்ப்பளிக்கத் தயார் நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது சட்டவிரோதமான முறையில் பாதுகாப்பற்ற கடற்பயணங்களை தடுத்து நிறுத்துவதற்கு உலகின் அனைத்து நாடுகளும் முனைப்பு காட்ட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் நாட்டுக்குள் பிரவேசிக்கும் புகலிடக் கோரிக்கையாளர்கள் பபுவா, நியூகினியா மற்றும் நெரு தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என கிறிஸ் போவுன் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாக்குறுதி..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

விதிக்கப்படாத நிலைமையும் காணப்படுகிறது. இதனால் தொடர்ந்தும் இதுபோன்ற குற்றங்கள் நீடித்துச் செல்கின்றன. போர் முடிவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் இன்னமும் அங்கு மனித உரிமை மீறல்கள் தொடரவே செய்கின்றன. பலவந்தமான ஆள்கடத்தல்கள், கைது செய்யப்பட்டுதடுத்து வைக்கப்பட்ட நிலையில் கொலை செய்யப்படுதல் போன்ற பாரதூரமான குற்றங்கள் சர்வசாதாரணமாக நடைபெற்றுவருகின்றன.

சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விரிவான விசாரணைகளை நடத்தி குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டியது அவசியமானது. இத்தகைய தண்டனைகள் மூலமே தொடர்ந்தும் மனித உரிமைகள் மீறப்படாமல் தடுக்க முடியும். ஆனால் அரசு இந்த விடயத்தில் மெத்தனப் போக்குடனேயே செயற்படுகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான இலங்கை அரசின் தேசிய செயற்திட்டம் திருப்திகரமாக அமையவில்லை.

இலங்கை சர்வதேசத்துக்கு வழங்கிவரும் உறுதி மொழிகளையும், வாக்குறுதிகளையும் ஏற்றுக் கொள்வதைக் காட்டிலும் நீதியான தீர்வுத் திட்டம் எட்டப்படுவதை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் இலங்கையை வலிறுத்த வேண்டும். அதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் - என்றுள்ளது.

(ந-10)

## இலங்கைக்கு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

முயற்சிகளில் ரவிநாத் ஆரியசிங்க இப்போதே தீவிரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளார். கடந்த கூட்டத் தொடரில் அமைச்சர்களின் உறுதுணை இருந்தபோதும் கூட இலங்கை தீர்மானத்தைத் தடுப்பதில் தோல்வியைச் சந்தித்திருந்தது. இப்போது ரவிநாத் ஆரியசிங்க தனித்தே இந்தச் சவாலைச் சந்திக்க வேண்டியுள்ளது.

இதனால் அவர் கடந்த ஐந்து வாரங்களாக ஜெனிவாவில் உள்ள பல்வேறு நாடுகளின் வதிவிடப் பிரதிநிதிகளைத் தொடர்ச்சியாக சந்தித்துப் பேசி வருகிறார்.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் உள்ளிட்ட 50 நாடுகளின் பிரதிநிதிகளை அவர் சந்தித்துப் பேசியுள்ளார். கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவு அளித்த நாடுகளின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேசியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ந-10)

## அகதிகளைத்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அங்குள்ள ஈழத் தமிழர்களை அனுப்பி வருவது வாடிக்கையான ஒன்றாகிவிட்டது. இந்தியாவை சுற்றியுள்ள அண்டை நாடுகளால் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து எப்போதும் உண்டு.

ஜம்மு காஷ்மீரிலும் சர்வதேச எல்லைப் பகுதியிலும் தீவிரவாதிகளை ஊடுருவச் செய்வதில் பாகிஸ்தான் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவின் நிலைத்த தன்மையை சீர்குலையச் செய்வதும் தீவிரவாதத்தை உயிர்ப்போடு வைத்திருப்பதும்தான் பாகிஸ்தானின் திட்டம்.

சீனாவைப் பொறுத்தவரை இந்தியாவுக்கு அது நேரடி அச்சுறுத்தல் விடுக்கக்கூடிய ஒரு நாடாகும். அணு ஆயுதங்கள் மூலம் இந்தியாவை சீனா மிரட்டுகிறது. வங்கதேசத்தை பொறுத்தவரை வடகிழக்கு மாநில தீவிரவாத குழுக்களுக்கு முகாம் அமைக்க இடம் கொடுத்து அங்கிருந்து தீவிரவாதிகளை எல்லை கடக்க வைக்கிறது. இதைமட்டுமின்றி வங்கதேசத்தை ஊடுருவச் செய்து ஆயுதவழியற்ற இன மோதலையும் வங்கதேசம் ஊக்குவித்து வருகிறது. அசாம் இப்பொழுது பற்றி எரிய இதுவே காரணம்.

இதேபோல்தான் இலங்கையும். தமிழர்களை அகதிகளாக்கி இந்தியாவின் அரசியலில் குழப்பத்தை தொடர்ந்து உருவாக்கி வருகிறது. வங்கதேசம் சக்மா அகதிகளை அனுப்பியது போல் இலங்கையும் ஈழத் தமிழர்களை அனுப்ப வருவது வாடிக்கையான ஒன்றாகி விட்டது. இத்தகைய அகதிகளால் இந்தியாவின் அரசியல் நிலையில் தொடர்ந்தும் குழப்பங்களும், கட்சிகளுக்கு இடையிலான பேதங்களும் ஏற்பட்டு வருகின்றன. இதுவே இலங்கையின் நோக்கமும் கூட. இந்தியாவைக் குழப்பி அதில் குளிர்காய இலங்கை எண்ணுகிறது என்று அதில் கூறியுள்ளார்.

## அரசின் சீன மோகத்தால்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஏற்படுத்தும்.''- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர நேற்றுத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலானஉறவு வரலாற்றுக் காலம்முதல் இருந்து வருகின்றது. எனினும், நமது நாட்டுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு அவ்வாறானதல்ல. அது மிகவும் பழைமையானது.

நாம் விரும்பியோ அல்லது விரும்பாமலோ இந்தியாவுடன் தொடர்பு கொள்ளவேண்டும். ஏனெனில், இந்தியா எமது அயல்நாடு. அதுமட்டுமல்ல, அது பொருளாதாரம், பாதுகாப்பு என்பவற்றிலும் நம்மை விடப் பன்மடங்கு செல்வாக்குடைய நாடு. இந்தியாவைக் கோபத்துக்குள்ளாக்கி நாம் எமது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. அது எமது நாட்டின் இறைமைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

தற்போதைய மஹிந்த அரசோ சீனாவுடன் உறவுகளைப் பலப்படுத்தி வருகின்றது. இதனால் இந்தியாவுக்கும் நமக்கும் இடையிலான உறவில் சிறு விரிசல்கள் ஏற்பட்டு வருகின்றன. எந்த ஒரு நாடும் இன்னுமொரு நாட்டைக் கட்டிப்பிடித்து உறவுகொண்டு, ஏனைய நாடுகளுடன் விரோதமாகச் செயற்பட முடியாது.வரலாற்றுக் காலம் முதல் நமது நாட்டின் ஆட்சியாளர்களின் காலத்தில் சர்வதேச நாடுகள் அனைத்தினதும் கதவுகள் எமக்காகத் திறந்துவைக்கப் பட்டிருந்தன. அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா என உலகிலுள்ள எல்லா நாடுகளுடனும் நாம் சுதந்திரமாகத் தொடர்புகொண்டிருந்தோம்.

ஆனால், மஹிந்த அரசோ ஒரு சில நாடுகளுடன் ஒட்டி உறவாடிக்கொண்டு ஏனைய நாடுகளின் உறவில் விரிசலை ஏற்படுத்தி வருகின்றது. குறிப்பாக, எமது அயல் நாடான இந்தியாவின் உறவுகளிலும் விரிசல்கள் ஏற்பட்டு வருகின்றன.

இந்தியாவைக் கோபத்துக்குள்ளாக்கி அதனுடன் விரோதத்தை ஏற்படுத்திக் கொண்டு நாம் எமது நாட்டின் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது. இந்தியா உட்பட அனைத்து நாடுகளையும் நாம் அரவணைத்துச் செயற்பட வேண்டும். அதுவே நமக்கும் நமது நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்பு - என்றார்.

## ஆஸி. படகு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளன. இதனால் இப்போது இத்தகைய சட்டவிரோத ஆள்கடத் தல்காரர்கள் வடக்கு கரையை மையமாகக் கொண்டு படகுப் பயணங் களை ஆரம்பித்துள்ளனர். இத்தகைய படகுகள் அண்மைக் காலத்தில் கடற்படையினரால் பிடிக்கப் பட்டு, அதில் பயணித்தவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எனவே இனிவரும் காலங் களில் வடக்குக் கடற்பரப்பில் தீவிர கண்காணிப்பு நடவடிக் கையில் ஈடுபடுவதன் மூலம், புகலிடக் கோரிக்கையாளர்களின் சட்டவிரோதப் பயணங்களைதடுத்து நிறுத்த கடற்படை முடிவுசெய் துள்ளது. மேலும் நாட்டின் அனைத்து கடல் பிரதேசங்களையும் உள் ளடக்கும் வகையில் விசேட கண் காணிப்பு பணிகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. என்று கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

(ந-10)

## மாகாண..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

என நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன நேற்றுத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மக்களின் அரசியல் தீர்வுப் பிரச்சினைக்கு ஆயுத அடக்குமுறை மூலம் ஒரு பகுதித் தீர்வை வழங்கிவிட்டோம் என அமைச்சரொருவர் கூறியிருந்தார். ஆம், யுத்த காலத்தில் ஆயுத அடக்குமுறையின் மூலமாக ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றழித்தும் தற்போது இராணுவ அடக்குமுறையுடன் கூடிய ஆட்சியை நிலைநிறுத்தியும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை அரசு வழங்குகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற பொது எதிர்க் கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மூன்று மாகாண சபைத் தேர்தல் களங்களிலும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த தேர்தல்கள் ஆணையாளரே நேரடியாகக் களத்தில் இறங்கியுள்ளார். தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெறும் அரச நிறுவனங்களை 'சீல்' வைத்துள்ளார். அத்துடன், விவசாயிகள், ஏனைய தொழிலாளிகளுக்கும் உபகரணங்கள் பகிர்ந்தளிப்பதையும் தடுத்து நிறுத்தியுள்ளார்.

மேலும் இத் தேர்தல்காலத்தில் அரசால் வழங்கப்படும் தொழில் வாய்ப்புகள், நடத்தப்படும் நேர்முகப் பரீட்சைகள் முதலான தேர்தல் சட்டங்களை மீறும் அனைத்து நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்தியுள்ளார்.

இவ்வாறு மூன்று மாகாணத் தேர்தல் களத்திலும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த தேர்தல்கள் ஆணையாளரே நேரடியாகக் களத்தில் குதித்துள்ளார்.

அவரின் இந்த நடவடிக்கைகளினூடாக இந்தத் தேர்தல் மஹிந்த அரசினூடாக நடத்தப்படும் மோசடியான தேர்தல் என்பதை நிரூபித்துள்ளார். இதற்கு அவரே சாட்சி.

வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்காக நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அரசு அமுல்படுத்த வேண்டும். ஆனால் அதைக்கூட நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசு தயாராக இல்லை. மாறாக, வடக்குப் பகுதியில் இராணுவ ஆட்சியைப் பலப்படுத்தி வருகின்றது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வடக்கில் வசந்தம் வீசுவதற்கு...

வடக்கில் வசந்தம்; கிழக்கின் உதயம்.

போர் முடிவுற்ற பின்னர், வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையை நிலத்திலிருந்து வானத்துக்கு உயர்த்துவதற்கு தான் உறுதி பூண்டுள்ளது என்று -

தாளம் தட்டி, மேளம் கொட்டி அரசு உச்சத் தொனியில் ஒலித்த அழகுத் தமிழ் வாசகங்கள் மேற்கண்டவை என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

போருக்கு முந்திய சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரே கல்வியிலும் சரி, தொழில் வாய்ப்பிலும் சரி, விவசாயம், மீன்பிடி மற்றும் கைத்தொழில் துறைகளிலும் சரி, பொருளாதார வளர்ச்சிக்கான உட்கட்டுமான உயர்விலும் சரி, தமிழ் மக்களின் வாழ்வாதாரத்துறைகளின் சகல அலகுகள் குறித்தும் -

அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த கொழும்பு அரசுகள், மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே செயற்பட்டன. சரியாகக் கூறுவதானால் பாகுபாட்டுடனும் பாரபட்சத்துடனும் வேற்றுமை மிகுந்துமே செயற்பட்டன என்பது அழிக்க முடியாத வரலாறு.

பல ஆண்டுகளாகப் பல துறைகளிலும் பல வகைகளாலும் தலை நிமிர்த்த முடியாத, இருள் சூழ்ந்த வாழ்வு நிலையை அனுபவித்த தமிழ் மக்கள், வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் ஆகிய அழகு தமிழ் மகுட வாசகங்களையும் கேட்டு தமது வாழ்வில் சிறு ஒளிக்கீற்று தெரியக்கூடும் என்று நினைத்தார்கள்; எதிர்பார்த்தார்கள். எனினும் எள்ளளவே நம்பினார்கள். தமது கடந்த கால அனுபவங்களை அவர்கள் இலகுவில் மறக்கவில்லை; மறக்கத்தான் முடியுமா?

ஆனால், அரசால் உறுதி அளிக்கப்பட்டவற்றில் கடந்த மூன்று வருடங்களில், மூன்றில் ஒரு பங்கேனும் கைக்கு வராத நிலையில் உள்ளார்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல என்ற நிலையே எஞ்சிக் கிடக்கின்றது.

இத்தகைய பீடிகையும் நீட்டி முழக்கலும் ஏன் என்று எண்ணாதீர்கள்.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு விவசாயிகளுக்கும் ஏனைய சாராருக்கும் நிவாரணம் எதுவும் கிடைக்காமல் போகும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது! வறட்சியும் வெள்ளப் பெருக்கும் இயற்கையின் கொடுப்பனவுகள். அவற்றை இடம்பார்த்து, மக்களிடையே பேதம் பார்த்துக் காலதேவன் வழங்குவதில்லை.

ஆனால், வடக்கின் வசந்தம் 'லேபலை' ஒட்டிச் செயற்படும் இந் நாட்டு அரசு, வறட்சி நிவாரணத்தைப் பெறுவதிலும் ஒதுக்கீடு செய்வதிலும் பாரபட்சம் காட்டியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

நாட்டின் வறண்ட மாவட்டங்களாக இனங்காணப்பட்ட மொத்தம் பன்னிரண்டு மாவட்டங்களில், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களுக்கு வறட்சி நிவாரணம் கிடைக்காது என்பதற்கான அறிகுறிகள் வெளிப்பட்டுள்ளன.

அதாவது வறட்சியால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்காமல் போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. அந்த ஆபத்தை உருவாக்கியுள்ள நடுநாயகர்கள், கொழும்பு அரசாங்கத்தினரும் அதன் அதிகாரிகளுமே ஆவர்.

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் கடும் வறட்சியால் விவசாயம் செத்துக் கிடப்பது மட்டுமன்றி, மக்கள் குடிதண்ணீர் இல்லாமல், தவித்த வாய்க்குத் தண்ணீர் கிடைக்காமல், அல்லாடுகிறர்கள்!

உள்ளூர் அதிகாரிகளின் கணிப்பீடுகளின் பிரகாரம், வடக்கில் ஒரு லட்சத்து அறுபத்திரண்டாயிரம் மக்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென்பகுதி மாவட்டங்களைச் சேர்ந்த 27 லட்சம் பாதிப்புற்ற மக்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் 250 கோடி ரூபா அவசர நிதி உதவியைக் கேட்டுள்ளது அரசாங்கம். ஆனால் வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களை முற்றிலும் மறந்து போயிற்று அது. அவர்களின் இல்லாமைகள் மற்றும் பல்வேறு வகைப்பட்ட துன்பங்கள் தெற்கு அதிகாரிகளின் கண்களுக்குத் தெரிவதில்லைப் போலும்! காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாகத் தெரிவது இயல்பன்றோ.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களின் கஷ்டங்கள், துன்பங்கள் அரசாங்கத்துக்கும் அதன் அதிகாரிகளுக்கும் ஒன்றும் தெரியாதவை அல்ல. அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய அனைத்து வரிகளையும் ஈவு சோர்வு இல்லாமல், கண்டிப்புடன் அறவிடும் அரசு, தமிழர்களுக்கு உதவ வேண்டிய மிக ஆபத்தான வேளைகளிலும் கைகொடுக்க முன்வருவதாக இல்லையே. இதற்குப் பெயர்தான் பெரும்பான்மையினர் ஜனநாயகமோ!

வறட்சியால் பாதிக்கப்பட்ட ஏழு மாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள மக்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் அவசரகால நிதி உதவிக் கோரிக்கையை முன்வைத்த அரசும் அதன் அதிகாரிகளும், வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் பாதிப்புற்றுள்ள ஒரு லட்சத்து அறுபத்திரண்டாயிரம் தமிழ் மக்களின் பரிதாப நிலையை வசதியாக மறந்து விட்டனர்!

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். இது போன்றே தமிழ் மக்கள் மீதான பாரபட்சமும், புறம் ஒதுக்கலும் தட்டிக்கேட்க எவருமில்லை என்ற தற்துணிவுடன் அரசாங்கத்தாலும் அதன் உயர் அதிகாரிகளாலும் பல தருணங்களிலும் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

இத்தகைய உதாரணங்கள் எடுத்தியம்புவது என்ன? தமிழ் மக்கள் தமக்குச் சொந்தமான உரிமைகளையும் அதிகாரங்களையும் அனுபவிப்பதற்கு, அதற்கு வகை செய்யக் கூடிய சுயாட்சி உரிமைகள் அவசியமானவை, இன்றியமையாதவை என்பதனையே அவை ஊன்றித் தொட்டுக் காட்டுகின்றன.

இலங்கையின் பெரும்பான்மை இன அரசுக்கும், அதிகாரிகளுக்கும், மக்களுக்கும், தமிழர்களும் மனிதர்களே, அவர்களுக்குள்ள (ஜனநாயக) உரிமைகளை வழங்கிச் சகோதரத்துவ உணர்வுடன் வாழவேண்டும் என்ற மனித நேயம், அவர்தம் மனங்களை எட்டியும் பார்க்கமாட்டா என்பதனையே வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது!

இந்த இலட்சணத்தில், வடக்கில் வசந்தம் வீசவும் கிழக்கில் சமத்துவம் உதயமாகவும் எத்தனை ஆண்டுகள் கழியப்போகின்றன? வர்ணம் பூசிய வார்த்தைகள், வாயால் உச்சரிப்பதற்குக் கவர்ச்சியாக, இனிப்பாக இருக்கலாம். ஆனால் அவற்றைச் செயல்வடிவத்தில் காண்பதற்கு நல்ல மனம், குறுகிய நோக்கங்களைத் தணிக்கவல்ல இதயசுத்தியான, தயாள தாராள (Liberal) செயற்பாடுகள் தேவை.

இந்த உண்மையை தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் உணர்வார்கள் என்று கொள்வதற்கு, நம்புவதற்கு எந்த வகையான சமிக்ஞையையும் அடையாளப்படுத்தலையும் காணமுடியவில்லை, அவர்கள் தங்களது இந்த நிலைப்பாட்டில் இருந்து மாறிப்போவதற்குத் தமது மக்களை அனுமதிப்பார்கள் என்பதற்கான சமிக்ஞையையும் காணோம்.



# பாகிஸ்தான் இராணுவத்துக்கும் மத்திய அரசு பயிற்சி அளிக்குமா?

## இப்படி கேள்வி எழுப்புகிறார் பழ.நெடுமாறன்

மதுரை, செப். 3

பாகிஸ்தான் இராணுவத்துக்கும் மத்திய அரசு பயிற்சி அளிக்குமா என்று உலகத் தமிழர் பேரவை அமைப்புத் தலைவர் பழ.நெடுமாறன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிப்பதற்கு, சார்க் உடன்படிக்கையை மத்திய அரசு காரணமாகக் கூறுவது குறித்தே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் எந்தப் பகுதியிலும் இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தி இந் திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மதுரை தலைமை தபால் அலுவலகம் அருகே நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், கலந்து கொண்டு நெடுமாறன் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிப்பதை சார்க் நாடுகளின் உடன்படிக்கையைக் காரணமாகக் கூறுகின்றனர். அதே சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் மற்றொரு நாடான பாகிஸ்தான் இராணுவத்துக்கு இந்தியா பயிற்சி அளிக்குமா என்ற கேள்வி எழுகிறது. இந்தியாவின் எதிரி நாடான பாகிஸ்தானுக்குப் பயிற்சி அளித்தால், நம் மீது நடத்தும் தாக்குதலுக்குத்தான் பயன்படுத்துவார்கள் என்பதால், அதை மறுத்து விடுவார்கள்.

அதேபோல, இலங்கைக்கு அளிக்கப்படும் இராணுவப் பயிற்சி, அங்குள்ள தமிழர்களை ஒடுக்குவதற்கே பயன்படுத்தப்படும் என்பது தெரிந்தும் மத்திய அரசு பயிற்சி அளிப்பது கண்டனத்துக்குரியது. தமிழகத்தையும், தமிழக மக்களின் உணர்வுகளையும் புண்படுத்தும் வகையிலேயே மத்திய அரசின் செயற்பாடு இருக்கிறது - என்றார்.

# வடக்கில் அரச ஊழியர் சம்பளத்துக்கு வருடாந்தம் ரூ.670 மில்லியன் தேவை

### உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய பிரதி ஆணையாளர் தகவல்



யாழ்ப்பாணம், செப்.3

வடமாகாணத்தில் வருடந்தோறும் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க 670 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய பிரதி ஆணையாளர் பா.சிவாஜி தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் சிறிய நடுத்தர வியாபார வங்கிப் பிரிவால் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு திறன் அபிவிருத்திக் கருத்தரங்கு நேற்று யாழ்.நகரில் தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கருத்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வருமான வரி செலுத்துபவர்களுக்கு வங்கிகளில் முன்னுரிமை அடிப்படையில் கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. எமது பிரதேசத்தில் பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்களை விட கீழ் நிலையில் உள்ளவர்களே வருமான வரி செலுத்துபவர்களாக உள்ளனர். தற்போது 50 லட்சத்துக்கு மேல் மாதாந்த வருமானம் பெறுபவர்கள் தமது வருமானத்தில் 10 வீதத்தை வரியாகச் செலுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது.

எனினும் பொருளாதார மாற்றத்துக்கு ஏற்றால் போல் மக்களின் தேவையும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வடமாகாணத்தில் வருடந்தோறும் 670 மில்லியன் ரூபா நிதி அரச ஊழியர்களுக்கு மட்டும் தேவைப்படுகின்றது. இந்த நிலையில் ஏனைய மருத்துவம், மின்சாரம், குடி தண்ணீர் என அடிப்படை தேவைகளுக்கு நிதி அதிகமாகத் தேவைப்படுவதால் வருமான வரி செலுத்தத் தகுதியுடைய அனைவரும் வரி செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.- என்றார்.

இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.எஸ்.மகேந்திரசிங்கி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் ஓய்வு பெற்ற பொது முகாமையாளர் பி.வி.பத்திரன, வவுனியா மாவட்ட ஊழியர் உதவி ஆணையாளர் திருமதி ல.ஆனந்த நடராஜா, யாழ். மத்திய சுற்றாடல் அதிகார சபை உதவிப் பணிப்பாளர் திருமதி விஜிதா சத்தியகுமார் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். வடமாகாணத்தைச் சேர்ந்த சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர். (ம-14)

# பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கத்துக்கு போட்டியின்றி உறுப்பினர் தெரிவாகினர்

பளை, செப்.3

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 12 வருடங்களின் பின்னர் நடத்தப்பட்ட கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவுக் கூட்டங்களில் போட்டியின்றி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் பளை, மாசார், முள்ளிப்பற்று, சோரன்பற்று, புலோப்பளை, இத்தாவில், முகமாலை, கிளாலி, புலோப்பளை கிழக்கு, அல்லிப்பளை, கச்சார் வெளி, தம்பகாமம், அங்கத்தார் வயல் ஆகிய 14 கிளைகளுக்குமான உறுப்பினர்கள் தெரிவு நேற்று முன்தினம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் அறிவிக்கப்பட்ட நிலையங்களில் நடைபெற்றன.

ஒவ்வொரு நிலையத்திலும் பெரும் எண்ணிக்கையில் உறுப்பினர்கள் கலந்துகொண்டு கிளைக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்தனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டு பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இடம்பெற்ற இடப்பெயர்வின் பின்னர் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்ட 3 பேர் கொண்ட இயக்குநர் சபையே இயங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# விடுதிகளுக்குச் செல்லும் பாதையில் தடுப்புக் கதவு

தென்மராட்சி, செப்.3

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் விடுதிகளுக்குச்செல்லும் பாதையில் தடுப்புக் கதவு அமைக்கப்பட்டுள்ளது.

மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளரால் பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்து பார்வையாளர்கள் மட்டுமன்றி வாகனங்களும் அனுமதியின்றி உள்நுழைவதைத் தடுக்கும் முகமாக மறியல் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# 2014 இல் கண்ணி வெடி அகற்றும் பணிகளை இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு பொறுப்பேற்கும்

கொழும்பு, செப்.3

2014 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து இலங்கையில் கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகளை இலங்கைப் பாதுகாப்பு அமைச்சே மேற்கொள்ளவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் வெளியேறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் போர் முடிந்த பின்னர் கண்ணிவெடி அகற்றும் சர்வதேச நிறுவனங்கள் வடக்கில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித் திருந்தன.

இவற்றில் பெரும்பாலான நிறுவனங்கள் கடந்த ஆண்டின் இறுதியிலிருந்து கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டன.

இருப்பினும் யாழ். மாவட்டத்தில் ஒரு சில நிறுவனங்கள் தொடர்ந்தும் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

யாழ்ப்பாணத்தில் முழுமையாகக் கண்ணிவெடி அகற்றி முடிப்பதற்கு இன்னமும் 10 ஆண்டுகள் வரையில் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி கொழும்பில் உயர்மட்டக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் இலங்கையிலுள்ள தூதரகங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஐ.நா. முகவர் அமைப்புக்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, நிதி வழங்கும் நிறுவனங்கள் என்பன கலந்து கொண்டன.

இதில் 2014 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து இலங்கை பாதுகாப்பு அமைச்சு இலங்கையில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளைத் தாம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.

இலங்கை இராணுவத்தின் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் ஊடாக இதனை மேற்கொள்ளவுள்ளது. இதன் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் இலங்கையிலிருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் காணிகளில் இராணுவ முகாம்கள்

## அதிர்ச்சி, அச்சத்தில் முல்லை மக்கள்

முல்லைத்தீவு,செப்.3

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவ முகாம்கள் விஸ்தரிக்கப்படுவதால் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுப் பறிபோவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் ஆங்காங்கு உள்ள மினிக் காவலரண்கள் அகற்றப்பட்டு பெரியளவிலான இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஒட்டுசுட்டான் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அதனை அண்டிய காணிகள், கற்சிலைமடுவில் சிவன் ஆலய வளாகமும் அதனை அண்டிய மக்களின் காணிகளும், முத்துஐயன்கட்டு தட்டையர் மலைப்பகுதியில் தனியாரின் காணிகளும், புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் சங்க வளாகமும் அதனை அண்டிய காணிகளும், கேப்பாபுலவு மக்களின் இருப்பிடங்களும் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுப் பெரிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் மக்கள் தமது காணிகளை இழந்து வருகின்றனர். மேலும் காணிகள் சுவீகரிக்கப்படும் ஏதுநிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாரம்பரிய தமிழ் மக்களின் பூர்விக இடமான முல்லைத்தீவில் இவ்வாறு பெருமளவு காணிகள் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்படுகின்றமை இங்குள்ள மக்களிடையே பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளன.

மேலும் பெரியளவில் இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்றமை அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க)

## மன்னார் பஸ் தரிப்பிடத்தில் மீண்டும் காடையர் அட்டகாசம்

### பகலில் தலைமறைவு; இரவில் நடமாட்டம்

மன்னார், செப். 3

மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் காடையர்களின் அட்டகாசம் மீண்டும் அதிகரித்துக் காணப்படுவதால் பயணிகள் அச்சமடைந்துள்ளனர்.

சில காலமாக இந்தப் பிரச்சினை தணிந்த நிலையில் காணப்பட்டது. தற்போது மீண்டும் தலைதூக்கியுள்ளதால் இங்குள்ள சமூக ஆர்வலர்களும், பொதுமக்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

மாலை வேளைகளில் பஸ் தரிப்பிடத்துக்கு வரும் காடையர் குழுவினர் அங்கு நிற்கும் பெண்களுக்குத் தொல்லை கொடுக்கின்றனர். இவர்களில் சிலர் ஓட்டோவில் ஏற்றிச் சென்று வீட்டில் விட்டு விடுகிறோமெனக் கூறிப் பெண்களைப் பலவந்தப்படுத்துகின்றனர்.

இத்தகையவர்களில் சிலர் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பாகப் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றனர். இதனால் பகல் வேளைகளில் தலைமறைவாகி விடும் இவர்கள் இரவு நேரங்களில் நடமாடித் திரிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-12)

### ஒளிரும் வாழ்வினால் உதவிகள்

துணுக்காயில் ஒளிரும் வாழ்வு அமைப்பினால் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிகள்வழங்கப்பட்டுவருகின்றன.

இதனடிப்படையில் மாற்றுத் திறனாளிகள் 30 பேருக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலான உதவிகள் துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலனால் வழங்கப்பட்டன.

கடந்த போர் காரணமாகவும் மற்றும் பிறப்பிலேயே அங்கக் குறைபாடுடையவர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகையோருக்கு உதவும் வகையில் ஒளிரும் வாழ்வு அமைப்பு துணுக்காயில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)



செட்டிகுளம் பகுதியில் மக்கள் வங்கியின் 306 ஆவது கிளையை வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர திறந்து வைக்கின்றார். (400)

## போக்குவரத்துச் சீரின்மையால் பாதிப்புறும் பாலமோட்டை மக்கள்

வவுனியா, செப். 3

வவுனியா பாலமோட்டைப் பகுதிக்கான போக்குவரத்து வசதிகள் சீரின்மையால் அந்தப் பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வவுனியா டிப்போ மூலமாகப் பாலமோட்டைப் பகுதிக்கு காலை முதல் மதியம் 2.30 மணி வரை பஸ் சேவை இடம்பெற்று வருகின்றது. இந்தச் சேவையில் ஈடுபடும் பஸ் அடிக்கடி பழுதடைவதாலும், சில வேளைகளில் வேறு பாதைகளுக்கான சேவையில் ஈடுபடுவதாலும் இந்தப் பகுதிக்கான போக்குவரத்துக்கள் தடைப்படுகின்றன.

மிகவும் பின்தங்கியுள்ள மீள்குடியமர்ந்துள்ள பகுதியிலுள்ள இங்குள்ள மக்கள் மாலை நேரத்துக்கான சேவை இடம் பெறாமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இந்தக் கிராமத்தில் போதிய வாகன வசதிகள் எவையும் இல்லை. இதனால் சுமார் 36 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள வவுனியா நகருக்கும், வைத்தியசாலைக்கும் செல்ல முடியாமல் தாம் திண்டாடுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

**மிகவும் பின்தங்கியுள்ள மீள்குடியமர்ந்துள்ள பகுதியிலுள்ள இங்குள்ள மக்கள் மாலை நேரத்துக்கான சேவை இடம் பெறாமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.**

கொந்தங்கன்குளம், கோழியகுளம், சின்னப்பூவரசங்குளம், மகிழங்குளம், கிழவயன்குளம், பாலமோட்டை, இலுப்பைக்குளம், ஊராய்குளம், குஞ்சுக்குளம், தௌவி, மடத்துவிளாங்குளம், கிராய் நெல்வேலி உட்படப் பல பகுதி மக்களும் தமது வவுனியாவுக்கான போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது அல்லலுறுகின்றனர்.

எனவே இந்தப் பகுதிக்கான போக்குவரத்துக்கள் சீராக இடம்பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதோடு பிற்பகல் 2.30 மணியுடன் மட்டுப்படுத்தப்படும் சேவையை மக்களின் நன்மை கருதி மாலை 4.30 மணிவரை நீடிக்குமாறும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-410)

## வாகனத் தரிப்பிடம் அமைக்கப்படாததால் மன்னார் நகரில் நெருக்கடி நிலை

மன்னார், செப். 3

மன்னார் நகரப்பகுதியில் பொது வாகனத்தரிப்பிடமொன்று அமைக்கப்படாததால் வாகன உரிமையாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது போர் ஓய்ந்த சூழ்நிலை நிலவுவதால் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வர்த்தக நோக்குடனும், சுற்றுலாப் பயணிகளாகவும் நூற்றுக்கணக்கானவர்கள் இங்கு வந்து செல்கின்றனர்.

இவர்களைத் தவிர மன்னாரைச் சேர்ந்த மக்களும் தமது தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு நகரத்திற்கு வந்து செல்கின்றனர்.

ஆனால் இவர்கள் தமது வாகனங்களை நிறுத்துவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவர்கள் தற்போது வீதியோரங்களிலும், கடைகளுக்கு முன்பாகவும் தமது வாகனங்களை நிறுத்துகின்றனர். இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதோடு விபத்துக்களும் நிகழ்கின்றன.

ஆனால் நகரசபைப் பணியாளர்கள் வாகனங்களை நிறுத்துவதற்கான கட்டணமாக வாகன உரிமையாளரிடமிருந்து 50 ரூபாவை அறவிட்டு வருகின்றனர். வாகனங்கள் எங்கு நிறுத்தி வைக்கப்பட்டாலும் இந்தக் கட்டணங்கள் அறவிடப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஓட்டோக்கள் பொருள்களை ஏற்றும் பொருட்டு கடைகளுக்கு முன்பாக நிறுத்தப்பட்டாலும் இந்தக் கட்டணம் அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே மன்னார் நகர சபையினர் பொது வாகனத் தரிப்பிடம் ஒன்றை அமைத்து இந்தக் கட்டணத்தை அறவிடுவார்களாயின் தமக்கு மிகவும் வசதியாக இருப்பதுடன் தற்போதைய நெருக்கடியான நிலையும் நீங்குமென மன்னார் வர்த்தகர்களும், வாகன உரிமையாளர்களும் தெரிவித்துள்ளனர். (க-12)

### குறைந்து காணப்படும் விழிப்புணர்வு

அக்கராயன், செப். 3

கிளிநொச்சியில் தொழில் முயற்சிகளைப் பதிவு செய்து அவற்றுக்கான உரிமங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பான விழிப்புணர்வு குறைந்து காணப்படுவதாகத் தொழிற்றுறையைச் சேர்ந்த அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இங்கு சிறிய வர்த்தகத்தி லீடுபடுவோர் தொடக்கம் பெரிய வர்த்தகர்கள் வரை தமக்குரிய தொழில் உரிமங்களைப் பெற்றுக் கொள்வதில் விளக்கமின்மை இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் தொழில் உரிமங்களை உரிய முறையில் பெற்றுக் கொள்வதன் மூலமாகப் பல நன்மைகளைப் பெற முடியுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## காலபோக பயிர்ச் செய்கைக்கான ஆயத்த வேலைகளில் விவசாயிகள்

கிளிநொச்சி, செப். 3

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு காலபோக செய்கையை மேற்கொள்ளும் வகையில் தயார்ப்படுத்தல் வேலைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் தமது பயிர்ச் செய்கை நிலங்களை வேகமாகத் துப்புரவு செய்து பண்படுத்தி வருகின்றனர்.

கடந்த சிறுபோக செய்கைகளை மேற்கொண்ட விவசாயிகள் கடும் வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் கீழ் உள்ள பெரிய மற்றும் சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழும், மானாவாரிச் செய்கை நிலங்களின் கீழும் கடந்த ஆண்டைப் போன்று சுமார் 59 ஆயிரம் ஏக்கருக்கும் மேலான நிலப்பரப்பில் செய்கைகள் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை பருவ மழை ஒழுங்காகப் பெய்து குளங்கள் நிரம்பும் பட்சத்திலேயே இந்த ஆண்டுக்கான காலபோகம் மற்றும் சிறுபோகப் பயிர்ச் செய்கைகள் வெற்றியளிக்குமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மழை பொய்க்குமாயின் தமது நிலை மிக மோசமாக மாறிவிடுமெனவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-6)

## வன்னியில் நிலவும் வறட்சியால் பல்வேறு மட்டத்திலும் பாதிப்புக்கள்

### பயிர் அழிவு; கால்நடைகள் எலும்பும் தோலுமாக

வேப்பங்குளம், செப். 3

வவுனியாவில் தொடர்ந்து நிலவிவரும் கடும் வறட்சி காரணமாக குடிதண்ணீரின்றிக் கால்நடைகள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள குளங்கள் வற்றியும், மேய்ச்சல் நிலப் பகுதிகள் காய்ந்தும் காணப்படுவதால் கால்நடைகள் போதியளவு உணவு, குடிதண்ணீர் கிடைக்காத நிலையில் உடல் மெலிந்து எலும்பும் தோலுமாக அலைந்து திரிவதைக் காணமுடிகின்றது.

இதேவேளை குளங்களின் நீர் வற்றியதால் அவற்றிலிருந்த மீன்களும் இறந்துள்ளன. இதனால் துர்நாற்றமும் வீசிக் கொண்டிருக்கின்றது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கில் நிலவும் கடும் வறட்சி மற்றும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு தொடர்பாக மக்கள் குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பொலிஸாரின் கூட்டத்தின் போதே மக்கள் குரல் எழுப்பியுள்ளனர்.

இதேவேளை மாந்தை கிழக்கில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு பெரியளவில் காணப்படும் நான்கு கிராமங்களுக்கு மேலதிக நிதியை முல்லைத்தீவு அரச அதிபர் ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாகச் சுமார் ஆயிரத்து 541 ஏக்கர் நிலப் பரப்பில் செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் அழிவடைந்துள்ளன என்று கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

இதில் ஆயிரத்து 376 ஏக்கர் நெற்பயிர்களும் 165 ஏக்கர் மேட்டு நிலப் பயிர்களும் அழிவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. சபை தேர்தல்; இலங்கை போட்டியிடா

கொழும்பு, செப். 3

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆசனத்திற்காக இம்முறை போட்டியிடப் போவதில்லை என இலங்கை அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் நவம்பர் மாதம் நியூயோர்க்கில் தேர்தல் நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் 47 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. 18ஆசனங்களுக்காக வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

இலங்கைக்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட காரணத்தினால் கடந்த 2008ம் ஆண்டு நடைபெற்ற வாக்கெடுப்பில் இலங்கை ஆசனமொன்றுக்காக போட்டியிட்ட போதிலும், தோல்வியைத் தழுவியது.

இம்முறை ஆசனத்திற்காக போட்டியிடுவதில்லை என தீர்மானித்துள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (16)


**தேவை**

யாழ். நகரிலுள்ள தொழில் நிறுவனம் ஒன்றில் பணிபுரியக் கூடியவர்கள் தேவை.
(பெண்கள்)
(பயிலுநர்களும்சேர்க்கப்படுவர்)
0772174751 (22477)(3.14)

**தேவை**

O/L படிக்கும் பிள்ளைக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் கற்ப்பிக்கக்கூடிய ஆசிரியை தேவை.
0718474325 (22476)(3.14)


# அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் முல்லை மக்கள் முற்றாக புறக்கணிப்பு

**குறிப்பாக வீதி அபிவிருத்தி வேலைகள், குளங்களைப் புனரமைக்கும் வேலைகள் என்பன அதிகளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களே ஒப்பந்தங்களைப் பெற்று ஈடுபட்டு வருகின்றனர்.**

முல்லைத்தீவு,செப்.3

முல்லைத்தீவில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளின்போது இங்குள்ள மக்கள் முற்றாகத் தவிர்க்கப்படுவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. போரினால் சின்னாபின்னமாக்கப்பட்டுச் சீரழிந்த நிலையிலுள்ள முல்லைத்தீவில் சில அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வீதி அபிவிருத்தி வேலைகள், குளங்களைப் புனரமைக்கும் வேலைகள் என்பன அதிகளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் தென்னிலங்கையைச்சேர்ந்தவர்களே ஒப்பந்தங்களைப் பெற்று ஈடுபட்டு வருகின்றனர். தொழிலாளர்களும் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். மேலும் இந்த வேலைகளில் ஈடுபடுத்தப்படும் இயந்திரங்கள் யாவும் தென்பகுதியிலிருந்தே எடுத்து வரப்படுகின்றன.

இதனால் இங்குள்ள மக்கள் இங்கு நடைபெறும் எந்தவிதமான அபிவிருத்தித் திட்டங்களிலும் பங்கு கொள்ள முடியாது தொழிலின்றி வாழுகின்றனர்.

போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுத் தமது சொத்துக்கள் யாவற்றையும் இழந்து பெரும் துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் இங்குள்ள மக்கள் தமது அன்றாடச் சீவியத்தைக் கொண்டு செல்வதில் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். தொழில் வாய்ப்புக்கள் இல்லாமையே இதற்கான முக்கிய காரணமாகும்.

ஆனால் இங்கு இடம்பெற்று வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களில் இவர்கள் இணைத்துக் கொள்ளப்படாது வேறு இடங்களைச் சேர்ந்தவர்கள் தொழில் புரிந்து வருகின்றமை இவர்களுக்குப் பெரும் மனக் கவலையையும் விசனத்தையும் அளித்துள்ளது.

இதேவேளை, இங்கு இடம்பெறும் வேலைத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் இயந்திரங்கள் கூட தென்பகுதியிலிருந்தே எடுத்து வரப்படுகின்றன. இதனால் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் கடனடிப்படையில் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தவர்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமையைக் காணமுடிகின்றது.

மேலும் லொறிகள், உழவு இயந்திரங்கள் மூலமாக மேற்கொள்ளப்படும் பணிகளை யாவது தமக்கு வழங்குமாறு இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் கடும் வறட்சியும் இவர்களைப் பாதித்துள்ளது. எனவே இந்த மாவட்டத்தில் இடம்பெற்று வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் இங்குள்ள மக்களுக்குத் தொழில் வாய்ப்பை வழங்குவதோடு இயந்திரங்களுக்கும் சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகிறது. (க-500)


கணபதிதுணை

**தெல்லிப்பழை - பன்னாலை**
**திருவருள் மிகு வரத்தலம்**
**கற்பக விநாயகர் தேவஸ்தான மகோற்சவ விஞ்ஞாபனம்**
**நந்தன வருடம் - 2012**
**விசேட உற்சவ தினங்கள்**

ஆரம்பம்: 04.09.2012 செவ்வாய்க்கிழமை நிறைவு: 15.09.2012 சனிக்கிழமை

| | | |
|---|---|---|
| 04.09.2012 | செவ்வாய் - முற்பகல் | 10.30 மணி கொடியேற்றம் |
| 11.09.2012 | செவ்வாய் - பிற்பகல் | 3.00 மணி வேட்டைத்திருவிழா |
| 13.09.2012 | வியாழன் - இரவு | 8.00 மணி சப்பரம் |
| 14.09.2012 | வெள்ளி - முற்பகல் | 9.00 இரதோற்சவம் |
| 15.09.2012 | சனி - முற்பகல் | 10.00 தீர்த்தம் |
| 16.09.2012 | ஞாயிறு - முற்பகல் | 9.00 பிராயச்சித்த அபிஷேகம் |
| | பிற்பகல் | 3.00 மணி வைரவர் பொங்கல் |

விஷேட உற்சவம் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 8.30 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் பூஜை ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவம் நடைபெறும்

"அடியார்கள் வருக ஐங்கரன் அருள் பெறுக"

பிரம்மஸ்ரீ ம. மகேந்திரசர்மா
ஆதீன கர்த்தா வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்.

பன்னாலை, தெல்லிப்பழை. (சி/22470) (45.6.7)



**CIMA @ MCS** சாதனைச் சித்திகள்
Foundation Leval 100%
F.M(67%), F.O(80%),P.O(70%),E.O(66%)
Schol. UK Reg Free 15500/=
New Batches
Weekdays Wed 5th 9 AM (Fast track)
Week End Sun 9th 8 AM
SMS <your name> <schol. CIMA> to 0772395895
Supported By UNDP/JRRP
324,Palaly Road, Parameswara Junction, Jaffna.


# மட்டு. விமான நிலையத்துக்கு 52 வருடங்களின் பின் 'விழவு'

மட்டக்களப்பு,செப்.3

மட்டக்களப்பு விமான நிலை யத்துக்கான அபிவிருத்திப் பணிகள் இன்று திங்கட்கிழமை ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன என்று மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான எம். எல்ஏ.எம்.ஹிஸ் புல்லாஹ் தெரிவித்தார்.

இதற்கென 100 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாக அவர் கூறினார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மட்டக்களப்பு விமான நிலையத்தின் விமான ஓடுபாதைக்கான அடிக்கல்லை நட்டுவைப்பார் என்று அவர் கூறினார்.

1956ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்ட மட்டக்களப்பு விமான நிலையம் 52 வருடங்களின் பின் னர் முதல் தடவையாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)


**ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சி நெறி**

உலகிலுள்ள எல்லாக் குழந்தைகளும் 2-4 வயதிற்குள் தம் தாய் மொழியைப் பேசப் பழகுகின்றன. 2 வருடத்திற்குள் குழந்தைகள் ஒரு மொழியைப் பேசப் பழகுகையில், பெரியவர்களான உங்களால் இன்றுவரை ஏன் ஆங்கிலத்தைப் பேசப் பழக முடியவில்லை?

இலக்கண வழியில் ஆங்கிலத்தைப் படித்தமையே காரணமாகும்.

எமது பயிற்சி வகுப்புக்களில் தமிழ்தொடர்பற்ற ஒரு வழியில் (method) மனதை ஆங்கிலத்தில் மட்டும்சிந்திக்க வைத்து அதை மற்றைய மாணவர்களுடன் பேச விடுவதன் மூலம் மிக எளிதாகவே எல்லோராலும் ஆங்கிலத்தில் பேசப் பயிற்சியளிக்கப்படுகிறது. இதன் மூலம் ஆங்கிலம் மனதிற்கு இயல்பாக்கப்படுகிறது.

எமது இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்பும், இம்முறை A/L எடுத்த மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், தொழில் புரிவோர், O/L எடுக்கவுள்ளோர் மற்றும் 12 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் 09.09.2012 இற்கு முன் நேரடியாகப் பதிவுகளை மேற்கொள்ளவும்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I- 08-10 பிரிவு III- 01-03
பிரிவு II- 10-12 பிரிவு IV- 03-05

வாரநாள் பிரிவுகள்(திங்கள், புதன்)
பிரிவு I- 09-11 பிரிவு III- 03-05
பிரிவு II- 11-01

பயிற்சி நெறி முடிவில் Diploma Certificate வழங்கப்படும்

SAAMSON ENGLISH (சி/3067)(9.14) 279, ஆஸ்பத்திரி பின்புறம் யாழ்ப்பாணம் TEL- 077 621 4567



**VCM INSTITUTE**
கோபால் லேன், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
A/L 2012 Repeat
இணைந்தகணிதம் துரித மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம் : புதன் (05.09.2012) 7.30 am
B. ரவீந்திரன்
(22472)(6-8)



**புதுக்கடைத் திறப்பு விழா**

இன்று 03.09.2012 திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு இலங்கையில் பிரசித்தி பெற்ற Stafford motors co (pvt) Ltd இன் அங்கிகாரம் பெற்ற S.S Motors இல 154, ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணத்தில் தனது நிறுவனத்தினை திறக்கின்றது. Honda, Hero Honda ரக மோட்டார் சைக்கிள்களில் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு மோட்டார் சைக்கிலுக்கும்

1500/= பெறுமதி மிக்க Helmet இலவசம்.

குறிப்பு-இந்தியாவிலும் இலங்கையின் தலைநகரிலும் விற்பனையில் முன்னிலையில் நிற்கும் Honda Activa தற்போது யாழ் நகரிலும் எமது காட்சியறையில்

T.P- 0775017161

S.S MOTORS No 154, Stanley Road, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் பரமசாமி

(ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை, வல்லை அரசினர் வைத்தியசாலை)



உடுப்பிட்டியைச் சேர்ந்த இராமலிங்கம் பரமசாமி நேற்று முன்தினம் (01.09.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - இளையாச்சி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற யோக்கியம், பரிமளம், காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, கந்தசாமி ஆகியோரின் அன்புத் தம்பியும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, தம்பிராசா, தங்கராசா மற்றும் சிவநாயகி, புவனேஸ்வரி, வேலாயுதம் ஆகியோரின் மைத்துனரும், பூபாலசிங்கம், புனிதவதி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், ஜீவபாமா (வலயக்கல்வி அலுவலகம் திருகோணமலை), அருள்பாமா (யா/ வல்வெட்டி இ.த.க. பாடசாலை), பமசுதன் (சுவிஸ்), சத்தியபாமா, கேதீஸ்பாமா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விநாயகதேவன் (Studio, திருகோணமலை), குகதாசன் (யா/சிவகுரு வித்தியாசாலை), தாரணி (சுவிஸ்), பத்மநாதன் (கால்நடை வைத்தியசாலை கரவெட்டி), சிறீதரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், Dr. ஊர்மிளா (வட கொழும்பு போதனா வைத்தியசாலை - ராகம), சுகீதன் (பொறியியலாளர் -சிங்கப்பூர்), ஹேமதா (மாணவி திரு/ உமர்மலை விவேகானந்தா கல்லூரி), கஜணன் (மாணவன் யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), டர்மி (மாணவி யா/ உடுப்பிட்டி மகளீர் கல்லூரி), திவ்வியா (சுவிஸ்), சௌமியா (சுவிஸ்), உஷாந்தன், ரகுவரன் (மாணவர்கள், யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), அதிரதன், அனுஷன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

(சி/3071)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.



## செல்வி பரராசசிங்கம் சுகேந்தினி

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பரராசசிங்கம் சுகேந்தினி நேற்று முன்தினம் (01.09.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி பரராசசிங்கம் கனகசபை - கனகபூபதி தம்பதியரின் அன்புப் புதல்வியும், மோகனதாஸ் (மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை), மேகலா, கவிதா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜமுனா, கோணேஸ்வரன், கோகுலதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிசோபன், பானுஜன் ஆகியோரின் பாசமிகு பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2012) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

போக்காலை வீதி,
உடுப்பிட்டி, இமையாணன்.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆசிரிய இடமாற்ற விண்ணப்ப திகதி 7 ஆம் திகதி வரையில் நீடிப்பு

மாங்குளம் செப் 3

ஆசிரியர் இடமாற்றம் கோரி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் திகதி நீடிக்கப்பட்டுள்ளதால் இதுவரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த இடமாற்றம் பெறுவதற்குத் தகுதியுடைய ஆசிரியர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்குமாறு துணுக்காய் கல்விப்பணிப்பாளர் திருமதி லூட்ஸ் மாலினி வெனிற்றன் கேட்டுக்கொண்டுள்ளார்.

வடமாகாணக் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான திகதி இந்த மாதம் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே இதுவரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத இடமாற்றம் பெறுவதற்குத் தகுதியுடைய ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை உடனடியாக கல்வி வலய அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இதுவரை 100இற்கும் மேற்பட்டவர்கள் இடமாற்றம் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களின் விண்ணப்பங்கள் கோரிக்கைப்படுத்தப்பட்டு இடமாற்றச் சபையின் கூட்டத்தில் பரிசீலனைக்கு உரிய நிலையில் தயாராகவுள்ளன. ஏற்கனவே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மீண்டும் அவற்றைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-422)

## ஸ்கந்தபுரத்தில் ஏற்று நீர்ப்பாசனம்

கிளிநொச்சி மாவட்டம் ஸ்கந்தபுரம் கிராமம் ஏற்று நீர்ப் பாசனத்தால் நன்மையடையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போருக்கு முன்னர் அக்கராயன் குளத்தின் வாய்க்கால் நீரிலிருந்து ஏற்று நீர்ப் பாசனம் மூலமாக ஸ்கந்தபுரத்திலுள்ள மேட்டுக் காணிகளுக்கு நீர் வழங்கப்பட்டு வந்தது. 1990 ஆம் ஆண்டு போர் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் விவசாய நடவடிக்கைகள் சீர் குலைந்தன. ஏற்று நீர்ப் பாசன நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டன.

தற்போது 22 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்று நீர்ப்பாசனத்தால் இந்தக் கிராமம் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# மரண அறிவித்தல்

## வன்னியநாதன் ஞானசூரியன்



மூளாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வன்னியநாதன் ஞானசூரியன் (அப்பன்), நேற்று (02.09.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூளாய் பிரபல புறக்ரரும், நோற்றறியுமான தாமோதரம் பிள்ளை வன்னியநாதன் - வரலட்சுமி தம்பதியரின் கனிஷ்ட மகனும், திருமதி வன்னிய சுந்தரி குமாரசூரியர் (உடுப்பிட்டி), ஞானாநந்தன் (கோப்பாய்), திருமதி கேதார கௌரி குமார சூரியர் (தெல்லிப்பழை), ஞானசம்பந்தன் (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக் களம்), திருமதி ஞானசௌந்தரி, செந்தில்நாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அருளம்பலக் குமாரசூரியர் (ஓய்வு பெற்ற பணிப்பாளர், பெருந்தெருக்கள் திணைக்களம்), கதிர்காமக் குமாரசூரியர் (ஓய்வு பெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி), திருமதி சந்திரமணிதேவி ஞானாநந்தன், செந்தில்நாதன் (ஓய்வு பெற்ற அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி), திருமதி பவானி ஞானசம்பந்தன் ஆகியோரின் அருமை மைத்துனரும், விஜயராகவன், அகிலினி, காலஞ்சென்ற அகிலன், சாஜினி, ஐங்கரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ரத்தினக்குமாரசூரியர், இராசகுமாரசூரியர், பாலகுமாரசூரியர், சூரியகுமாரி, சூரியகலா, காலஞ்சென்ற ஜெயக்குமாரசூரியர், கணேச குமாரசூரியர், சங்கரகுமாரசூரியர், கஜநேசன், மயூரேசன், யதுர்சன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2012) திங்கட்கிழமை மு.ப. 9.00 மணிக்கு மூளாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து மு.ப.11 மணியளவில் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவாசா
மூளாய், சுழிபுரம்

(c/3070)(14)

தகவல்:
வ.ஞானசம்பந்தன் (சகோதரன்),
மைத்துனர்

# மரண அறிவித்தல்

## கதிர்காமு கந்தையா

(ஓய்வு பெற்ற வைத்தியசாலை உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை - செட்டிக்குள வைத்தியசாலை)



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், செட்டிக்குளத்தை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான கதிர்காமு சுந்தையா நேற்று (02.09.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், பசுபதி (முத்தையன்கட்டு), சரஸ்வதி, ஜெயரட்ணம் (ஆயுள் வேதவைத்தியர் செட்டிக்குளம்), காலஞ்சென்ற அருமைரட்ணம் மற்றும் பாலசுந்தரம் (ஓய்வு பெற்ற லிகிதர் வவுனியா செட்டிக்குளம்), பத்மநாதன் (லண்டன்), காலஞ்சென்ற தவலட்சுமி மற்றும் சாந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை தந்தையும் சின்னத்தங்கம் (முத்தையன்கட்டு), பசுபதி (செட்டிக்குளம்), கமலாம்பிகை (செட்டிக்குளம்), சகுந்தலை (யாழ்ப்பாணம்), நஞ்சிதமலர் (செட்டிக்குளம்), விஜயலக்ஸ்சுமி (லண்டன்), கிருஸ்ணமூர்த்தி (செட்டிக்குளம்), கனகலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்தச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

16/3, சீனியர் ஒழுங்கை,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(22475)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு
12★08★1930

உதிர்வு
04★08★2012

கடந்த 04.08.2012 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வம்

அமரர்

## தம்பிஐயா சிவபாக்கியம்

எங்கள் அன்புத்தெய்வத்தின் பிரிவுத்துயரில் பங்கேற்று அனுதாபம் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (03.09.2012) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில்.

(22474)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுமண்டபத்தில் சனசமூக நிலையம்

கைதடி , செப் 3

கைதடி கிழக்கில் உள்ள துர்க்கா சனசமூக நிலையம் நிரந்தரக்கட்டடம் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றது.

ஐம்பதிற்கும் மேற்பட்ட குடும்பங்களைக் கொண்ட சனசமூக நிலையம் கடந்த பலவருடங்களாக கட்டடம் இல்லாத நிலையில் பொது நோக்கு மண்டபம் ஒன்றில் இயங்கி வருகிறது.

நிலையத்திற்கென அமைக்கப்பட்டுவரும் கட்டடம் நிதி வசதி இல்லாத நிலையில் அரைகுறையாக உள்ளது.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டோர் உடனடிக் கவனமெடுத்து இந்தக்கட்டடத்தைப் பூர்த்திசெய்து கொடுப்பதுடன் பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் அக்கறை கொள்ள வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம- 288)

## நுளம்பு வலைகள் விநியோகம்


தென்மராட்சி, செப்.3

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட இடைக்குறிச்சி, கரம்பைக் குறிச்சி ஆகிய பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் விநியோகிக்கப்பட்டன.

- சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 500 இற்கும் மேற்பட்ட நுளம்பு வலைகள் அந்தந்த பிரிவுகளில் பொது சுகாதார பரிசோதகர் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களால் விநியோகிக்கப்பட்டன.

கடந்த மே மாதம் வரணி வடக்குப் பிரிவில் நுளம்பு வலைகள் விநியோகிக்கப்பட்டபோது பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கும் இவை விநியோகிக்கப்பட்டன.

இதேவேளை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரதி புதன்கிழமைகளில் நடைபெறும் மனநோய் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களுக்கு வழங்கவென சுகாதாரத் திணைக்களத்தினரால் வழங்கப்பட்ட ஒரு தொகுதி நுளம்பு வலைகள் நோயாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)




இலங்கைப் பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 146 ஆவது ஆண்டை ஒட்டி நேற்று முன்தினம் நெல்லியடிப் பொலிஸார் நடைபவனி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். சமூக விரோதச் செயல்கள், விபத்து உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதை வலியுறுத்தி நடத்தப்பட்ட இந்த நடை பவனியில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரேரா விருந்தினராகக் கலந்து கொண்டார். (ம-253-422)

# போக்குவரத்தில் ஏற்படும் பிரச்சினை குறித்த முறைப்பாடுகள் ஏற்கப்படும்

### யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.3

யாழ். மாவட்டத்தில் தனியார் சேவையில் ஈடுபடும் பஸ்கள் பயணிகளை அதிகமாக ஏற்றிச் செல்வது மற்றும் பஸ்ஸில் இடம்பெறும் திருட்டு, சேஷ்டைகள் தொடர்பில் இதுவரை எதுவித முறைப்பாடும் பதிவு செய்யப்படவில்லை.

ஆனால் இனி அது தொடர்பான சகல முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படும் என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ். நகரிலிருந்து சகல வழிப் பாதைகளிலும் ஈடுபடும் தனியார் பஸ்களிலும் பயணிகள் அதிகமாக ஏற்றிச் செல்லப்படுவதால் பயணிகள் மூச்சுக் கூட விடமுடியாத அளவுக்கு நெரிபடுகின்றனர்.

அந்த வேளையில் அங்க சேட்டைகளிலும் சிலர் ஈடுபடுகின்றனர். கைக் குழந்தைகளுடன் பயணிப்பவர்கள், முதியவர்கள் பெரும் சிரமத்துக்கு ஆளாகின்றனர். அலுவலகங்களுக்குச் செல்வோரின் உடைகள் பஸ்ஸிலிருந்து இறங்கிய பின்னர் அழுக்கடைந்து விடும் நிலையும் தொடர்கிறது.

பஸ் நடத்துநர்கள் சிலர் பயணிகளை மிருகங்கள் போல் நடத்துகின்றனர் எனப் பல பயணிகள் பஸ்ஸில் திட்டித் தீர்க்கிறார்கள். தவிர இவ்வாறான நிலையில் 'பிக்பொக்கற்' உட்படத் திருட்டுக்களும் இடம்பெறுகின்றன.

இவை தொடர்பில் பல பயணிகள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப் போகின்றனர். ஆனால் முறைப்பாடு பதிவு செய்யப்படுவதில்லை. இரு தரப்பினரையும் பொலிஸார் சமாதானப்படுத்தி விடுகின்றனர்.

இதனால் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரதும் பிரச்சினைகள் மட்டும் தீர்க்கப்படுகின்றதே தவிர அதனுடன் தொடர்புபட்டுப் பாதிக்கப்படும் பல பயணிகள் தொடர்ந்து பாதிக்கப்பட வழிவகுக்கிறது.

எனவே தவறு இழைப்பவர்கள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். தவிர ஒவ்வொரு பஸ்ஸினதும் ஆசனங்களின் எண்ணிக்கை விகிதத்துக்கு ஏற்பவே மேலதிக பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும். ஆனால் அது பின்பற்றப்படுவதில்லை என்று பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் அனைத்தும் இனி முறைப்பாடு செய்யப்படுமிடத்து நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார்.

சில குறுந்தூர சேவைகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையான பஸ்களே குறித்த நேரத்துக்கு ஒரு தடவை பணியில் ஈடுபடுவதால் அதிக பயணிகளை ஏற்றுவது தவிர்க்க முடியாததாக இருந்தது.

ஆனால் பயணிகள் நலன்கருதி இனி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று.- அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

# கழுதைப்பிட்டி துறைமுகத்தை திருத்தி பாவனைக்கு விடுங்கள்

### தீவுப் பகுதி மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.3

புங்குடுதீவு இறுப்பிட்டி, கழுதைப்பிட்டி துறைமுகத்தைத் துரிதமாகப் புனரமைத்து நயினாதீவுக்கு வரும் உல்லாசப் பயணிகளை அந்த வழித்தடத்தினூடாக போக்குவரத்துக்கு அனுமதிக்க வேண்டும் என தீவுப் பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

தென் பகுதியில் இருந்து நயினாதீவுக்கு வரும் யாத்திரிகர்கள் தொகை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

இதனால் நயினாதீவு, நெடுந்தீவுக்குச் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். போக்குவரத்து நெருக்கடி காரணமாக சில சமயங்களில் நெடுந்தீவுப் பயணிகள் படகைத் தவறவிடுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவு, நயினாதீவுக்கான அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்வதிலும் ப.நோ.கூ. சங்கங்கள் பெரும் கஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

சில சமயங்களில் பொருள்கள் குறிகாட்டுவானில் மறுநாள் வரை காக்க வைக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றன.

இந்தச் சேவையை தீவக மக்கள் சிரமமின்றிப் பயன்படுத்தக் கூடியதாகவும் நயினாதீவுக்குச் செல்லும் உல்லாசப் பயணிகளைக் கழுதைப் பிட்டி துறைமுகத்தினூடாக செல்ல நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இந்த விடயம் குறித்து தீவுப் பகுதிப் பிரதேச சபைகள் தீர்மானங்களை நிறைவேற்றி சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கூறுகிறார்கள். (ம-7)

## வறட்சியில் சிரமதானம்.....



வரணி வடக்கு கூழாநின்றபுலத்து முருகன் ஆலய தீர்த்தக் குளம் கடும் கோடை காரணமாக நீர் வற்றிய நிலையில் உள்ளது. கடந்த வாரம் சிரமதானம் மூலம் குளம் ஆழமாக்கப்பட்டுள்ளது. சுமார் 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இந்தப் பணியில் ஈடுபட்டனர். (ம-122)

### மருத்துவர் வீடு மீது கழிவு ஒயில் வீசியது குறித்து

# சட்டமா அதிபரின் பதில் கிடைத்ததும் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்

### யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்

புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரனது வீடு மீது கழிவு ஒயில் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டமை மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான தகவல்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவரிடமிருந்து பதில் கிடைத்ததும் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர் என்.ஜெயக்குமாரனின் வீடு மீது சில மாதங்களுக்கு முன்னர் கழிவு ஒயில் வீசி ஜன்னல் கண்ணாடிகளும் நொருக்கப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து மின்பிறப்பாக்கி ஒன்று சட்டவிரோதமாக வைத்தியசாலையிலிருந்து வெளியே கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் மற்றும் வைத்தியசாலையிலிருந்து இரும்புக் கேடர்கள் சட்டவிரோதமாக வெளியே கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் என்பன தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டன.

அது தொடர்பான ஆரம்ப விசாரணைகள் நடத்தப்பட்டு அவை பற்றிய விவரங்கள் அனைத்தும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவரிடமிருந்து பதில் கிடைத்ததும் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எரிக் பெரேரா மேலும் தெரிவித்தார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோடியால் திணறியது கூகுள்



நாட்டு மக்களின் பல வித மான கேள்விகளுக்குப் பதிலளித்த மோடியால் கூகுள் பிளஸ்ஸின் சேமிப்ப கமே, சில நிமிடம் ஸ்தம்பிக் கும் நிலை ஏற்பட்டது.

நாட்டின் பல்வேறு பகுதி களில் உள்ள மக்களின் கேள்விகளுக்கு, குஜராத் முதல்வர் நரேந்திர மோடி கூகுள் பிளஸில் நேரடியாகப் பதிலளித்தார்.

இந்நிகழ்ச்சி யுடியூப்பில் நேரடியாக ஒளிபரப்பு செய் யப்பட்டது.

இணையத்தளத் தொழில் நுட்பத்தின் மூலம் நாட்டு மக்களைச் சந்தித்த முதல் இந்திய அரசியல் பிரமுகர் என்ற பெருமையை நரேந் திர மோடி பெற்றுள்ளார்.

சர்வதேச ரீதியில் இந் தப்பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ஆஸ் திரேலிய பிரதமர் ஜூலியா கிலார்டிக்கு பின்னர் நரேந் திர மோடியும் இணைந்துள் ளார். (வ)

## எண்ணெய் கிணற்றில் தீ தீவிரவாதிகளின் சதியா?

அஸாம் மாநிலத்தில் உள்ள எண்ணெய்க் கிணறு ஒன்றில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து அந்த எண் ணைக் கிணறு மூடப்பட் டது. இந்தத் தீ விபத்து உல்பா தீவிரவாதிகளின் சதியாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.


அஸாமின் தீன்சுகியா மாவட்டம் சந்த்மரி கிராமத் தில் உள்ள எண்ணெய் கிணற்றில் நேற்று முன் தினம் பிற்பகல் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

இதுகுறித்து தீயணைப்பு நிலையத்துக்குத் தகவல் பறந்தது. உடனடியாக அங்கு வந்த தீயணைப்புப் படையி னர் கடுமையாகப் போராடி மாலை 5 மணியளவில் தீயை அணைத்தனர். இதை யடுத்து எண்ணெய்க் கிணறு மூடப்பட்டது.

எனினும் இந்த விபத் தில் அதிர்ஷ்டவசமாக ஒரு வருக்கும் காயம் ஏற்பட வில்லை. விசாரணையில், எண்ணெய்யை திருட முயன்றபோது தீ விபத்து ஏற் பட்டது தெரியவந்துள்ளது.

உயர் அழுத்தம் கொண்ட எண்ணெய்க் கிணற்றின் வால்வில் திருடர்கள் துளை போட்டுள்ளனர்.


அவ்வேளை திரவ ஹைட் ரோகார்பன் வெளியேறி, திடீரென தீப்பற்றியதாக எண்ணெய் நிறுவன செய் தித் தொடர்பாளர் ஜிஷ்னு சர்மா தெரிவித்தார். (வ)




நிலக்கரி சுரங்க ஊழல் சம்பந்தமாக புதுடில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் பாரதீய ஜனதாக்கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அருண் ஜெட்லி, அனுராக் தாகூர், விஜேந்தர் சிங், மற்றும் விஜய்கோயல் ஆகியோர் கலந்து கொண்ட னர்.

# இந்தியா வரும் மஹிந்தவை கடும் சொற்களால் எச்சரியுங்கள்

## பிரதமர் மன்மோகனிடம் ராமதாஸ் வலியுறுத்து



சென்னை, செப். 3

இந்தியாவுக்கு வருகை தர உள்ள இலங்கை ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவை மிகக் கடுமையான வார்த்தை களால் இந்திய பிரதமர் மன் மோகன்சிங் எச்சரிக்க வேண் டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக ராம தாஸ் வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்க ளில் வாழும் தமிழர்கள் அனைவரும் சுயமரியாதை யுடனும், அரசியல் அதிகா ரத்துடனும் வாழ்வதற்கு தனித் தமிழீழம் அமைப்பது தான் ஒரே தீர்வு என்ற முழக் கம் உலகம் முழுவதும் தீவிர மடைந்து வருகிறது.

இந்நிலையில், தமிழர் கள் வாழும் பகுதிகளிலி ருந்து சிங்களப் படைகளை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க மறுத்து விட்ட இலங்கை அரசு, அண்மைக் காலமாக போரில் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பெண்களையும், போருக் குப் பின்னர் கைது செய்யப் பட்டு விடுவிக்கப்பட்ட பெண் போராளிகளையும் விசாரணை என்ற பெயரில் முகாம்களுக்கு அழைத்துச் செல்லும் இராணுவத்தினர் அவர்களை பாலியல் வன் கொடுமைகளுக்கு உள்ளாக் கின்றனர். இதையெல்லாம் எதிர்த்துக் கேட்க முடியாத தமிழ்ப்பெண்கள் நடைப் பிணங்களாக வாழ்ந்து வரு கின்றனர். நூற்றுக்கணக் கான பெண்கள் அவமானம் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று அங்கிருந்துவரும் செய்தி கள் தெரிவிக்கின்றன.

தமிழ் இனத்தை அடி யோடு அழித்துவிட வேண் டும் என்ற எண்ணத்துடன் திட்டமிட்டு இத்தகைய கொடுமைகளை அரங் கேற்றி வருகின்றது இலங்கை அரசு. தமிழகத் தமிழர் களின் தொப்புள் கொடி உறவுகளான ஈழத்தமிழ்ப் பெண்களுக்கு இழைக்கப் படும் இந்தக் கொடுமை களுக்கு முடிவு கட்ட வேண் டிய கடமையும், பொறுப் பும் இந்திய அரசுக்கு உண்டு. எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தியா வரும் இலங்கை அதிபர் ராஜபக்ஷவை கடு மையான வார்த்தைகளால் பிரதமர் மன்மோகன்சிங் எச்சரிக்க வேண்டும்.

அதுமட்டுமின்றி இம் மாதம் 10 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை ஜெனிவா வில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமை ஆணை யத்தின் 21 ஆவது கூட்டத் திலும் இது குறித்து பிரச் சினை எழுப்பி இலங்கையை உலக நாடுகள் கண்டிக்கவும், எச்சரிக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண் டும் - என்று அதில் குறிப் பிடப்பட்டுள்ளது. (வ)

## மாவோக்களின் கண்ணியில் படையினர் சாவு

ஒரிசா மாநிலத்தில் மாவோ தீவிரவாதிகளின் கண்ணிவெடித் தாக்குத லில் 2 எல்லைப் பாதுகாப் புப் படையினர் உயிரிழந்த னர்.

ஒரிசாவின் கோராபுட் மாவட்டம் மாவோயிஸ்ட் டுகளின் ஆதிக்கம் மிகுந்த பகுதியாகும். நேற்றுமுன் தினம் லக்மிபூர் நகரின் நாரா யண பட்னா சாலையில் எல்லைப்பாதுகாப்புப் படை யினர் கோராபுட் பகுதியின் பவுலூர் முகாமை நோக்கி வாகனத்தில் சென்று கொண் டிருந்தனர்.

அப்போது வீதியில் வைத் திருந்த கண்ணி வெடிகள் வெடித்ததில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந் தார்.

படுகாயமடைந்த மற் றொருவர் மருத்துவமனைக் குக்கொண்டு செல்லும் வழி யில் உயிரிழந்தார். (வ)

## ஜம்முவில் துப்பாக்கிச் சூடு தீவிரவாதி சாவு

காஷ்மீரில் தீவிரவாதி களுக்கும் இராணுவத்துக் கும் இடையே நடந்த துப் பாக்கிச் சண்டையில் தீவிர வாதி ஒருவர் உயிரிழந்தார்.

ஜம்மு- காஷ்மீர் மாநிலம் கந்தர்பால் மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில் தீவிர வாதிகள் பதுங்கியிருப்பதாக உள்ளூர் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து வனப் பகுதியில் பதுங்கியிருந்த தீவிரவாதிகளின் மீது இராணு வம் அதிரடித் தாக்குதல் நடத் தியது.

இரு தரப்பினருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் ஒரு தீவிரவாதி கொல்லப்பட்டார். (வ)

## காங். எதிராக ராம்தேவ் போராட்டம்



காங்கிரஸ் கட்சியின் அதிகாரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் ஒக் ரோபர் 2 ஆம் திகதி தொடக் கம் பாபா ராம்தேவ் போராட் டம் நடத்தவுள்ளார்.

இதுகுறித்து செய்தியா ளர்களிடம் தெரிவித்ததா வது:-

டில்லி, குஜராத் மற்றும் இமாசலப் பிரதேசம் ஆகிய இரண்டு மாநிலங்களில் அடுத்த மாதம் நடைபெற விருக்கும் சட்டசபைத் தேர் தலைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசை ஆளும் காங்கிரஸ் கட்சியின் அதி காரம் மற்றும் அமைப்பை எதிர்த்து வரும் ஒக்ரோபர் 2 ஆம் திகதி முதல் அடுத்த ஆண்டு வரப்போகும் பொது தேர்தல் வரை போராட்டம் நடத்தப்படும். என்னைக் குறிவைத்து தாக்கி வரும் காங்கிரஸ் கட்சிக்கு மக்கள் தேர்தலின் போது தகுந்த பதிலடி கொடுப்பார்கள் -என்றார். (வ)

## சென்னையில் தீ விபத்து: 60 குடிசைகள் நாசம்



சென்னை, பட்டினப் பாக்கம் சீனிவாசபுரத்தில் நேற்று திடீரென தீ விபத்து ஏற்பட் டது. இதில் பால் வியாபாரி ஒருவர் தீயில் கருகி உயிரி ழந்தார். இந்த தீ விபத்தில் 60 குடிசைகள் எரிந்து சாம் பராயின.

சம்பவம் பற்றி அறிந்த தும் மேயர் சைதை துரை சாமி அந்த இடத்துக்கு சென்று தீ விபத்தில் பாதிக்கப்பட்ட வர்களுக்கு ஆறுதல் கூறி னார். அதேபகுதியில் கடந்த 30 ஆம் திகதி தீ விபத்து ஏற் பட்டு 37 குடிசை கள் எரிந்து சாம்பராயின. அந்தப் பகு தியைச் சேர்ந்த சமூக சேவகி ஒருவர் கூறும் போது, தீவிபத் துக்கு காரணமானவர்கள் மீது பொலிஸார் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இந்த விபத்து குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

## மருத்துவ பரிசோதனைக்காக வெளிநாடு சென்றார் சோனியா காந்தி

மருத்துவப் பரிசோத னைக்காக காங்கிரஸ் தலை வர் சோனியா காந்தி வெளி நாடு சென்றுள்ளார்.

மருத்துவ பரிசோதனை களை முடித்துக் கொண்டு ஒரு வாரத்தில் இந்தியா திரும்புவார் என்று காங்கி ரஸ் பொதுச்செயலாளர் ஜனார்தன் திவேதி செய்தி யாளர்களிடம் தெரிவித்தார்.

சோனியா காந்தி கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் வெளி நாட்டில் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டார்.

அறுவைச் சிகிச்சைக்குப் பின், கடந்த பெப்ரவரி மாதம் மருத்துவப் பரிசோத னைக்காக அவர் வெளிநாடு சென்றது குறிப்பிடத்தக்கது.

எந்த நோய்க்கான மருத் துவ பரிசோதனைக்கு சோனியா [illegible] வில்லை. (வ)

## மக்கள் செல்வாக்கை காங்கிரஸ் இழக்கும்

### உறுதிபடக் கூறுகிறார் கம்யூ.செயலாளர்



தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி காணாமற்போவது டன், இந்திய மக்களிடம் தனது செல்வாக்கை இழப்பது உறுதி என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி. ராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத் துக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதை கண்டித்து இந் திய கம்யூனிஸ்ட் கட்சி சார் பில் நேற்றுமுன்தினம் மாநிலம் தழுவிய உண்ணாவிரதம் போராட்டம் நடைபெற்றது. சேப்பாக்கம் அரசு விருந்தி னர் மாளிகை அருகே நடந்த உண்ணா விரதத்தில் பங் கேற்று பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:-

எதிர்ப்புகளை மீறி இலங்கை இராணுவத்துக்கு இந்தியா பயிற்சி அளிக்கிறது. இவ்விட யத்தில் பிரதமர் மன்மோகன் தான் பதில் அளிக்கவேண் டும். தமிழக மீனவர் பிரச்சினை களில் நிரந்தரத் தீர்வு காணா மல் இருக்கும் நிலை தொடர்ந் தால் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி காணாமற்போவது டன், இந்திய மக்களிடம் தனது செல்வாக்கை இழப்பது உறுதி -என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 98 ஆண்டுகளுக்கு முன் கடலில் வீசப்பட்ட போத்தல் சிக்கியது



98 ஆண்டுகளுக்கு முன்னர் கடலில் வீசப்பட்ட போத்தல் மீனவர் ஒருவரிடம் சிக்கி கின்னஸ் சாதனை படைத்துள்ளது.

ஸ்கொட்லாந்தின் அருகில் ஷெட்லேண்ட் தீவு பகுதியில் ஆண்ட்ரூ லீபர் என்ற மீனவர் கடந்த ஏப்ரல் மாதம் மீன் பிடித்துக் கொண்டிருந்தார்.

அப்போது அவரது வலையில் போத்தல் ஒன்று சிக்கியது. இதற்குள் கடிதம் ஒன்று இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார் லீபர்.

இந்தக் கடிதத்தில், போத்தலைக் கண்டுபிடிப்பவர்கள் அதை எங்கு கண்டெடுத்தனர், எப்போது என்ற விவரங்களை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். அவர்களுக்கு 6 பென்ஸ் நாணயம் சன்மானமாக வழங்கப்படும் என்று தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுதான் உலகின் மிகப் பழையான தகவல் என்பதை கின்னஸ் நிர்வாக அதிகாரிகள் உறுதி செய்ததோடு, கின்னஸ் புத்தகத்திலும் இடம்பிடித்தது.

ஆனால் போஸ்ட்கார்டில் கூறப்பட்டுள்ள பென்ஸ் நாணயங்கள் தற்போது புழக்கத்தில் இல்லை என்பதால் லீபருக்கு சன்மானம் கிடைக்கவில்லை. (வ)

# ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல்

## 12 பேர் சாவு

ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் நடைபெற்ற இருவேறு தற்கொலைத் தாக்குதல்களில் மொத்தம் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தலைநகர் காபூலில் இருந்து 80 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வார்தாக் மாகாணத்தின் சையத் அபாத் நகரில் நேட்டோ படையினரைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

முதல் தாக்குதலானது ஆப்கானிஸ்தான் இராணுவ தலைமையகம் அருகேயும், 2 ஆவது தாக்குதலானது அதே நகரில் டேங்கர் லொறி ஒன்றை வெடிக்க வைத்தும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்களில் 8 பொதுமக்களும், 4 ஆப்கன் பொலிஸாரும் உயிரிழந்துள்ளனர். கடந்தாண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதியன்று இதே மாகாணத்தில் நடத்தப்பட்ட மிகப்பெரிய தற்கொலைப் படைத் தாக்குதலில் 77 அமெரிக்கப் படையினர் படுகாயமடைந்தனர், 5 ஆப்கானியர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



இந்தத் தாக்குதல்களுக்கு தலிபான் இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. அமெரிக்க வீரர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக தலிபான் இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் ஜபியுல்லா முஜாகித் தெரிவித்தார். ஆப்கானிஸ்தானில் நேட்டோ படைகள் உதவியுடன் தலிபான்கள் ஆதிக்கம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, புதிய அரசு அமைக்கப்பட்டது. இருப்பினும் அமைதியை நிலைநாட்டும் முயற்சியாக அங்கு நேட்டோ படை தொடர்ந்து முகாமிட்டுள்ளது. அவர்கள் முழுமையாக வெளியேறவேண்டும் என்று தலிபான்கள் வலியுறுத்தி அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

## குடியரசுக் கட்சி மாநாட்டில் சீக்கிய மத பிரார்த்தனை



அமெரிக்காவின் குடிய ரசுக் கட்சி மாநாட்டில் சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர் முதன் முதலாக சிறப்புப் பிரார்த்தனை நடத்தினார்.

அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை இறுதி செய்ய குடியரசுக் கட்சி மாநாடு புளோரிடா மாகாணத்தின் தாம்பா நகரில் நடைபெற்றது.

கடந்த மாதம் 30ஆம் திகதி மாநாட்டு தொடக்க நிகழ்ச்சியின் போது, அமெரிக்க தேசிய கீதத்துக்கு அடுத்தபடியாக சீக்கிய பிரார்த்தனை நடத்தப்பட்டது.

புளோரிடாவின் சீக்கிய சமுதாயத்தின் தலைமை குரு ஈஸ்வர் சிங் இந்த பிரார்த்தனையை நடத்தினார்.

சீக்கிய மத பிரார்த்தனையுடன் மாநாடு ஆரம்பிக்கப்படுவது குடியரசுக் கட்சி வரலாற்றில் இதுவே முதல் முறை.

விஸ்கான்சின் மாகாணத்தில் உள்ள ஓக் க்ரீக் குருத்வாராவில் கடந்த மாதம் 5 ஆம் திகதி நிற வெறியரின் துப்பாக்கிச் சூட்டில் ஆறு சீக்கியர்கள் உயிரிழந்தனர்.

இந்தச் சூழலில் சீக்கியர்களுக்கு ஆறுதல் அளிக்கவும் தேர்தல் நெருங்கும் நிலையில் அவர்களின் ஆதரவைப் பெறவும், சீக்கிய மதத் தலைவர் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டதாக கருதப்படுகிறது. (வ)

## பின்லேடன் உடலை அடையாளம் காட்டிய மர்மப் பெண்

அமெரிக்க அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பின்லேடனின் உடலை இளம்பெண் ஒருவர் அடையாளம் காட்டியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பின்லேடன் மீதான தாக்குதலில் இடம்பெற்றிருந்த மார்க் ஓவன், அங்கு நடந்த நிகழ்ச்சிகளை புத்தகமாக வெளியிட உள்ளார்.

'நோ ஈசி டே' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் புத்தகத்துக்கு பென்டகன் கடும் எதிர்ப்புத் தெரிவித் துள்ளது.

ஏனெனில் அமெரிக்கா நடத்திய அதிரடித் தாக்குதலில் உலகிற்கு இதுவரை தெரிவிக்கப்படாத விடயங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

அந்தவகையில் பின் லேடன் மீதான தாக்குதலின் போது அவரை அடையாளம் காட்டிய இளம்பெண் பற்றிய தகவல் வெளியாகியுள்ளது.

அந்தத்தாக்குதலில் பின்லேடன் போன்ற தாடியுடன் மற்றொருவர் உயிரிழந்து கிடந்ததாகவும் இதனால் குழப்பமடைந்த அதிரடிப் படையினருக்கு பின்லேடனின் உடலை இப்பெண் காட்டிக்கொடுத்துள்ளார்.

இப்புத்தகம் நாளை செவ்வாய்க்கிழமை வெளிவர உள்ளது. இப்புத்தகத்தை எழுதிய மார்க் ஓவன் மீது பென்டகன் வழக்குத் தொடர முடிவு செய்துள்ளது. (வ)

## அணு உலைச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது வடகொரியா

### சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் தகவல்

வட கொரியா குறிப் பிடத்தக்க அணு உலைச் செயற்பாடுகளை முன் னெடுத்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் சர்வதேச அணு சக்தி முகவர் நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதன்மூலம் அணு வாயுத மூலப் பொருள்களைத் தயாரிப்பதற்கான திறனை வடகொரியா விரிவாக்கும் சாத்தியம் உள்ளதாகவும் அணுசக்தி முகவர் நிலையத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடகொரியாவின் அணுத் திட்டங்களை நேரில் சென்று பார்வையிட முடியாத நிலையில், செய்மதி ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட படங்களின் அடிப்படையில் இவ்வாறான செயற்பாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

2006 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் அணு பரி சோதனைகளை வட கொரியா மேற்கொண்டதை அடுத்து வடகொரியாவுக்கு எதிராக சர்வதேச நாடுகள் கடுமையான தடைகளை விதித்துள்ளன.

வட கொரியாவின் அணுத் திட்டம் கவலைக் குரிய ஒரு விடயம் எனவும் சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யாவில் லெனினின் சிலை மர்ம நபர்களால் சேதம்



ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் அருங்காட்சியகத்தில் உள்ள விளாடிமிர் லெனினின் சிலை மர்ம நபர்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பின்லாந்து ரயில்வே நிலையம் முன்பாக இருந்த இந்த சிலை மர்ம நபர்களால் சேதப்படுத்தப்பட்ட நிலையில், புஷ்கின் நகருக்கு மாற்றப்பட்டு, பின் இந்த அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது.

இங்கும் சிலையை மர்ம நபர்கள் சேதப்படுத்தி உள்ளனர். இது குறித்து பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.


1917ஆம் ஆண்டு போல்ஸ்விக் புரட்சியின் நினைவாக இந்தச் சிலை உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஹக்கானி இயக்கத்துக்கு தடை அடுத்த வாரம் அறிவிப்பார் ஹிலாரி

பாகிஸ்தானைச் சேர்ந்த ஹக்கானி இயக்கத்தை வெளிநாட்டு தீவிரவாத இயக்கம் என்பது குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் அடுத்த வாரம் அறிவிக்கவுள்ளார்.

ஹக்கானி இயக்கத்தை தீவிரவாத இயக்கமாக அறிவிக்க அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு மனதாக ஒப்புதல் அளித்தனர். இது தொடர்பாக கொண்டு வரப்பட்ட பிரேரணையில் ஓகஸ்ட் 10 ஆம் திகதி ஜனாதிபதி பராக் ஒபாமா கையெழுத்திட்டுள்ளார்.

ஹக்கானி இயக்கம் குறித்த முடிவை 30 நாள்களுக்குள் ஹிலாரி அறிவிக்க வேண்டுமென அந்த பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இது தொடர்பான அறிக்கையை ஹிலாரி கிளிண்டன் செப்ரெம்பர் 9 ஆம் திகதி அமெரிக்க நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளார்.



உள்நாட்டுக்கு அச்சுறுத்தலாகவும் ஆப்கனில் உள்ள அமெரிக்க படைகள் மீது தாக்குதலில் ஈடுபட்டு வரும் ஹக்கானி இயக்கத்துக்கு தடை விதித்தால், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட பிற நாடுகளில் அந்த இயக்கத்தினர் நிதி ஆதாரங்கள் திரட்டுவது தடை செய்யப்படும்.


## மியன்மார் முன்னாள் மாணவத் தலைவர் நாடு திரும்பினார்

மியன்மாரில் முன்னாள் மாணவத் தலைவராக இருந்த மேவிலிங், நேற்று முன்தினம் தாயகம் திரும்பினார்.

மேவிலிங் நாடு கடந்த நிலையில் இருந்தபோது, அவர் தொடர்பான விசாரணைகள் ஆள் இல்லாமலேயே மேற்கொள்ளப்பட்டு அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

மியன்மார் இராணுவ ஆட்சியில் மாற்றம் ஏற்பட்ட நிலையில், இவர் போன்று இராணுவ அரசால் தேடப்பட்டு வந்தவர்கள் பலர் தற்போது நாடு திரும்பியுள்ளனர்.

1988 ஆம் ஆண்டு மியன்மார் இராணுவ நிர்வாகத்தால் நசுக்கப்பட்ட முக்கிய மாணவர் அமைப்பின் தலைவராக மேவிலிங் துணிச்சலாகச் செயற்பட்டு வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



குக் தீவுப் பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அ[illegible] அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், நியூசிலாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் [illegible] மற்றும் ஆஸ்திரேலிய நாடாளுமன்றச் செயலாளர் ரிச்சர்டு மார்லெஸ் ஆகியோரைச் சந்தித்தார்.

## ஐ.நா. மனித உரிமை சபையிலிருந்து சூடான் விலகல்

மனித உரிமை சபையின் கடுமையான குற்றச்சாட்டுகள் மற்றும் மக்களாட்சிக்கு எதிரானவர்களின் குற்றச்சாட்டுகளால் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை சபையில் இருந்து ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடான் நாடு தனது உறுப்பினர் [illegible] விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளது.

47 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகளின் மனித உரிமை சபையில் ஆபிரிக்க நாடுகளுக்கு 5 இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா. சபை பொதுத்தேர்தலுக்கு முன்பே எவ்வித காரணமும் கூறாமல் சூடான் நாடு வெளியேறுவதாக கடிதம் கொடுத்திருப்பது ஐ.நா. சபை வட்டாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கலிபோர்னியாவில் மர்ம வைரஸ் 10 ஆயிரம் பேர் பாதிப்பு

கலிபோர்னியா யோசிமைட் என்ற தேசிய பூங்காவுக்கு வந்த 10 ஆயிரம் பேர் மர்ம வைரஸ் கிருமி தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கலாம் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

இதுகுறித்து அதிகாரிகள் தெரிவித்ததாவது:-

யோசிமைட் பள்ளத் தாக்கில் உள்ள இந்த பூங்கா புகழ் பெற்ற சுற்றுலா தளமாகும். ஆண்டுதோறும் இங்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்து, இங்குள்ள குடிகளில் தங்குகின்றனர்.

இங்கு தங்கி இருந்தவர்களிடம் இந்த வைரஸ் தாக்குதல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அங்கு தங்கியிருந்த 2900 பேருக்கு நோய் பரிசோதனை செய்து கொள்ளுமாறு தெரி விக்கப்பட்டுள்ளது.

இத்தகைய மர்ம வைரஸ் தாக்குதலுக்கு ஆளானவர்களுக்கு 'ஹென்டாவைரஸ் பல்முனரி சின்ட்ரோம்' என்ற நோய் வருகிறது. இதுவரை நோய் தாக்குதல் கண்டுபிடிக்கப்பட்ட 6 பேரில் இருவர் இறந்து விட்டனர்.

இந்த வைரஸ் கிருமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காய்ச்சல், இருமல், தலைவலி, குடல் தொடர்பான பாதிப்புகள் ஏற்படும். இதற்கு இன்னும் சரியான மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் நோயை விரைவாகக் கண்டறிந்தால் நோயாளியை காப்பாற்றலாம்-என்றனர்.(வ)

# மேற்கு ஆபிரிக்காவில் படகு விபத்து 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு



மேற்கு ஆபிரிக்காவில் பாறையில் மோதி படகு கவிழ்ந்ததில் 30 இற்கும் மேற்பட்டோர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

கினியா நாட்டின் தலைநகரான கொனாக்ரியிலிருந்து புறப்பட்ட ஒரு நாட்டுப் படகு அப்பகுதியிலுள்ள தீவை நோக்கி பயணித்துள்ளது.

நன்கு பராமரிக்கப்படாத இந்தப் படகு அதிகமான பயணிகளோடு புறப்பட்டு சென்ற போது வேகமாக வீசிய காற்றை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறி பாறையின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதில் பயணம் செய்த பெண் வியாபாரிகள் உட்பட 30 இற்கும் மேற்பட்டோர் கடலில் முழ்கி உயிரிழந்தனர்.

இந்தத் தகவல் காவல் துறையினருக்கு தெரிய வந்ததும் சம்பவ இடத்திற்கு சென்று சிலரை மீட்டுள்ளனர்.

ஆனால் மீதமுள்ள நபர்களை உயிருடன் மீட்ப தற்கான வாய்ப்புகள் இல்லை எனவும் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று மீட்புப் படையினர் தெரிவித்தனர். (வ)

# இராணுவத்தினரின் தலைகளைத் துண்டித்து அதன் காணொலியை வெளியிட்ட தலிபான்கள்

பாகிஸ்தானில் 12 இராணுவத்தினரின் தலை களை தலிபான் தீவிரவா திகள் துண்டித்துள்ளனர். அதன் கொடூர காட்சிகள் அடங்கிய காணொலியும் வெளியிட்டதால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

ஆப்கானிஸ்தானில் இருந்து ஊடுருவியுள்ள தலிபான் தீவிரவாதிகள் மீது பாகிஸ்தான் இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தலிபான்கள் அவ்வப்போது இராணுவத்தினர் மீது பயங்கர தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், ஆப்கான் எல்லை யோரம் உள்ள பஜவுர் மலைப் பகுதிகளில் பாகிஸ்தான் வீரர்கள் கடந்த ஒரு வாரமாக அதிரடி தாக்குதல் நடத்தினர். இதில் தீவிரவாதிகளின் பதுங்கு குழிகள் அழிக்கப் பட்டதாகவும், 60 இற்கும் அதிகமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் இராணுவம் தெரிவித்தது.

கடந்த 3 தினங்களுக்கு முன்னர் நடந்த தாக்குதலின் போது 15 வீரர்கள் காணாமற் போனதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந் நிலையில் 12 இராணுவத்தினரை துப்பாக்கியால் சுட்டும், தலைகளை துண்டித்தும் தலிபான் தீவிரவாதிகள் கொடூரமாக கொலை செய்துள்ளனர். இதன் காணொலியும் வெளியிட்டுள்ளனர். இத்தகவலை தெரிக் இ தலிபான் பாகிஸ்தான் தீவிரவாத அமைப்பின் செய்தித் தொடர்பாளர் சிராஜுதீன் என்பவர் கைபேசியில் தெரிவித்துள் ளார்.

ஆப்கனில் உள்ள குனார் மாகாணத்தில் பத்திரிகையாளராக வேலை செய்யும் இனயத் சாபி என்பவரும், தலிபான்கள் வெளியிட்ட காணொலியைப் பார்த்ததாக உறுதிப்படுத்தினார். இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (வ)

# சிரியாவில் முகாம் அமைக்க ஐ.நாவின் அனுமதி தேவை

## துருக்கி பிரதமர் கருத்து

அங்காரா, செப் 3



ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றினால் தான் சிரியாவில் பாதுகாப்பு முகாம்களை அமைக்க நடவ டிக்கை எடுப்போம் என்று துருக்கிப் பிரதமர் ரிசெப் தயீப் எர்டோகான் தெரிவித்தார்.

சிரியாவில் அரசுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் நடைபெறும் உள்நாட்டுப் போரால் அப்பாவி மக்கள் பலர் கொல்லப்படுகின்றனர். இதனால் பலர் தஞ்சம் தேடி அருகில் உள்ள நாடுகளுக்கு இடம்பெயர்கின்றனர். இந்த நிலையில், துருக்கியில் மட்டும் 80 ஆயிரம் பேர் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். மேலும், தினமும் 4 ஆயிரம் பேர் துருக்கிக்கு அகதிகளாகச் செல்கின்றனர்.

இந்த நிலையில், அவர்களைப் பாதுகாப்பது தொடர்பாக விரைவாகச் செயற்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துருக்கி வெளியுறவுத்துறை அமைச்சர் டி.அவுடோகுலு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிடம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, துருக்கி பிரதமர் ரிசெப் தயீப் எர்டோகான், அந்த நாட்டுத் தொலைக்காட்சியில் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

உள்நாட்டுப் போரால் பாதிக்கப்படும் மக்களுக்கு சிரியாவுக்குள் பாதுகாப்பு முகாம் அமைப்பது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் உறுதி

**போரால் பாதிக்கப்படும் மக்களுக்கு சிரியாவுக்குள் பாதுகாப்பு முகாம் அமைப்பது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்புச் சபையின் உறுதி இல்லாமல் எந்த முடிவும் எடுக்கமாட்டோம் என்றார் ரிசெப் தயீப் எர்டோ கான்.**

இல்லாமல் எந்த முடிவும் எடுக்கமாட்டோம். அப்படி அமைக்கப்படும் முகாம் வழியாக போர் விமானங்கள் பறக்காது என்ற உறுதி தர வேண்டும். துருக்கி, சிரிய மக்களுக்குத் துணையாக ஆதரவு அளிக்கிறது. என்னைப் பொறுத்தமட்டில் சிரியா அதிபர் அஸாத்தின் அரசியல் வாழ்க்கை முடிந்து விட்டது - என்றார். (வ)


## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கப் பணியாளர்
**வயிரவநாதர் சிவபாலன்**
அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக் கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்,
சுன்னாகம்

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

(c/3052)(6-7-8)

## கண்ணீர் அஞ்சலி



**வயிரவநாதர் சிவபாலன்**
எமது சங்கப் பணியாளர் வயிரவநாதர் சிவபாலன் அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவினால் துயருற் றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்,
பணியாளர்கள்,
ஐக்கிய நாணய சங்கம், நலன்புரி சங்கம்,
தொழிற் சங்கம்.

(c/3057)(6-7-45)

**வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்**
**மாகாணப் பணிப்பாளர் அலுவலகம்,**
**கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம், யாழ்ப்பாணம்.**

மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம், யாழ்ப்பாணத்தின் பாவனைக்கு வாடகை அடிப்படையில் வான் பெற்றுக்கொள்வதற்கான கேள்வி கோரலை இல.40, றக்கா லேன், சுண்டிக்குளியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தின் விளம்பரப் பலகையில் பார்வையிட்டு கேள்விப் பத்திரத்தினை பெற்று 2012.09.14 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முன்னராக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எந்திரி செ. மோகனதேவன்
தலைவர்,
பெறுகைக் குழு,
கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்,
இல.40, றக்கா லேன், யாழ்ப்பாணம்,
தொலைபேசி இலக்கங்கள்: 021 3202 638, 021 222 8091

(3007) (45.6.7)

## விற்பனைக்கு

2 kw, 7kw, 30kw, 25 kw single phase மின் பிறப்பாக்கி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 5006 769

(45.6.7)

**உயர்தர பரீட்சைகளின் பின்**
**"நல்லதோர் ஆரம்பம்"**

**Mega ஸ்கொலர்ஷிப்**
You can Win Upto 75%

**கொம்ப்யூட்டர் புலமைப்பரிசில்**

14 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைவரும் ஸ்கொலர்ஷிப் மூலம் கொம்ப்யூட்டர் படிக்க சிறந்த வாய்ப்பு

இலவச பரீட்சை மாதிரி வினாத்தாளையும் (Model Paper) அனுமதிகளையும் எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்




**CSC - ASIAN COMPUTER EDUCATION**

இலவச பரீட்சை அனுமதிகளை எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2G ஸ்ரான்லி வீதி, 021-2225677 |
| நல்லூர் | 9, குமார வீதி, 021-2229191 |
| [illegible] | [illegible], 021-2262399 |
| [illegible] | [illegible], 021-2270267 |
| கிளிநொச்சி | A9 வீதி, ஆனந்தபுரம், 021-2283925 |

**முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வ.து**

தற்காலிக உதவி முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுத் தொழிற்சாலைக்கு தற்காலிக உதவி முகாமையாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கான விண்ணப்பம் கோரப் படுகின்றது. முழுமையான விவரங்கள் அடங்கிய சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவோ மாவட்டச் செயலாளர் முல்லை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வித்தியா புரம், ஒட்டுசுட்டான் எனும் முகவரிக்கு 2012.09.10 ஆம் திகதி 4.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| சம்பள அளவுத் திட்டம்: | வேலை செய்யும் நாள் ஒன்றுக்கு 700/= ரூ. படி வழங்கப்படும். |
| தகைமை: | தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்றுமொழிகளும் தெரிந்தவராகவும் ஏதாவது இரு மொழிகளும் முழுமையாக எழுத, வாசிக்க தெரிந் தவராக இருத்தல் வேண்டும். கணினிஅறிவுடையவராக இருத்தல் வேண்டும். |
| வயது: | 18 தொடக்கம் 60 வயதுக்கு மேற்படாதவர் |

ஆட்சேர்ப்பு: முல்லைத்தீவு மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பத்துடன் வதிவிட அத்தாட்சிப் பத்திர நிழற்படப் பிரதி இணைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தற்காலிக உதவி முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் என குறிப்பிடல் வேண்டும்.

**மாவட்ட செயலாளர்,**
**சி.க.கூ.ச. சமாசம்,**
**முல்லைத்தீவு.**

(சி/3055) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தை விரட்டுங்கள்

(02)



பெண்கள் அச்சத்தை விட்டு விட வேண்டும் என்று பாரதி சொன்னதற்கு விசேஷமான காரணங்கள் உண்டு. தாய்மைக்கு உரிமை படைத்தவள் பெண். குழந்தையை ஈன்று வளர்த்து, ஆளாக்கி உலகத்திற்குக் கொடுப்பவள் பெண். அவளிடம் அச்சம் குடி கொண்டிருந்தால் அவள் பெற்று ஆளாக்கும் குழந்தையிடமும் அச்சம் இருக்கவே செய்யும். குழந்தைகளிடம் அச்சம் குடி புகாமல் இருக்க வேண்டுமானால் அந்தக் குழந்தையைப் பெற்ற அன்னையிடமும் அச்சம் இருக்கக் கூடாது. எனவே தான் பாரதி தன்னுடைய பாட்டுக்களில் பெண்கள் அச்சத்தை விட்டொழிக்க வேண்டும் என்கிற கருத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறினார்.

சரி, குழந்தை பிறந்து அது சிறு பராய நிலையிலிருக்கும் பொழுது அந்தக் குழந்தையைச் சுற்றியுள்ளவர்களால் அதற்கு அச்சம் தோற்றுவிக்கப்படலாம். அந்த நிலையிலும் குழந்தைக்கு அச்சம் தோன்றிவிடக் கூடாது என்கிற பதைப்புக் கொண்ட பாரதி அவருடைய ஆத்திசூடியில் "அச்சம் தவிர்" என்றார்.

அத்தோடு விடவில்லை. அவருடைய "பாப்பாப் பாட்டு" வரிகளில் பயத்தை நெருங்க விடக் கூடாது என்று எச்சரிக்கிறார். அவர் பாப்பாவிற்குச் சொல்லுகிறார்.

*பாதகம் செய்பவரைக் கண்டால்*
*நீ பயம் கொள்ளலாகாது - பாப்பா*
*மோதி மிதித்து விடு பாப்பா*
*அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா*

என்று கூறுகிறார். பாதகம் செய்பவரைக் கண்டு பயப்படக் கூடாது என்று குழந்தையை எச்சரிக்கிறார். அதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. துணிச்சலோடு செயல்படு என்று உற்சாகம் ஊட்டுகிறார். மோதி மிதித்து விடு என்றும், அவர் முகத்தில் உமிழ்ந்து விடு என்றும் கூறுகிறார்.

குழந்தை நிலையிலேயே அச்சம் மனதில் புகுந்து விடக் கூடாது என்பதில் பாரதியார் கண்ணும் கருத்துமாக இருக்கிறார். அன்னை அச்சமற்றவளாக இருந்தால், குழந்தையும் அச்சமில்லாமல் வளரும். இதுவே பாரதியாரின் ஆசை.

இந்திய மக்கள் அடிமை வாழ்வு வாழ்வதற்கு அவர்களிடையே நிலவிய அச்சம் தான் காரணம் என்பது பாரதியாரின் கருத்து. இந்திய மக்களின் அவல நிலையை எடுத்துச் சொல்லும் போது.

***அச்சமும் பேடிமையும்***
***அடிமைச் சிறு மதியும்***
***உச்சத்தில் கொண்டாரடி - கிளியே***
***ஊமைச் சனங்களடி!***

என்று கூறுகிறார்.

ஆதிக்க வாதிகளின் அநியாயங்களை இந்த மக்கள் ஆமைகளாக, ஊமைகளாக ஏற்றுக் கொண்டதற்குக் காரணம் அவர்களிடையே நிலவிய அச்சம் தான் என்று பாரதி அடித்துச் சொல்லுகிறார்.

ஒரு சமுதாயத்தின் அடிமைத் தனத்திற்கு மட்டுமல்ல, தனி மனிதர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதும் அச்சம் தான். அச்சத்தை விட்டொழிக்காத எவருக்கும் வாழ்க்கையில் முன்னேற்றம் என்பது சாத்தியமில்லை.

இந்த அச்சம் திடீரென்று தோன்றி விடுவதில்லை. குழந்தைப் பருவத்திலேயே விதைக்கப்பட்டு விடுகிறது. அவ்வாறு விதைக்கப்பட்ட அச்சம் குழந்தை வளரும் பொழுது கூடவே சேர்ந்து வளருகிறது. வயது வந்த பிறகு அச்சம் நிழல் போல மனிதர்களைத் தொடருகிறது. இதன் விளைவுகள் ஆபத்தானவை. அச்சம் மனிதனை செயற்பட விடாமல் தடுத்து நிறுத்தும் பெரிய சக்தியாக விளங்கி பலருடைய வாழ்க்கையையும் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறது.

இந்த அச்சத்தை விரட்டாமல் வாழ்க்கை முன்னேற்றம் சாத்தியமில்லை. ஏன்? எப்படி? என்று அடுத்து வரும் அத்தியாயங்களில் பார்க்கலாம்.

### மனித விரோதி

இரண்டாவது உலகப்போர் முடிந்த பின்பு வெற்றி பெற்ற நேச நாடுகளின் தலைவர்கள் அனைவரும் ஒன்று கூடி , எதிர்காலத்தில் போர் நிகழ்வதைத் தடுக்கவும், மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் "அட்லாண்டிக் சாசனம்" என்கிற பெயரில் ஒரு சாசனத்தை உருவாக்கினார்கள். அப்பொழுது உரை நிகழ்த்திய அமெரிக்க ஜனாதிபதி ஃ பிராங்க்லின் ரூஸ்வெல்ட் "மனிதர்களின் மிகப்பெரிய விரோதி அச்சம். இந்த அச்சத்திலிருந்து மனித சமுதாயம் விடுவிக்கப்பட்டால் ஒழிய அதற்கு எதிர்கால பாதுகாப்பு இல்லை" என்று குறிப்பிட்டார். போர்கள் மூழுவதற்கு அடிப்படைக் காரணம் உலகநாடுகளுக்கிடையே உள்ள அச்சம்தான் என்பது ரூஸ்வெல்ட்டின் கணிப்பு.

(முற்றும்)

-பி.சி.கணேசன்-

# சமூகத்துக்கு இயன்றளவு பங்களிப்பைச் செய்து சமூக மேம்பாட்டுக்கு உழைத்தவர் இளையகுட்டி

## முகாமைத்துவத்துறைத் தலைவர் புகழாரம்

**காலத்துக்கு ஏற்றவகையில் சமூகமேம்பாட்டுக்கான முன்னெடுப்புக்களை, வழிப்படுத்தல்களை உரிய முறையில் வழங்கியவர்கள் சமூகத்தினால் நன்றியறிதலுடன் பாராட்டிக் கௌரவிக்கப்படுகின்றனர்.**

அச்சுவேலி, செப்.3

"சமூகத்துக்கு தன்னால் இயன்றளவு பங்களிப்பைச் செய்து சமூக மேம்பாட்டுக்காக உழைத்தவர்கள் சமூகத்தினால் பாராட்டி கௌரவிக்கப்படுகின்றனர். இளைய தலைமுறையினர் தமது குடும்பத்தின் முன்னேற்றத்துக்கு உழைப்பதோடு சமூக மேம்பாட்டுக்கான பணிகளை முன்னெடுப்பதில் ஆர்வத்தோடு ஈடுபட வேண்டும்.

எதிர்காலத்தில் கௌரவமான பாராட்டுக்களை சமூகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று யாழ்.பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்துறை தலைவர் இ.இரத்தினம் தெரிவித்தார்.

கலாபூஷணம் கவிஞர் புத்தூர் வே.இளையகுட்டியின் பவளவிழாவும் 'பவளக்கலசம்' மலர் வெளியீட்டு விழாவும் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் முகாமைக் கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

குறித்த காலப் பகுதியில் நேர்த்தியான முறையில் தமது கடமையைச் செய்து சமூகமேம்பாட்டுக்கு உழைத்தவர் கவிஞர் வே.இளையகுட்டி. அவரது பணி முன்னெடுப்பும் படைப்பும் சமூக மேம்பாட்டை, சமூகத்துக்கான வழிப்படுத்தலை நோக்காகக் கொண்டிருந்தன.

காலத்துக்கு ஏற்றவகையில் சமூகமேம்பாட்டுக்கான முன்னெடுப்புக்களை, வழிப்படுத்தல்களை உரியமுறையில் வழங்கியவர்கள் சமூகத்தினால் நன்றியறிதலுடன் பாராட்டிக் கௌரவிக்கப்படுகின்றனர்.

அந்த வகையில் இந்த பவள விழா எடுக்கப்படுகின்றது. இத்தகைய விழாக்கள் எடுக்கப்படுவதன் நோக்கமானது இளந்தலைமுறையினர் சமூக மேம்பாட்டுக்கான செயற்பாடுகளில் ஆர்வத்தோடு ஈடுபாடுகொள்ள வேண்டுமென்பதற்கும், சமூகத்தினால் நன்றியறிதலுடன் கூடிய பாராட்டுக்கள் கௌரவிப்புக்களுக்கும் அவர்கள் உள்ளாக வேண்டும் என்பதற்குமாகும்.

தனது குடும்பத்தின் மேம்பாட்டில் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் பெற்றோர் அக்கறை உள்ளவர்களாகவும், வழிப்படுத்துபவர்களாகவும் உரியமுறையில் மேற்பார்வை செய்பவர்களாகவும் இருக்க வேண்டும். இதில் ஒன்றில் குறைபாடு ஏற்பட்டாலும் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் பாதிப்பு ஏற்படும். இந்த மூன்று விடயங்களிலும் குடும்பத்துக்கு அடுத்த நிலையில் சமூக ரீதியாக கவனம் செலுத்த வேண்டும்.

இன்று குடும்பரீதியில் தாய், தந்தையர் தொலைக்காட்சி பார்ப்பதில் அக்கறை உள்ளவர்களாக இருப்பதைப் பெருமளவில் அவதானிக்க முடிகின்றது. இது அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் வீணாக்கி சமூகத்தையும் வீணாக்கிவிடும்.

மாணவர்கள் தமது வாழ்க்கையில் சமய நம்பிக்கை, ஈடுபாடு கொண்ட நிலையில் கல்வியில் ஆர்வம் கொள்ள வேண்டும். மாணவர் மத்தியில் சமய நம்பிக்கை இன்மையே சமகால தீயசெயற்பாடுகளுக்கு காரணமாகின்றது. இறை நம்பிக்கையோடு கூடிய கல்வி மேம்பாடு சுபீட்சமான எதிர்காலத்துக்கு வழிவகுக்கும்.

மாணவர்கள் தேடலுடன் கூடிய வாசிப்புத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். தேடலோடு கூடிய வாசிப்புத்திறன் கல்வி முன்னேற்றத்துக்கும், சமூகத்துக்கும் ஏற்ற நற்பிரசைகளின் தோற்றத்துக்கு வழிவகுக்கும் - என்றார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன், வலி.கிழக்கு உதவிப் பிரதேச செயலர் செல்வி ச.பிறேமினி, ஒய்வுநிலை ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் செ.திருநாவுக்கரசு உட்பட பலர் உரையாற்றினர்.

'பவளக்கலசம்' மலரின் வெளியீட்டுரையை கவிஞர் துவாரகனும் ஆய்வுரையை விரிவுரையாளர் ச.லலீசனும் வழங்கினர். (எ-11)

# நிர்வாகிகள் தெரிவு

வவுனியா, செப்.3

வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவராக எஸ்.ரி.கே.இராஜேஸ்வரன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

மேற்படி சங்கத்தின் 14 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக எஸ்.ரி.கே. இராஜேஸ்வரனும், உபதலைவராக கே.சிவஞானமூர்த்தியும் செயலாளராக பி.தாவீதும், உபசெயலாளராக பி.இராமராஜாவும், பொருளாளராக டபிள்யு.ரஸ்மினும் கணக்காய்வாளராக எஸ்.ரவீந்திரனும், தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக, சி.சஞ்சீவலிங்கம், ஏ.கந்தசாமி, க.கமலேந்திரன், என்.நந்தகுமார், எஸ்.குலராஜன், ஏ.எப்.பைரூஸ், எம்.பாஷிம், பி.தில்லைநாதன் மற்றும் சி.இராஜகுலசிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (எ-400)

# தமிழ் இலக்கியத் திறன் பரீட்சையில் வெற்றிபெற்றோர்

கிளிநொச்சி,செப்.3

கிளிநொச்சி மாவட்டத் தமிழ் சங்கத்தால் நடத்தப்பட்ட திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் பரீட்சையில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**ஊக்கப் பரிசு பெறுவோர்**

முருகமூர்த்தி கயாலினி- திருவையாறு உ.நி.ப, சிவகுருநாதன் ரிதுயா, தங்கராசா எழில்வாணி, விஜயகுமார் மிதுசா- கிளி. இந்துக் கல்லூரி, சுவேந்திரன் அர்ச்சனா, இராசேந்திரம் லோயினி, கங்கேசுவரன் கோபிகா-கிளிநொச்சி உ.நி.ப, இதயசிவதாசு சங்கீர்த்தனா, சத்தியலிங்கம் கஸ்தூரி-உருத்திரபுரம் உ.நி.ப, கருணாநந்தன் சபிசிகா-முருகானந்தா கல்லூரி, ஜெயபாலன் பூவள்ளல்-பரந்தன் இந்து உ.நி.ப, கனகராசா அபிநயா- பளை மத்திய கல்லூரி.

**பிரிவு "ஈ"**

1 ஆம் இடம் - நகுலகுமார் அபிராமி - திருவையாறு உ.நி.ப, 2 ஆம் இடம் - திருபானந்தன் ருசாந்தி - புனித பற்றிமா றோ.க.த.க.ப., யோகநாதன் சதனிகா - உருத்திரபுரம் உ.நி.ப., 3 ஆம் இடம் - புஸ்பராசா டனோயன் - கிளி.மத்திய கல்லூரி, ஜெயசீலன் துபாகரன் - கிளி.மத்திய கல்லூரி.

**ஊக்கப் பரிசு பெறுவோர்**

**மத்திய கல்லூரி**

மைத்திரிபாலா மதுபாலன், இரத்தினசிங்கம் பவித்திரன், செல்வரத்தினம் தமிழினி, சந்திரகுமார் திவ்யா, இந்திரராசா யுவானி, சோதிலிங்கம் திகழினி, பாலய்யா றமீபா, தர்மராசா டிதுசன், சத்தியசிவம் துவச்டா.

**புனித பற்றிமா றோ.க.த.க.ப.**

பாலேந்திரன் பவித்திரா, தயாபரன் நிதர்சன்.

**உருத்திரபுரம் உ.நி.ப.**

இராசரத்தினம் சங்கவி, கோணேசுவரன் பவனுயா, சிறிமுருகன் அனோயா. (தொடரும்) (எ)



தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆங்கிலதின நிகழ்வு கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இன்டெல் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் துலிப் குணசேகர கலந்து சிறப்பித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## கொல்லப்பட்ட காந்தியம்

மீண்டும் ஒருமுறை பாரததேசம் தானே பிரசவித்த காந்தியத்தை சாகடித்து தன் முகமூடியைக் கிழித்து உண்மை முகத்தைக் காட்டியுள்ளது.

தமிழகத்தில் பூந்தமல்லி சிறப்பு முகாமில் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து ஓகஸ்ட் ஆறாம் திகதி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தார் ஈழத்தமிழரான செந்தூரன்.

ஈழத்தில் போர் பற்றியெரிந்தபோது அதன் வெம்மையைத் தாங்கமுடியாது, அடிக்கடி தங்கள் தொப்புள்கொடி உறவென்று எண்ணிக்கொள்கின்ற இந்தியாவுக்கு கடல்வழியாக உள்நுழைந்த இலங்கைத் தமிழர்கள் இத்தகைய சிறப்பு முகாம்களில் அடைக்கப்படுவர். இந்த முகாம்கள் விலங்குகள் வாழ்வதற்குக் கூட உகந்தவை அல்ல என்றே அங்கு வாழும் ஈழ அகதிகள் கண்ணீரோடு நீண்டகாலமாகச் சொல்லி வருகின்றனர். ஏறக்குறைய ஒரு சிறைச்சாலையை ஒத்ததாகவே இந்த முகாம்களும் அவற்றின் நிர்வாகச் செயற்பாடுகளும் அமைந்திருக்கின்றன. இங்கு தங்கியுள்ள ஈழத்தவர்களின் நடவடிக்கைகள் யாவும் மிக உன்னிப்பாக அவதானிக்கப்படுவதோடு, அவர்களின் வாழ்வியலுக்கு ஏற்ற வசதிகளும் இந்த சிறப்பு முகாம்களில் மறுக்கப்பட்டுள்ளன. எனவே இத்தகைய திறந்தவெளிச் சிறைச்சாலையாகவுள்ள சிறப்பு முகாம்களை மூடி, தம்மை அடிப்படை வசதிகளைக் கொண்ட வேறு முகாம்களுக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அங்குள்ள ஈழ அகதிகளின் சார்பில் பட்டினிப் போரில் செந்தூரன் இறங்கினார்.


அஹிம்சையின் ஓர் ஆயுதமாக உண்ணாநோன்பைப் பயன்படுத்தி அதிகாரத்தின் இரும்பு இதயத்தையும் இளக வைக்க முடியும் என்பதை உலகுக்குப் போதித்தவர் இந்தியாவின் தேசபிதாவான மகாத்மா காந்தி. ஆனால் காந்தியதேசம் பெயருக்கு மட்டும்தான் இன்னமும் மகாத்மா காந்தியை தேசபிதாவாகக் கொண்டாடுகிறதே தவிர அவரது கொள்கைகளை எப்போதோ குழிதோண்டிப் புதைத்துவிட்டது.

அமைதிப் படை என்ற போர்வையில் இலங்கைத் தமிழர்களின் தாயகப் பகுதிகளை இந்திய இராணுவம் விழுங்க நினைத்தபோது, அதற்கு எதிராக நல்லூரின் வீதியில் பட்டினி யாகத்தில் குதித்த பார்த்தீபனின் [திலீபன்] தியாகத்தைப் பாரதம் கிஞ்சித்தும் கண்டுகொள்ளவே இல்லை. பன்னிருநாள்கள் பசியென்ற நெருப்பில் வெந்த திலீபன், தன் சாவின் மூலம் இந்திய தேசத்தின் கோர முகத்தை வெளிப்படுத்தினான். அப்போது தான் எல்லோருக்கும் தெரிந்தது, காந்தியத்தை இந்தியா கொன்ற விடயம்.

இப்போது மீண்டும் ஒருமுறை தன்னுடைய கோரப் பற்களை அஹிம்சைப் போராளி மீது ஏவிவிட்டிருக்கிறது இந்தியா. நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து பட்டினிப் போரில் குதித்த செந்தூரனை, ''தற்கொலைக்கு முயன்றார்'' என்ற குற்றச்சாட்டின் பேரில் புழல் சிறைக்குள் அடைத்திருக்கிறது பாரத அரசு. செந்தூரனின் கோரிக்கைகளை மனிதாபிமான ரீதியாக அணுகி; சிறப்பு முகாம்களில் வதைபடும் ஈழத் தமிழர்களின் கண்ணீரைப் போக்க வக்கற்ற அதிகாரம், ஏதோ ஒரு குற்றத்தைச் சோடித்து சிறைக்குள் தள்ளி அஹிம்சைப் போராட்டத்தை முளையிலேயே கிள்ள முனைகிறது.

உண்ணாநோன்புகள் எல்லாம் தற்கொலை முயற்சியே என்று கருதப்பட்டால், அன்னா ஹசாரே முதல் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி வரை அனைவரும் சிறைக்குள் தள்ளப்பட்டிருக்க வேண்டும். ஒருநாள் உண்ணாவிரதப் புகழ் கருணாநிதிகூட இந்தவகையில் சிறைக் கம்பிகளை எண்ணியிருக்க வேண்டும். ஆனால் அவர்களுடைய போராட்டங்களுக்கு எல்லாம் பாதுகாப்பு வழங்கிய இந்திய அரசு ஒரு ஈழத் தமிழனின் உண்ணாநோன்பை மட்டும் பூட்ஸ் கால்களால் நசுக்கிவிட்டிருக்கிறது.

தங்கள் நாட்டில் உள்ள சிறப்பு முகாம்களில் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை உடைய ஈழ அகதிகளின் வாழ்வை வளப்படுத்தத் தெரியாத இதே இந்திய அரசுதான், ஒட்டுமொத்த ஈழமக்களினதும் தீர்வுக்காகப் பாடுபடப்போகிறது என்று இன்னமும் நம்பிக் கொண்டிருப்பது எவ்வளவு பெரிய மடத்தனம்.



# ஷியா - சன்னி

## போட்டியின் நடுவில் சிரியா!

■ எஸ்.எஸ்.திருச்செந்தூரன்
முதுகலை மாணவன், சர்வதேச உறவுகள் கற்கை நெறி, கொழும்பு பல்கலைக்கழகம்.

சவூதி அரேபியா, ஈரான் என்பன சிரிய முரண்பாட்டில் எத்தகைய வகிபங்கினைக் கொண்டுள்ளன? என்பதனை அறிய மத்தியகிழக்கு மட்டுமன்றி முழு உலகமுமே காத்திருக்கின்றது. அதாவது சிரியாவில் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக நீடித்துவரும் சண்டைகளில் அப்பிராந்தியத்தில் உள்ள இரு பெரிய அரசுகளான சவூதி அரேபியாவும் ஈரானும் எவ்வளவு தாக்கத்தைக் கொண்டுள்ளன என்பதே ஆராயப்பட வேண்டியது.

இஸ்லாமியக் கூட்டுறவு அமைப்பு - ஐக்கிய நாடுகள் சபை என்பவற்றின் மூலம் மறைமுகமாகத் தொடர்புபட்டுள்ள அமெரிக்கா - ரஷ்யா என்பவற்றிற்கு அப்பால் சவூதி அரேபியா மற்றும் ஈரானின் வகிபங்கு சிரியாவில் என்ன என்பதை ஆராய்வதே அவசியமானதாகவும் அவசரமானதாகவும் காணப்படுகின்றது.

இது பற்றி ஆராயவேண்டிய காரணம் என்ன? மிகப்பிரதானமானது, மத்தியகிழக்குப் பிராந்தியத்தினதும் உலகத்தினதும் இஸ்லாமியத் தலைமைத்துவத்தினை ஏற்றுச் செயற்பட்டு வருகின்ற இரு பிரதான நாடுகளாக இவை காணப்படுகின்றமைதான். மற்றொரு காரணமும் உண்டு. அது, சிரிய மோதல்கள் எண்ணெயுடன் கணிசமான அளவு தொடர்புபட்டுள்ளமையினால் இவ்விரு நாடுகளும் உலகின் எண்ணெய் உற்பத்தியில் பிரதான இடம் வகிப்பதுமாகும்.



இந்த இரு நாடுகளில் சவூதி அரேபியா அமெரிக்காவுடனும் ஈரான் ரஷ்யாவுடனும் அணிசேர்ந்து செயற்பட்டு வருகின்றன. அண்மைக்கால சிரிய மோதல்களை அவதானிப்பதன் ஊடாக இது வெளிப்படையாகத் தெரிய வருகின்றது. எது எவ்வாறாயினும் சிரிய முரண்பாட்டில் வெவ்வேறு நோக்கங்களுடன் அமெரிக்காவும் ரஷ்யாவும் செயற்படுகின்றன என்பது வெள்ளிடைமலை.

ஆனால் சவூதி அரேபியா சன்னி முஸ்லிம்களின் ஆதிக்கத்தினை நிலைநாட்டுவதனையும் ஈரான் ஷியா முஸ்லிம்களின் ஆதிக்கத்தினை நிலைநாட்டுவதனையும் நோக்காகக் கொண்டே சிரிய முரண்பாட்டில் தமது பங்கைச் செலுத்தப்பார்க்கின்றன.

### சவூதி அரேபியாவின் நிலைப்பாடு

சிரிய முரண்பாட்டில் சவூதி அரேபிய நிலைப்பாடு எவ்வாறு காணப்படுகின்றது?

90 சதவீதமான சன்னி முஸ்லிம்களைக் கொண்ட இஸ்லாமியப் பாரம்பரியத்தினைப் பேணிப் பாதுகாத்து வருகின்ற ஒரு தேசம் சவூதி அரேபியா. சிரியாவில் சன்னி முஸ்லிம்களின் ஆட்சியினை நிலைநாட்டுவதினை நோக்கமாகக் கொண்டே அது செயற்படுகின்றது. எனவேதான் சன்னி மதத்தவர்களைக் கொண்ட போராட்டக் குழுவினை ஆதரித்து அதற்குத் தேவையான ஆயுத உதவிகளையும் நிதி உதவிகளையும் வழங்கி வருகின்றது.

ஜனாதிபதி பஷீர் அல் அசாரினுடைய ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதன் ஊடாக, சிரியாவில் சன்னி முஸ்லிம்களின் ஆட்சியை நிறுவ அது முயற்சிக்கின்றது. அதற்காகவே பிராந்தியத்தில் சன்னி முஸ்லிம்களைப் பெரும்பான்மையாக் கொண்ட நாடுகளான துருக்கி, ஜேர்மன் போன்றவற்றின் ஆதரவையும் திரட்டி போராட்டக் குழுவிற்கு வழங்கி வருகின்றது.

அத்துடன் நின்றுவிடாது கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாகவும் அசாரை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டும் செயற்பட்டு வரும் அமெரிக்காவிற்கும் பக்கபலமாக நிற்கிறது.

### ஈரானின் நிலைப்பாடு

ஈரான் சிரிய முரண்பாட்டில் எத்தகைய நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளது?

ஈரான் 89 வீதமான ஷியா முஸ்லிம்களைக் கொண்ட, 21ஆம் நூற்றாண்டிலும் இஸ்லாமியப் பாரம்பரியத்தினைச் சிறப்பாகப் பேணிவரும் நாடு. இது சிரிய முரண்பாட்டில் ஷியா முஸ்லிம்களின் ஆட்சியினை தொடர்ந்து தக்கவைப்பதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. எனவே சிரிய ஜனாதிபதி பஷீர் அல் அஸாருக்கு ஆயுதம் மற்றும் நிதியுதவியினை வழங்கி வருகின்றது. அத்தோடு அது கடந்த எட்டு மாதங்களாக ஜனாதிபதிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் கலகக்காரர்களின் உள்நாட்டுப் போரினை அடக்கி ஒடுக்கவும் முயன்று வருகின்றது. அதற்காகவேதான் அது பிராந்தியத்தில் ஷியா முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஈராக், பஹ்ரெயின் போன்ற அரசுகளின் ஆதரவைத் திரட்டி அசாத்தைப் பலப்படுத்தி வருகிறது. அத்தோடு ஜனாதிபதிக்கு ஆதரவாகவும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகவும் செயற்பட்டு வருகின்ற ரஷ்யாவுடனும் ஈரான் கைகோர்த்துள்ளது.

2003ஆம் ஆண்டு ஈராக்கில் புதிதாக ஷியா முஸ்லிம் அரசு ஆட்சியமைத்தது. அதைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் ஷியா முஸ்லிம் தலைமைத்துவத்திற்குப் பக்கபலம் கிடைத்தது. இது சவூதி அரேபியாவுக்கு ஒரு பின்னடைவாகவே இருந்தது. காரணம் ஈரானும் ஈராக்கும் ஷியா முஸ்லிம்களின் என்ற அடிப்படையில் இணைந்துகொண்டதால் அடுத்தபடியாக சிரியாவையும் அதே அடிப்படையில் அந்த அணிக்குள் இணைத்துக் கொள்வார்கள் என அஞ்சியது. தற்போதைக்கு அதுவே நடந்த வண்ணமும் உள்ளது.

சிரியாவில் தற்போதைய நிலவரப்படி கிளர்ச்சியாளர்களுக்கும் ஜனாதிபதிக்கும் உள்ள முரண்பாடு சிரியாவினை இந்த இரு பக்கங்களிலும் உள்ள ஏதேனும் ஒரு அணிக்குள் சேர்ப்பதற்கான சூழ்நிலையாகவே காணப்படுகின்றது. இத்தகைய ஒரு போக்கே உலகின் பனிப்போர் காலத் தில் காணப்பட்டது. அதாவது முதலாளித்துவத்துவம், சோசலிசம் என்ற அடிப்படையில் அமெரிக்காவும் ரஷ்யாவும் நாடுகளை அணிசேர்த்தன. அதேபோன்று சன்னி, ஷியா முஸ்லிம்கள் என்ற அடிப்படையில் சவூதி அரேபியா, ஈரான் தலைமைத்துவத்தில் மத்திய கிழக்கில் அணிகள் சேர்க்கப்பட்டு வருகின்றன.

எனவே சிரியாவின் முரண்பாட்டில் கிளர்ச்சியாளர்கள் வெற்றிபெற்று அசாத் தோல்வி அடைவாராயின் சன்னி முஸ்லிம் ஆட்சி சிரியாவில் ஏற்பட்டு சவூதி அரேபியா தலைமையிலான அணி பக்கம் சாயும். மாறாக ஜனாதிபதி அசாத் வெற்றி பெற்று கிளர்ச்சியாளர்கள் அடக்கி ஒடுக்கப்படுவார்களாயின் சிரியாவில் மீண்டும் ஷியா முஸ்லிம் ஆட்சி நிலைநிறுத்தப்படும். இதனால் சிரியா ஷியா முஸ்லிம்களுக்குத் தலைமை ஏற்கும் ஈரானின் பக்கம் சாயும்.


எது எவ்வாறாயினும் போர் முடிந்தாலும்கூட அதிலிருந்து மீண்டு சவூதி அரேபியா, ஈரான் என்ற இரு அணிகளில் ஏதோ ஒன்றில் சிரியா இணைவதற்கு மிக நெடுங்காலம் ஆகலாம். இதனால் எதிர்வரும் காலங்களில் சிரியாவின் நிலமை மேலும் மோசம் அடையக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணி சேராமல் இருப்பதே இலங்கைக்கு நன்மை

இரண்டு மாதங்களுக்கு முன்னர் பிரிட்டிஷ் மகாராணியின் வைரவிழாவில் கலந்துகொண்டு தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டனுக்குச் சென்றிருந்தார். அதையடுத்து அவர் முகத்தில் அறைந்தது போல் பிரிட்டிஷ் பிரஜைகளை இலங்கைக்குச் செல்ல வேண்டாம் என்று அந்த அரசு ஆலோசனை வழங்கும் அறிவித்தல் வந்தது.





**நேற்று சண்டே ரைம்ஸ் எழுதியிருந்த ஆசிரிய தலையங்கம் தமிழில் தரப்படுகின்றது.**

■ தொகுப்பு - கோகுலன்

அணி சேரா நாடுகள் (நாம்) அமைப்பானது உச்சி மாநாடுகள் நடக்கும் காலங்களைத் தவிர மற்றைய காலங்களில் எதுவித சலசலப்பையும் காட்டிக் கொள்வதைக் காணமுடிவதில்லை. அவ்வாறுதான் ஈரானிய தலைநகர் தெஹ்ரானில் இப்பொழுது அதன் பிந்திய உச்சிமாநாடு நடந்து முடிந்துள்ளது. ஐ.நா. நிறுவனத்துக்கு அடுத்த இரண்டாவது பெரிய நிறுவனமான இது உச்சி மாநாடுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் என்னதான் செய்கிறதோ யாருக்கும் தெரியாது. இந்த முறை 'நாம்' உச்சி மாநாட்டை ஈரான் தலைமை தாங்கி நடத்தியுள்ள நிலையில் வழமைபோல் அதிக உலக கவனத்தை ஈர்த்திருந்தது. இந்த முறை என்னவென்றால் ஈரானை பிசாசின் மறுபிறவியாக அமெரிக்கா பார்ப்பதே முக்கிய காரணம் எனலாம். பனிப்போர் காலத்தில் செயற்பட்டு இன்றும் நிலைத்து நிற்கும் வல்லாதிக்க நாடாகும் அமெரிக்கா. 1950 களின் பிற்பகுதியில் முதலில் ஆபிரிக்க ஆஸிய ஒருமைப்பாட்டு அமைப்பும் பின்னர் அணிசேரா நாடுகள் அமைப்பும் உருவாகவும் காரணமாகஇருந்தது.

அமெரிக்க உதவி ராஜாங்க செயலாளர் ஐ.நா.வின் செயலாளர் நாயகம் பான்கிமூனுக்கு கடிதம் எழுதி தெஹ்ரானில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதை தவிர்க்கும்படி கேட்குமளவுக்கு சென்றிருந்தார். இஸ்ரேலும் வழமைப்படி தனது எதிர்ப்புக்களை பதிவு செய்திருந்தது. அமெரிக்காவில் தேர்தல் நடைபெறும் வருடம் என்பதால் பலமிக்க யூதர்களின் ஆதரவை முன் எப்போதையும் விட அரசியல் வாதிகள் நாடி நிற்பது மட்டுமல்ல ஈரானின் அணு உற்பத்தி திட்டத்துக்கு எதிராக குரல் எழுப்புவதெல்லாம் எதிர்பார்க்கக் கூடியவைதான்.

அமெரிக்காவின் கோரிக்கையை மறுதலித்துவிட்டு பான்கிமூன் தெஹ்ரானுக்கு பயணம் மேற்கொண்டதானது ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பதவியின் நம்பகத்தன்மையை பலப்படுத்துவதாய் இருக்கின்றது. 170 நாடுகள் மாநாட்டுக்கு செல்வதை தவிர்க்கும் படியாக அமெரிக்காவின் உயர் மட்டநிலையிலிருந்து வந்த கட்டளைபோன்ற கோரிக்கையை மறுத்திருக்காது போகாமல் இருந்திருந்தால் இலங்கை போன்ற நாடுகளில் செயலாளர் நாயகம் அமெரிக்காவின் கைப்பொம்மையாக செயல்படுகின்றார் என்ற நம்பிக்கையை உறுதிசெய்வதாக இருந்திருக்கும் உச்சிமாநாட்டில் அவர் நிகழ்த்திய உரையில் அணிசேராத அல்லது பக்கம் சாராத ஒரு நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்தினார் தெஹ்ரானுக்கு சென்றார். பின்னர் விருந்தாளி நாட்டை இரட்டை விடயங்கள் தொடர்பாக சாடினார். அவை இரண்டும் அமெரிக்காவின் கரிசனையில் உள்ளவை. அவை ஈரானின் அணு பரிசோதனைத் திட்டம் மற்றும் இஸ்ரேலை அழித்தொழிப்பதற்கான அதன் அறைகூவல் றியோடி ஜெனிரோவில் அண்மையில் நடந்து முடிந்த உலகத்தலைவர்கள் மாநாட்டின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈரானிய ஜனாதிபதி மகமூத் அஹ்மதி நிஜாத்தை சந்தித்த பொழுது புதியதோர் உலக ஒழுங்கு முறை உருவாக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியிருந்தார். ஆனால் அந்த புதிய ஒழுங்கு முறை என்னவென்பதைப் பற்றி அவர் விளக்கியிருக்கவில்லை. ·ஆனால் அது மேற்குலகத்துக்கு எதிரான அல்லது மேற்கு நாடுகளால் குறிப்பாக அமெரிக்காவால் கட்டளையிடப்படும் ஒழுங்குமுறையாக அமையக் கூடாது என்பதாகவே இருந்திருக்கும். ஜனாதிபதி நாடுதிரும்பு முன்னரே விளைவுகள் நாட்டில் எதிரொலிக்கத் தொடங்கிவிட்டன.

ஈரான் மீது அமெரிக்கா விதித்திருக்கும் பொருளாதாரத்தடையின் காரணமாக ஜனாதிபதியின் நெருக்கமான நட்பு நாடான ஈரானுடன் வர்த்தகம் செய்வது தடுக்கப்பட்டது. குறிப்பிட்ட அளவில் மட்டுமே ஈரானிலிருந்து எண்ணெய்கொள்முதல் செய்ய சலுகை அளிக்கப்பட்டது. அதுவும் நல்ல நடத்தைக்காக (வேறு இடங்களில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்ய இலங்கைத் தரப்பில் நடவடிக்கை எடுத்தமைக்காக) இலங்கை அரசானது மேற்கு நாடுகளின் அனுமதியில்லாமல் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கு துணிச்சல் பெற்றிருந்தது குறித்து மேற்கு நாடுகள் சில பேராச்சரியம் அடைந்திருந்ததைத் தொடர்ந்து இலங்கையின் வெளிநாட்டு கொள்கையில் மேற்கு நாடுகளுக்கு எதிரான குறிப்பிடக் கூடிய அளவில் மாற்றங்கள் ஏற்பட்டது. இருந்தாலும் அது கையாளப்பட்ட விதம் நாளுக்கு நாள் மோசமானதால் நிலைமைகள் சீர்குலையத் தொடங்கின. பலதடவைகளிலும் அதன் தவறுகள் வெளிப்படலாயின. வெளியுறவு அமைச்சின் கொள்கை முரண்பாடுகளுக்கு உதாரணமாக, ஐ.நா. தருஸ்மன் அறிக்கையை அது முதலில் நிராகரித்ததும் பின்னர் இரகசியமாகச் சென்று அறிக்கையின் ஆசிரியர்களை சந்தித்ததும் இந்த முரண்பாட்டை வெளிப்படுத்திய நிகழ்வுகளாகும். மேற்கு நாடுகளுடன் சுமுக நிலைமையை ஏற்படுத்திக் கொள்ள முயற்சி எடுப்பதற்குப் பதிலாக அது நேராகச் சென்று பாறையில் தலையை முட்டிக் கொண்டது போல் நடந்து கொண்டன. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நாட்டுக்கு பெரும் நன்மை தரும் வகையில் செயல்படுத்தாமல் போனமையால் இலங்கைக்கு எதிரான ஒரு தீர்மானம் மனித உரிமைகள் சபையில் நிறைவேறும் நிலைக்கு கொண்டு சென்றது.

பின்னர் அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிட்டம் ஒன்றைத் தயாரிக்கும் நிலைக்குச் சென்றது.

இப்போது நாட்டின் வெளியுறவுக் கொள்கையானது பசுபிக்குக்கு அப்பால் ஆபிரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் [illegible] இந்த நாட்டுடன் சம்பந்தமே இல்லாத நாடுகளில் இருந்து மன்னர்களையும் ஜனாதிபதிகளையும் அழைத்துவரத் தொடங்கியுள்ளது. இவ்வாறு இலங்கையில் நிலைப்பாட்டை மீள் நிர்ணயம் செய்திருப்பதானது இந்தப் புதிய உலகில் இலங்கைக்கு அல்லது அதன் மக்களுக்கு என்ன பயன்பாட்டை கொண்டு வரப் போகின்றது என்ற கேள்வியைத் தோற்றுவிக்கின்றது. கொழும்பிலுள்ள அதிகாரப் மட்டங்களில் ஏற்பட்டிருக்கக் கூடிய விரக்தி நிலைப்பாடு ஓரளவுக்குப் புரிந்துகொள்ளக் கூடியதாகவே உள்ளது.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் பிரிட்டிஷ் மகாராணியின் வைரவிழாவில் கலந்து கொண்டு தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டனுக்குச் சென்றிருந்தார். அதையடுத்து அவர் முகத்தில் அறைந்தது போல் பிரிட்டிஷ் பிரஜைகளை இலங்கைக்குச் செல்ல வேண்டாம் என்று அந்த அரசு ஆலோசனை வழங்கும் அறிவித்தல் வந்தது. அதுவும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்வதற்கு இங்கிலாந்து கிரிக்கெட் அணியினர் இலங்கைக்குவர ஆயத்தம் செய்து கொண்டிருக்கையில் அத்துடன் கொமன்வெல்த் நாடாளுமன்ற மகாநாட்டில் கலந்துகொள் வருவதற்கு பிரிட்டிஷ் எம்.பிக்கள் இங்குவர ஆயத்தம் செய்து கொண்டிருக்கையில் பிரிட்டன் இவ்வாறு செய்திருப்பது வேடிக்கையாகவிருக்கிறது. ஒருவேளை அடுத்த வருடம் இங்கு நடைபெறவிருக்கும் கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டுக்கு உலை வைப்பதாகவும் இது இருக்கலாம்.

இது ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற வேளையில் பிரிட்டனுக்குச் செல்ல வேண்டாம் என்று ஏனைய நாடுகள் தமது மக்களுக்கு ஆலோசனை வழங்கியது போன்றிருக்கிறது. எதுவானாலும் இது ஒன்றும் இலங்கையில் கொள்கை வகுப்பாளர்களை ஆத்திரம் கொள்ளச் செய்துவிடாது.

இந்த நாட்டின் வர்த்தகம், பிரயாணம், உல்லாசப் பயணம், உயர்கல்வி மற்றும் தொழில் போன்ற விடயங்கள் மேற்கு நாடுகளுடன்தான் சம்பந்தப்பட்டுள்ளன. ஈரான், வெனிசுவலா மற்றும் கியூபா அல்லது சீனாவுடன் அல்ல.

கொமன்வெல்த் உச்சி மகாநாட்டுக்காக ஏற்படும் செலவுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வரியிறுப்பாளர்களையே மிகப் பெரிய அளவில் பாதிக்கப் போகின்றது. எனவே அது நடைபெறாவிட்டால் நாட்டுக்கு பெரிய நட்டம் எதுவும் இல்லை.

அணிசேராமை என்பதன் பொருள் மேற்கு நாடுகளுக்கு எதிராக இயங்குவது என்பது அன்று மேற்குலகை பேராசை பிடித்த மேற்கு என்று வர்ணித்துக் கொண்டு சிறிமா பண்டாரநாயக்க எடுத்த நிலைப்பாடானது (1970-77) நாட்டை பெரும் பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் சென்றது. மாறாக ஜே.ஆர்.ஜயவர்தனவின் மேற்குலகம் சார்ந்த அணுகுமுறைக் கொள்கையில் சில பல குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் அணிசேராமை கடைப்பிடிக்கப்பட்டது.

இப்பொழுது புதியதோர் குளிர் போர் தோன்றத் தொடங்கியுள்ளது. ரஷ்யாவும் சீனாவும் ஒரு பக்கத்திலும் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் மறுபக்கத்திலும் நிற்கின்றன. சிரியா விவகாரத்தில் ஐ.நா.பாதுகாப்பு சபையில் சீனாவும் ரஷ்யாவும் மூன்று முறை அவர்களின் 'இரத்து' அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கின்றன.

எனவே மீண்டும் பனிப்போர் காலம் வந்துவிட்டதா என்று அங்கலாய்க்க வேண்டியுள்ளது. அதுதான் நடக்கப்போகிறது என்றால் யார் என்ன செய்வது? அணிசேரா நாடுகள் அமைப்பு பயன்படுவதாக இருக்கும் என்று கருதலாம்.

எனவே இலங்கை தனது தெரிவுகளை திறந்த நிலையிலேயே வைத்திருக்க வேண்டும் மூடி விடக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானிகள் சந்தித்தால்

இரண்டு பெரிய ஞானிகள் சந்தித்துக் கொண்டால் என்ன பேசிக் கொள்வார்கள்?

அதை விளக்குகிறது இந்தக்கதை.

ஷேக்பரீத் என்ற ஒரு பெரிய ஞானி ஒருவர் இருந்தார். அவர் ஒவ்வொரு ஊராகப் பயணம் செய்து கொண்டிருந்தார். ஒரு சமயம் அவர் காசிக்கு வந்து சேர்ந்தார். அவருடன் அவருடைய சீடர்கள் சிலரும் கூட வந்து கொண்டிருந்தார்கள்.

காசியில் கபீர்தாசர் தங்கியிருக்கும் விடயம் அந்தச் சீடர்களுக்குத் தெரியவந்தது. உடனே அவர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதாவது, ஷேக்பரீத்தும், கபீர்தாசரும் சந்தித்துப் பேச வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள்.

'இரண்டு ஞானிகளைச் சந்திக்க வைத்தால் அரிய தத்துவங்களை அவர்கள் பேசுவார்கள். அதைக் கேட்கும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கும் ' என்று அவர்கள் நினைத்து தங்களின் இந்த விருப்பத்தை ஷேக்பரீத்திடம் தெரிவித்தனர்.

''சரி... கபீரைச் சந்திக்கலாம்... ஆனால் அவருடன் பேசுவதைப் பற்றி நான் எதையும் சொல்வதற்கில்லை!'' என்றார் பரீத்.

''ஏன் கபீருடன் நீங்கள் எதுவும் பேசமாட்டீர்களா? '' என்று சீடர்கள் ஆச்சரியத்தோடு கேட்டார்கள்.

''அவருடன் நான் பேசுவதற்கு எதுவுமில்லை! ஏனெனில்... எனக்கு என்ன தெரியும் என்பது அவருக்குத் தெரியும். அவருக்கு என்ன தெரியும் என்பது எனக்குத் தெரியும்! அப்படி இருக்கும் போது நாங்கள் இருவரும் பேசிக் கொள்வதற்கு என்ன விடயம் இருக்கப்போகிறது ?'' என்றார் ஷேக்பரீத்.

இங்கே இப்படி நிலைமையிலிருந்த போது, கபீர் இருக்கும் இடத்தில் என்ன நடந்தது தெரியுமா?

பரீத் காசிக்கு வந்திருக்கிறார் என்ற விடயம் கபீரின் சீடர்களுக்கு தெரியவந்தது. உடனே அவர்களும் கபீரிடம், ''நீங்கள் ஷேக்பரீத்தைச் சந்தித்துப் பேச வேண்டும்'' என்று கேட்க ஆரம்பித்தனர்.

அதற்கு கபீர், ''நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டால் கட்டித் தழுவிக் கொள்வோம்– ஆனந்தக் கண்ணீர் வடிப்போம்– இதைத் தவிர வார்த்தைகளால் பரிமாறிக் கொள்ளும் வகையில் எங்களிடம் விடயம் எதுவுமில்லை!'' என்று கூறினார்.

இருந்தாலும் இருவரிடமும் இருந்த சீடர்கள் அப்படி நினைக்கவில்லை. எப்படியும் இவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டால் கொஞ்சமாவது பேசாமல் இருக்கமுடியாது. ஏதாவது பேசுவார்கள்!' என்றே நினைத்தார்கள். அதனால் தொடர்ந்து தங்கள் விருப்பத்தைக் கூறி வற்புறுத்தினர்.

கபீர், பரீத்தைத் தன்னுடைய ஆச்சிரமத்துக்கு அழைத்தார். அந்த ஊரின் எல்லைக்குச் சென்று அவரை அழைத்து வந்தார். இருவரும் சந்தித்து, ஒருவரையொருவர் அன்புடன் கட்டித் தழுவிக்கொண்டனர். ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடியே நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தனர் இருவரிடமிருந்தும் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

கபீரின் ஆச்சிரமத்தில் இரண்டு மகான்களும் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள்.

இவர்கள் ஏதாவது பேசுவார்கள்!' என்று எதிர்பார்த்து இரண்டு பக்கங்களிலும் சீடர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள் 'பேசுங்கள்' என்று சொல்லியுங்கூடப் பார்த்தார்கள். அதைக் கேட்டதும் இருவரும் இலேசாகச் சிரித்தார்களே தவிர எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

ஒரு நாள் முழுவதும் அப்படியே கழிந்தது. அதன் பிறகு பரீத் கபீரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

''நீங்கள் ஏன் அவருடன் பேசவேயில்லை? '' என்று கபீரின் சீடர்கள் கேட்டார்கள். அதற்கு கபீர் சொன்னார்: 'நாங்கள் இருவரும் உணர்ந்ததைச் சொல்வதற்கு வார்த்தைகள் கிடையாது! எல்லாமும் உணர்ந்த பரீத்திடம் பேசுவதற்கு என்னிடம் எதுவுமில்லை! ஆதலால் பேசவில்லை.''

இது போலவே பரீத்தின் சீடர்களும் அவரிடம், ''நீங்கள் ஏன் கபீருடன் பேசவே இல்லை'' என்றனர்.

''எங்களில் யாராவது ஒருவர் பேச ஆரம்பித்திருந்தாலும் அதைப்போல முட்டாள் தனம் வேறு எதுவும் இருக்கமுடியாது !'' என்றார் பரீத்.

இந்தச் சந்திப்பின் மூலம், ஞானிகள் இருவரும் பேசியிருந்தால் என்ன ஒரு தெளிவு கிடைக்குமோ– அதைவிட அதிகமான தெளிவு அந்தச் சீடர்களுக்குக் கிடைத்ததாம்.

''உண்மையின் வடிவமான பரம்பொருள் – பேசப்பட வேண்டிய ஒன்றல்ல; அது உணரப் பட வேண்டிய ஒன்று'' என்ற உண்மையை இரண்டு பக்கங்களையும் சேர்ந்த சீடர்கள் புரிந்து கொண்டார்கள்.



சுகி.சிவம்

# தம்மை நாடி வருவோருக்கு அடைக்கலமளிக்கும் மடு மாதா



மடுத்திருப்பதி! மக்களனைவரையும் கவர்ந்திழுக்கும் மந்திரச்சொல். வனவிலங்குகள் வாழும் அடர்ந்த காட்டின் மத்தியிலே, எழில்மிகு அன்னையாக, கானகச் செல்வியாக மடு அன்னை கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றாள். அவளை அண்டி வரும் அனைவருக்கும் அவள் அடைக்கலம் கொடுக்கின்றாள்; அருள்மழை பொழிகின்றாள்.

போர் முடிவடைந்த சூழ்நிலையில் இம்முறை ஆவணித்திருவிழாவுக்கு நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பல லட்சம் மக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எஸ்.ஆர்.லெம்பேட்

மடுத்திருப்பதியின் சுருக்கமான வரலாற்றையும் இந்தத் திருத்தலத்தின் அற்புத ஆற்றலையும், இத்திருத்தலம் வழங்கும் ஆன்மிகப் புதுப்பித்தல் அனுபவத்தையும், இந்தத் திருத்தலம் இன்றைய இலங்கைச் சூழமைவில் எவ்வாறு தேசிய இன ஒற்றுமைக்கு களமாக அமைகின்றது என்பதையும் இக்கட்டுரை சுருக்கமாக ஆராய முற்படுகின்றது.

## வரலாறு

ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலப் பகுதியோடுதான் மடுத்திருப்பதியின் வரலாறும் ஆரம்பமாகின்றது. மன்னாரில் இருந்து 10 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருக்கும் மாந்தை என்ற கிராமத்தின் ஆலயம்தான் மடு மாதா திருச்சொருபத்தின் ஆதி இருப்பிடமாகும். 'செபமாலை மாதா' என்று அழைக்கப்பட்ட அந்தத் திருச்சொருபம்தான் இன்றைய மடுமாதா.

ஒல்லாந்தருடைய ஆட்சியில் கத்தோலிக்கருக்கு எதிராகக் கொடூரமான வேத கலாபனை ஆரம்பித்தது. இந்தக் கலாபனையில் இருந்து தங்களைக் காப்பாற்றும் பொருட்டும், செபமாலை மாதாவின் திருச்சொருபத்தைப் பாதுகாக்கும் பொருட்டும், மாந்தை மக்கள் அங்கிருந்து புறப்பட்டனர். குருக்களின் துணையில்லாத அந்த வேளையிலும், மாந்தையில் இருந்த 20 பக்தியுள்ள குடும்பங்கள் செபமாலை மாதாவின் திருச்சொருபத்தைத் தூக்கிக்கொண்டு, அடர்ந்த வன்னிக் காட்டினுள் புகுந்தனர். திசை தெரியாது அங்கும் இங்கும் அலைந்தனர். இறுதியாக' மருத மடு' என்ற இடத்திற்கு எவ்வித ஆபத்தும் இன்றி மாதாவின் வழிநடத்தலோடு வந்து சேர்ந்தார்கள்.

> மடு அன்னையின் திருப்பதியில் உள்ள மண்கூட மருந்தாகத் திகழ்கின்றது. ஆம், இந்த மண் அருள்நிறைந்த மண்! ஆற்றல் நிறைந்த மண்! இத்திருத்தல மண்ணுக்கு சிறப்பான பெருமை உண்டு.

இவ்வேளையில் யாழ்ப்பாண நகரில் ஒல்லாந்தருடைய வேதகலாபனை தொடர்ந்துகொண்டிருந்தது. எழுநூறு கிறிஸ்தவர்கள் மட்டில் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்காட்டுக்குள் புகுந்தனர். அவர்கள் பூநகரியைக் கடந்து, பயத்தோடும்; பதற்றத்தோடும் அடர்ந்த காட்டினுள் அலைந்துகொண்டிருந்தார்கள். ஏற்கனவே அங்கு வந்திருந்த மாந்தைக் கிறிஸ்தவர்களோடு இவர்களும் சேர்ந்து அன்னையின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தார்கள்.

யாழ்ப்பாணத்திலிந்து தப்பிவந்தவர்களில் போர்த்துக்கேய தளகர்த்தனின் மகளாகிய 'எலேனா' என்பவளும் ஒருவர். இவள்தான் முதன் முதலில் மடு அன்னைக்கு சிறிய ஆலயம் அமைத்தாள். இவளுடைய இந்த நற்செயலுக்காக கிறிஸ்தவர்கள் இந்த இடத்தை 'சிலேனா மருதமடு' என்று அழைத்தார்கள். இந்த இடம்தான் இன்றைய மடுத்திருப்பதி ஆகும்.

## அருளும் ஆற்றலும் நிறைந்த மடு மண்

மடுத்திருப்பதியின் அற்புத ஆற்றல் உலகறிந்த விடயமாகும். மடு அன்னையின் பரிந்துரையால் பல அற்புதங்கள் நடைபெறுகின்றன. அதனால்தான் இப்பதிநோக்கி மக்கள் லட்சக்கணக்காகக் கூடுகின்றனர். பொன் விளையும் பூமி என்று சொல்வார்களே! அதுபோலதான் மடு அன்னையின் திருப்பதியில் உள்ள மண்கூட மருந்தாகத் திகழ்கின்றது. ஆம், இந்த மண் அருள்நிறைந்த மண்! ஆற்றல் நிறைந்த மண்! இத்திருத்தல மண்ணுக்கு சிறப்பான பெருமை உண்டு.

உலகின் எங்குமே இல்லாத ஒரு நடைமுறை இங்கு உள்ளது. அதுதான் இத்திருத்தலத்திலிருந்து பெறப்படும் மண் நோய் தீர்க்கும் அருமருந்தாக விளங்குவது.

இத்திருப்பதியின் வளாகத்திலிருந்து பெறப்படும் மண் ஆசீர்வதிக்கப்பட்டு பிரதான ஆலயத்தின் ஒரு மூலையில் அதற்கென அமைக்கப்பட்ட ஒரு தொட்டியில் வைக்கப்படுகின்றது. இந்த மண்ணை மக்கள் தம் வீடுகளுக்கு எடுத்துச்செல்கின்றார்கள்.

குணமளிக்கும் மருந்தாக இந்த மண்ணைப் பயன்படுத்துகின்றார்கள். 'கோயில் மருந்து' என்று இது அழைக்கப்படுகின்றது.

நோய்க்கு மருந்தாகவும், தீய சக்திகளில் இருந்து பாதுகாப்புப்பெறும் கவசமாகவும் மக்கள் இதைக் கருதிப் பயன்படுத்துகின்றார்கள். இந்த மண்ணை நீரில் கரைத்து நோயாளிகளுக்கு குடிக்கக் கொடுக்கின்றார்கள். நெற்றியில் நெஞ்சில் பூசுகின்றார்கள். தீமைகள் தம்மை அணுகாவண்ணம் தம் வீட்டு மூலைகளில் தெளிக்கின்றார்கள்.

மடுத்திருப்பதியின் புனிதத்திற்கும் அருள் வளத்துக்கும் சிறப்பான ஒரு எடுத்துக்காட்டாக 'கோயில் மருந்து' என்று அழைக்கப்படும் இந்த மடு மண் அன்று தொடக்கம் இன்று வரை திகழ்கின்றது.

பாம்பு தீண்டிய நிலையில் இங்கு கொண்டுவரப்படும் மக்கள் இப்பதியை அடைந்ததும் குணம் பெறுகின்றார்கள் என்பதும் மக்களின் ஆழமான விசுவாசமாகும். மடு அன்னை குறைவுபடாத தாயன்புக்கு இலக்கணம்

'கருணை மழை பொழியும் கானகச் செல்வி' என மடு அன்னை அழைக்கப்படுகின்றாள். குறைவுபடாத தாயன்புக்கு இலக்கணமாக இவள் விளங்குகின்றாள். 'சொந்த சுமையைத் தூக்கி தூக்கி சோர்ந்து போனேன்.' என்ற விரக்தியின் வார்த்தைகள்தான் இன்று எப்பக்கத்திலும் ஒலிக்கின்றது. துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள் மத்தியில் மக்கள் ஆறுதல் தேடித் தஞ்சமடையும் தாயாக மடு அன்னை விளங்குகின்றாள்.

'தாயின் மடியில் தலை வைத்திருந்தால் துயரம் தெரிவதில்லை' என்று சொல்வார்களே! அத்தகையதோர் உணர்வுடன்தான் மக்கள் இத்திருப்பதி நோக்கி ஓடோடி வருகின்றார்கள்.

தாயன்பு – அது தனி அன்பு! அது தனித்துவமான அன்புங்கூட! அம்மை அப்பனாக விளங்கும் இறைவனுடைய தாயன்பை, திருவிவிலியம் தெளிவாகச் சொல்கிறது. 'நீங்கள் மார்பில் அணைக்கப்படுவீர்கள். மடியில் வைத்துச் சீராட்டப்படுவீர்கள். ஒரு தாய் தன் குழந்தையைத் தேற்றுவதுபோல நானும் உங்களைத் தேற்றுவேன்.' இறைத் தந்தையின் இத்தகைய அன்பையே மடு அன்னையும் பிரதிபலிக்கின்றாள்.

'பெரும் சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன்' என்று நம் ஆண்டவர் இயேசு கூறினாரே! அந்த ஆண்டவன் இயேசுவின் தாயல்லவா நம் மடு அன்னை! தனயனின் அதே வார்த்தைகளை தாயும் கூறி அழைக்கின்றாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிழக்கு கள நிலவரம் அறிய 27 பேர் கொண்ட உயர் குழு

## அவசரமாக அனுப்பினார் தேர்தல் ஆணையாளர்



மட்டக்களப்பு,செப்.3

கிழக்குத் தேர்தல் களத்தில் வன்முறைகள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன எனக் கூறப்பட்டு வரும் நிலையில், கிழக்கு மாகாணசபைத் தேர்தல் களநிலவரங்களை ஆராய்வதற்காக 27 பேர் அடங்கிய உயர்மட்டக்குழுவொன்றை அங்கு அவசரமாக அனுப்பி வைத்துள்ளார் தேர்தல் ஆணையாளர் நாயகம் தேசப்பிரிய.

கிழக்கின் மூன்று மாவட்டங்களுக்கும் சிறுசிறு குழுக்களாக பிரிந்துசென்றுள்ள தேர்தல் திணைக்களத்தின் இந்த உயர்மட்ட அதிகாரிகள், அங்கு அறிவிக்கப்பட்ட, அறிவிக்கப்படாத தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினரோ அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினரோ உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனரா என ஆராயவுள்ளனர்.

இவ்வாறு மூன்று மாவட்டங்களிலும் ஆய்வுப்பணிகள் முடிவடைந்த பின்னர், அதன் நிலவரம் தொடர்பில் குறித்த உயர்மட்டக்குழுத் தேர்தல் ஆணையாளருக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளது.

அம்பாறை மாவட்டத்துக்கு 11 பேரடங்கிய தேர்தல் திணைக்களத்தின் அதிகாரிகளும், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 9 பேரடங்கிய குழுவும், திருகோணமலைக்கு 7 பேரடங்கிய குழுவொன்றும் இவ்வாறு தேர்தல் ஆணையாளரால் களப்பணிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மூதூர் தேர்தல் தொகுதியிலிருந்து இம்முறை தேர்தல் திணைக்களத்துக்கு உரித்தான வீதிப் போக்குவரத்தினூடாகவே வாக்குப்பெட்டிகள் எடுத்துவரப்படும். இதற்கு படையினரின் உதவி பெறப்படாது என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மூதூரில் பாலம் அமைக்கப்படுவதற்குமுன்னர்விமானப் படையினரின் உதவியுடன் விமானமூடாகத்தான் அங்கு வாக்குப்பெட்டி எடுத்துச்செல்லல், மீளக்கொண்டு வருதல் ஆகிய செயற்பாடுகள் இடம்பெற்றன என்பது தெரிந்ததே.

கிழக்கு மாகாணத்துக்கு விரைந்துள்ள தேர்தல் திணைக்களத்தின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவின் பணிகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்துக்கு தேர்தல் திணைக்களத்தின் அதிகாரிகள் தேர்தல் ஆணையாளரால் அனுப்பிவைக்கப்பட்டனர்.

இதுவரை, தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பில் அறிவிக்கப்பட்ட முறைப்பாடுகள்பற்றி தேர்தல் திணைக்களத்தின் அதிகாரிகள் ஆராயவுள்ளனர்.


அறிவிக்கப்பட்ட, தெரிய வந்த தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளனரா என்பது தொடர்பில் ஆராய்ந்து, அந்தக்குழு தேர்தல் ஆணையாளருக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும் - என்றார்.

அதேவேளை எதிர்வரும் 5ஆம் திகதியுடன் பிரசார நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டுவரப்படவுள்ளதால், இந்தக் காலப்பகுதியில் மூன்று மாகாணங்களிலும் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அதி உச்சத்தில் இருக்கின்றன.

கட்சிகளின் முக்கியபுள்ளிகள் நேரடியாகவே களமிறங்கி பிரசாரத்தை முன்னெடுப்பதால் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது.

கிழக்கு, சப்பிரகமுவ, வடமத்திய ஆகிய மூன்று மாகாணசபைகளுக்கும் எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-சி)

## 200 வருட பழைமைமிகு தல விருட்சம் முறிந்தது



மட்டக்களப்பு,செப்.3

200 வருடங்கள் பழைமையான மட்டக்களப்பு, தாண்டவன்வெளி, குளக்கட்டு கண்ணகை அம்மன் ஆலயத்தின் தலவிருட்சமான மதுரை மரம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வீசிய கடும் காற்று காரணமாக முறிந்து விழுந்துள்ளது.

இந்தமரம் முறிந்து விழுந்ததினால் ஆலயத்தின் முன் பகுதியும் சேதமடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ச)

## கஹவத்தை பாதுகாப்புக்கு மேலதிக பொலிஸ் அணி

இரத்தினபுரி,செப்.3

இரத்தினபுரி - கஹவத்தை பிரதேச பாதுகாப்பை உறுதி செய்ய மேலதிக பொலிஸ் அணியொன்றை அங்கு அனுப்பி வைக்க பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் கடந்த வெள்ளிக்கிழமை கஹவத்தை பகுதிக்குச் சென்று கஹவத்தை பிரதேச பாதுகாப்புக் குறித்து பொலிஸ் மா அதிபர், இரத்தினபுரி பொலிஸ் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார். அதன்போது கஹவத்தை பகுதிக்கு 15 பேர் அடங்கிய மேலதிக பொலிஸ் குழுவொன்றை கடமையில் ஈடுபடுத்துமாறு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார். கஹவத்தை பிரதேசத்தில் அண்மைக் காலங்களில் இரட்டைக் கொலைகள் இடம்பெற்றதால் மக்கள் பீதியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மழையை வேண்டி....



மூதூரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முஸ்லிம்கள் மழை வேண்டி தொழுகையில் ஈடுபட்டனர்.

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸே முஸ்லிம் மக்களின் ஏகோபித்த குரல்

### கட்சியின் வேட்பாளர் தவம்

அம்பாறை,செப்.3

எமக்கு அசௌகரியங்கள் ஏற்படாதவண்ணம் எங்களை வாழவிடுங்கள் என்பது இனவாதமல்ல. முஸ்லிம் காங்கிரஸ்தான் முஸ்லிம்களுக்கு அநீதி ஏற்படுகின்றபோது, அதைத் தட்டிக்கேட்பதற்குரிய முஸ்லிம்களின் ஏகோபித்த குரலாகும் என்று அம்பாறை மாவட்ட மு.கா. வேட்பாளர் ஏ.எல்.தவம் தெரிவித்தார்.

வரிப்பத்தான்சேனையில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டு முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் முன்னர் மழுங்கடிக்கப்பட்டு வந்தன. இதனால் முஸ்லிம்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தனர். 1987 ஆம் ஆண்டு வரையப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில்கூட முஸ்லிம்கள் பற்றி ஒரு வரி கூட எழுதப்படவில்லை. இதனால்தான் முஸ்லிம்களின் தலைவிதியை மாற்ற முஸ்லிம் காங்கிரஸ் புறப்பட்டது.

நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலில் அமெரிக்காவின் பார்வையும் உள்ளது. இந்தியாவும் நேரடியாக களமிறங்கியுள்ளமையால் கிழக்குத் தேர்தல் தற்போதைய காலகட்டத்தில் முக்கியத்துவம் மிக்கதாக உள்ளது.

தற்போது முஸ்லிம்களுக்கு பல்வேறுபட்ட திசைகளிலும் சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது வேதனையளிக்கும் விடயமே. இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டினால் இனவாதம் என்கின்றனர்.

தமிழ் மக்களுக்குத் தீர்வு வேண்டுமென தமிழ்க் கட்சிகள் கோருகின்றபோது முஸ்லிம்களுக்கும் தீர்வுவேண்டும் என்று முஸ்லிம்கள் கோருவது இனவாதமா? - என்றார். (ச)

## அற்ப சொற்ப சலுகைகளுக்காக விலை போகாதீர்

### கூட்டமைப்பு வேட்பாளர் கூறுகிறார்

திருகோணமலை,செப்.3

கிழக்கு மாகாணத் தேர்தலில் வாக்காளர்கள் அற்ப சொற்ப சலுகைகளுக்காக மாற்றுக் கட்சிகளிடம் கையேந்தாமல் - எமது இனத்தைக் காட்டிக் கொடுக்காமல் எமது இலட்சியத்தின் விடிவுக்காக - ஒரு நிரந்தர தீர்வுக்காக - எமது இனத்துக்காக தமிழ்த் தேசியத்துக்கு வாக்களிக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் நல்லதம்பி குமணன் தெரிவித்தார்.

திருகோணமலை நகரில் புறநகர்ப் பகுதிகளில் நடைபெற்ற மக்கள் சந்திப்புகளில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2004இல் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், 2010இல் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தெரிவு செய்த தமிழ் மக்கள் இந்தத் தடவையும் தங்கள் வாக்குகளை ஏனைய கட்சிகளுக்கு வழங்காமல் தமிழ்த் தேசியத்திற்கு வாக்களிப்பதன் மூலம் மேலதிகமாகக் கிடைக்கும் 2 போனஸ் ஆசனங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

இதன் மூலம் கிழக்கு மாகாண ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும். சம்பூர் வாக்காளர்கள் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் தற்போதும் வசித்துவருகின்றார்கள். அவர்கள் ஒருநேர உணவுக்கே அல்லற்படும் நிலையில், போக்குவரத்துக்குப் பணம் செலவழித்து வாக்களிப்பது எப்படி? இதற்கான வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டும்.

முதல் கட்டமாக இடம் பெயர்ந்து வாழ்பவர்கள் இணைக்கப்பட வேண்டும். இவ்வாறே தென்னமரவாடி வாக்காளர்கள் முல்லைத்தீவு, வவுனியா ஆகிய பகுதிகளில் வசித்து வருகின்றார்கள். மூதூர், தம்பலகாமம், பன்குளம், திரியாய், குச்சவெளி வாக்காளர்கள் பலர் திருகோணமலையில் உள்ளார்கள்.

இவர்களுக்கும் வாக்களிப்பதற்கு வசதிகள் ஏற்படுத்துவதுடன் அந்த மக்களும் தமது உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் வாக்களிப்பில் கலந்துகொள்ள வேண்டும்.

வாக்களிப்பதற்கு அடையாள அட்டைகள் இல்லாதவர்கள் தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்று, தங்களது வாக்குகளை அளிக்க வேண்டும்.

மூன்று மாவட்டங்களிலும் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் தங்களது வாக்குகளை வழங்குவதற்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்கள் ஒருமித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலம் எமது ஒற்றுமையை, எமது லட்சியத்தை மீண்டும் ஒரு தடவை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்த வேண்டும் - என்றார்.(ச-40)

## கடும் காற்றுடன் அடைமழை; மக்கள் பாதிப்பு

அம்பாறை,செப்.3

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் பெய்த கடும் காற்றுடன் கூடிய மழையால் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டதோடு, இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டது.

வீசிய கடும் காற்றால் வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டதோடு, மரங்களும் முறிந்து வீழ்ந்தன.

வீதியோரங்களில் நின்ற மரங்கள் வீழ்ந்தமையினால், மின் மற்றும் தொலைபேசிக் கம்பங்கள் சேதமடைந்ததோடு, அவற்றின் செயற்பாடுகளும் சில பகுதிகளில் தடைப்பட்டுள்ளன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** என்னதான் பொறுப்போடு செயற்பட்டாலும், ஏதாவது ஒரு வகையில் பிரச்சினைகள் உருவாகும். பண விஷயங்கள் தொடர்பாக சிலருடன் வாக்குவாதம் செய்வீர்கள். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத சிலர் வரலாம். குடும்பச் செலவுகள் திட்டமிட்டதை விட அதிகமாவதால், கவலை அடையலாம்.

**இடபம்:** வழக்கமான பணிகளை, உடற்பயிற்சிகளைச் செய்வதை பிற்போடலாம். குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்க பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். வீண் வம்பு, விவகாரங்களில் இருந்து விடுபடுவீர்கள். பொழுதுபோக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். மற்றியால் அவதியுண்டு.

**மிதுனம்:** ஓய்வின்றி சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணவரவு வரும். நண்பர்கள் வட்டம் விரிவடையும். தனவரவு வரும். குடும்ப உறுப்பினர்கள் உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். கடந்த கால இழப்பு ஒன்றை ஈடுசெய்யும் வாய்ப்பு உருவாகும்.

**கடகம்:** எதிர்காலத் திட்டம் ஒன்றுக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் அலைய வேண்டி இருக்கும். கோபம், வேகத்தை குறைக்க வேண்டும். வெளியூரில் வசிக்கும் ஒருவர் உங்களை தொடர்பு கொண்டு விடயம் ஒன்றை பகிர்ந்து கொள்வார்.

**சிங்கம்:** சுகம், சந்தோஷம் அதிகரிக்கும். தொல்லை கொடுத்தவர்களே, உங்களுக்கு உதவிசெய்ய முன்வருவர். வேண்டிய பணத்தை புரட்டிக் கொள்ள வாய்ப்பு கிட்டும். வெறுப்பாகச் செயற்பட்ட சொந்த பந்தங்கள் அன்பாக, அனுசரணையாக நடந்து கொள்வர்.

**கன்னி:** எதையும் ஒன்றுக்கு பலமுறை யோசித்து புத்திசாலித்தனமாகச் செயற்படுவீர்கள். கொடுக்கல், வாங்கல்களில் சீரான தன்மை நிலவும். காலதாமதமாக சில வேலைகளை ஆரம்பித்தாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். குடும்ப பெரியவர்களின் யோசனைகளைக் கேட்டு நடப்பீர்கள்.

### நாளை

ஆவணி - 19 செவ்வாய்க்கிழமை 04.09.2012
திதி: சதுர்த்தி மு.இ. 10.58 வரை
நட்சத்திரம்: ரேவதி மு.ப. 10.59 வரை
சுபநேரம்: 10.35-12.05 வரை
ராகு காலம்: 03.05-04.35 வரை

**துலாம்:** ஆரோக்கியத்தில் அக்கறைகாட்டுவீர்கள். திடீரென நிகழும் மாற்றங்களால் அதிகம் யோசிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். உடன்பிறப்புகள் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். திடீர் பயணங்கள் செல்ல நேரிடலாம். நண்பருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். உதவி செய்வதாகச் சொன்ன சிலர் ஏமாற்றலாம். குழந்தைகள் வழியில் வீண் செலவுகளைச் சந்திக்கலாம். தீவிர யோசனைகள், அலைக்கழிப்புகளுக்கு ஆளாகலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் வேலைப்பளு அதிகரிக்கும்.

**தனுசு:** உறவு, பகை பாராமல் உதவி செய்வீர்கள். பண ஆதாயம் தரும் சில வேலைகளை அக்கறையோடு செய்வீர்கள். சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள்.

**மகரம்:** உறவினர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். சக ஊழியர்களால் கோபம் உண்டாகலாம். அயலார் மதிக்கும் வகையிலான காரியங்களைச் செய்வீர்கள். கடனாகக் கொடுத்த பணம் ஒன்று திரும்பி வரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**கும்பம்:** புகழ், கௌரவத்துக்கு பாதிப்பு ஏற்படாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளால் சிரமங்களைச் சந்திக்கலாம். மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ளலாம். சிலருடன் கோயில்களுக்குச் சென்று வழிபடுவீர்கள் உடல்நிலையில் சிற்சில தொந்தரவுகள் ஏற்படும்.

**மீனம்:** உறவினர்கள் சிலர் உங்களை நம்பி வேலைகளை ஒப்படைக்கலாம். கடன் பாக்கிகள் வசூலாகி கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களை குறை கூறுவதைத் தவிர்க்க வேண்டும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த காரியம் ஒன்று, இன்று எதிர்பாராதவிதமாக முடியும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | 3 | | | 8 | | |
| 9 | | | 4 | 2 | | 1 | 3 | |
| 2 | | 8 | | 1 | 9 | | 7 | |
| | 9 | 3 | 1 | | 5 | | | |
| 8 | | | | | | | | 5 |
| | | | 8 | | 6 | 7 | 1 | |
| | 8 | | 5 | 6 | | 9 | | 1 |
| | 5 | 4 | | 9 | 3 | | | |
| | | 9 | | | 1 | 4 | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 8 | 9 | 6 | 2 | 4 | 5 | 1 |
| 9 | 5 | 4 | 7 | 8 | 1 | 6 | 3 | 2 |
| 1 | 6 | 2 | 5 | 4 | 3 | 7 | 9 | 8 |
| 3 | 9 | 6 | 8 | 2 | 4 | 5 | 1 | 7 |
| 5 | 4 | 7 | 1 | 3 | 9 | 2 | 8 | 6 |
| 8 | 2 | 1 | 6 | 7 | 5 | 9 | 4 | 3 |
| 6 | 1 | 5 | 3 | 9 | 7 | 8 | 2 | 4 |
| 2 | 8 | 3 | 4 | 5 | 6 | 1 | 7 | 9 |
| 4 | 7 | 9 | 2 | 1 | 8 | 3 | 6 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## வடமராட்சியில் ஆங்கிலக் கல்வியின் சிகரம்

**OXFORD ENGLISH ACADEMY**

P.K Lane Point Pedro

மிக இலகுவான தமிழ் விளக்கத்துடன் தரமான

**Spoken English With Grammar**

பிரபல ஆசிரியர்

**MR. B. Jyothy**

A/L எடுத்தவர்களுக்கான புதிய பிரிவுகள்

ஆரம்பம் - 05.09.2012

**பிரிவு I - 3.00 pm**

(கணித, விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்கான தனிப்பிரிவு)

**பிரிவு II - 4.00 pm**

(கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான தனிப்பிரிவு)

**குறிப்பு :** எமது நிறுவனம் பருத்தி நகரில் அமைந்துள்ளதால் தூர இடங்களில் இருந்து அதிக மாணவர்கள் வந்து கற்க முடிகின்றது.

அனுமதியை அலுவலகத்தில் பெறவும்

(T.P : 077 6689066)

(சி/3059)(6-7-8)



## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
24 ★ 04 ★ 1937



மறைவு
25 ★ 07 ★ 2012

திருமதி **கதிரவேலு புஸ்பவதி** (செல்லம்மா)

நிஜங்கள் நிழல்கள் ஆனாலும்
வரும் நினைவுகள் மாறுவதில்லை
உங்கள் உடல் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
நினைவுகள் எம்மை விட்டு அகலவில்லை
அவனியில் உங்கள் நினைவால்
அனுதினமும் நாம் வாடுகின்றோம்

கடந்த (25.07.2012) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் திருமதி கதிரவேலு புஸ்பவதி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.09.2012) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெக்கி லேன், சண்டிலிப்பாய் (22456)(6.7.8) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் 16ஆவது அரச தலைவர்கள் மாநாட்டில் பங்குபற்றச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியைச் சந்தித்தபோது....

# தனியார் வகுப்புகளுக்குத் தடை; திணைக்களத்துக்கு அதிகாரம் உண்டு

## பரீட்சைகள் ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு,செப்.3

தனியார் வகுப்புகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.புஸ்பகுமார தெரிவித்தார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் குழப்பநிலைகள் ஏற்பட்டிருந்ததாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு தனியார் வகுப்புகளே காரணம் என்று அவர் கூறினார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் பாடசாலைகளின் பாடத்திட்டங்களுக்கு அமையவே தயாரிக்கப்பட்டன. எனினும் தனியார் வகுப்புகளில் பாடத்திட்டங்களுக்கு அப்பால் சென்று கற்பிக்கப்பட்ட பாடங்கள் காரணமாக பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வாறான தனியார் வகுப்புகள் தாம் கற்பித்த விடயங்கள் பரீட்சையில் உள்ளடக்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்தநிலையில் குறித்த தனியார் வகுப்புகளைத் தடைசெய்யும் அதிகாரம் இலங்கையின் பரீட்சைகள் திணைக்களத்துக்கு உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (ச)

# 8 மாதங்களில் 28ஆயிரம் பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிப்பு

## கொழும்பு மாவட்டம் முன்னிலை

கொழும்பு,செப்.3

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 28 ஆயிரம் பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒகஸ்ட் மாதத்தில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மூவாயிரத்து 487 பேராக பதிவாகியுள்ளது என்று அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு குறிப்பிடுகின்றது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன் இந்த மாவட்டத்தில் வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் ஆறாயிரத்து 683 பேர் பதி வாகியுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் ஐயாயிரத்து 263 பேரும், களுத்துறை மாவட்டத்தில்


**கொழும்பு மாவட்டத்தில் வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் ஆறாயிரத்து 683 பேர் பதிவாகியுள்ளனர்.**

ஆயிரத்து 803 பேரும் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதவிர கண்டி, ஹம்பாந்தோட்டை, குருநாகல், இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களிலும் அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று அமைச்சு குறிப்பிடுகின்றது. (ச)

# தமிழுக்கு உரிய இடமில்லை பல தடவை பார்த்திருக்கிறேன்

## இது தேசிய மொழிக் கொள்கைக்கு முரணானது என்கிறார் வாசுதேவ



கொழும்பு,செப்.3

தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்படாவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசியமொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

தமிழ் மொழிக்கு உரிய சந்தர்ப்பம் வழங்குவதில்லை, அதனை நான் நேரில் பல தடவை பார்த்திருக்கின்றேன். இவ்வாறான செயற்பாடுகள் தேசிய மொழிக் கொள்கைக்கு முரணானது என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதிகமான அரச நிறுவனங்கள் தேசிய மொழிக் கொள்கையைப் பின்பற்றுவதில்லை. இனங்களுக்கு இடையில் சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அமைச்சு செயலாளர்கள், அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட உள்ளது என்று அவர் கூறினார். தேசத்துக்கு மகுடம் (தயட்ட கிருல) கண்காட்சியின் போது தேசிய மொழிக் கொள்கை மீறப்பட்டது. ஆனால் இந்தக் கண்காட்சிக்குப் பொறுப்பான அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய உடனடியாகப் பிழையைத் திருத்திக்கொள்ள நடவடிக்கை எடுத்தார். இது பாராட்டுக்குரியது என்று அவர் கூறினார். அரச நிறுவனங்கள் தேசிய மொழிக் கொள்கையைப் பின் பற்றத் தவறினால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தயார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ச)

**இனங்களுக்கு இடையில் சமத்து வத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி உரிமைகள் வழங்கப்பட வேண்டும்**

# மிருக பலியைத் தடைசெய்ய நாடாளுமன்றில் சட்டமூலம்

## ஹெல உறுமய நடவடிக்கையில்

கொழும்பு,செப்.3

இலங்கையில் இடம்பெற்று வருகின்ற மிருக பலி பூசையை நிரந்தரமாகத் தடைசெய்வதற்கான சட்டமூலமொன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது குறித்து ஆளுந்தரப்பின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்தச்சட்டமூலத்தைநாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது குறித்து அக் கட்சி தீவிர ஆலோசனைகளில் ஈடுபட்டு வருகின்றது என குறித்த கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னேஸ்வரம் காளி கோயிலில் நடைபெறுவதற்கு இருந்த மிருக பலி பூசை ஜனாதி[illegible] மஹிந்த ராஜபக்ஷவின் [illegible]வேண்டு கோளை யடுத்து [illegible]கோயில் நிர்வாகத்தால் நி[illegible]த்தப்பட்டது.

காளி[illegible] கோயிலில் நடைபெறவி[illegible]ந்த மிருக பலி பூசை த[illegible]த்து நிறுத்தப்பட்டதையடு[illegible]தே, முழு இலங்கையிலும் [illegible]ருக பலி பூசையை நிரந்தர[illegible]கத் தடைசெய்ய வேண்[illegible] மன்பதைக் கருத்திற்கொ[illegible]டு ஜாதிக ஹெல உறுமய [illegible]சி மேற்படி சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

முன்னேஸ்வரம் காளி கோயிலில் வருடாந்தம் நடைபெற்று வரும் மிருக பலி பூசைஇவ்வருடமும் நடைபெறவிருந்தது. புத்தரின் புனித கபிலவஸ்து சின்னம் இலங்கையில் தரிசனத்துக்காக வைக்கப்பட்டுள்ள புனிதமான இத்தருணத்தில் மிருக பலி பூசையை நடத்தவேண்டாம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னேஸ்வரம் காளி கோயில்நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்தநிலையில், ஜனாதிபதியின் வேண்டுகோளையடுத்து மிருக பலி பூசை நிறுத்தப்பட்டது என கோயிலின் பிரதம குருவான சிவபாத சுந்தரம் அறிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே ஜாதிக ஹெல உறுமய குறித்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின் றது. (ச-சி)

# தேர்தல் முடிவின் பின்பே முதலமைச்சர் தெரிவு

## பஸில் தெரிவிப்பு

கொழும்பு,செப்.3

தேர்தல் முடிவுகளின் பின்னரே முதலமைச்சர் நியமனம் பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித் தார்.

வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் வெற்றியீட்டியதன் பின்னரே, முதலமைச்சர் பதவிகள் குறித்து தீர்மானிக் கப்படும் என்று அவர் கூறி னார்.

முதலமைச்சர் தெரிவு குறித்து இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை. மக்களின் தீர்ப்பின் பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். முதலில் தேர்தலில் வெற்றியீட்ட வேண்டும். பின்னரே பதவிகள் குறித்த முடிவுகளை எடுக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

# பணம் செலவிட்டும் பாதுகாப்பு எங்கே?

## ஐ.தே.க. கேள்வி

பாதுகாப்புக்காக பணம் செலவிடப்பட்ட போதிலும், உரிய முறையில் பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. பொதுமக்களின் வரிப் பணத்தை அரசு பாதுகாப்புச் செலவுகளுக்காகப் பயன்படுத்தி வருகின்ற போதிலும், உரிய பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக 108 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பது நகைப்புக்குரிய விடயமாக மாறியுள்ளது என்று அவர் கூறினார். ஆளும் கட்சி அரசியல்வாதிகள் சட்டத்தை கையில் எடுத்துள்ளதாகவும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் தரப்பினர் வேடிக்கை பார்த்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார். (ச)

# ஜெயலலிதாவை இலங்கை வருமாறு மீண்டும் அழைப்பு

கொழும்பு,செப்.3

வடமாகாணத்தில் உள்ள நிலைமைகளை நேரடியாக வந்து பார்வையிடுமாறு, தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு இலங்கை அரசு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது.

புதுடில்லியில்இடம்பெற்ற விருந்து நிகழ்வொன்றில் கலந்து கொண்ட இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

வடமாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் இடம் பெறுகின்ற பகுதிகளைத் தவிர, மக்கள் தங்கி இருந்த ஏனைய பகுதிகளில் மீள்குடியேற்றங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

அரசு வடக்கில் தமிழ் மக்களுக்கு போதுமான சேவைகளை வழங்கி வருகிறது. இவற்றை நேரடியாகப் பார்க்காமல், தமிழகத்தில் இருந்து கொண்டு கண்டன அறிக்கைகளை விடுவதில் நியாயம் இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் ஜெயலலிதா ஜெயராம் இலங்கைக்கு வந்து, வடக்கு தமிழர் பிரதேசங்களுக்குச் சென்று நேரடியாகப் பார்வையிட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

# அலுக்கோஸ் நியமனத்தின் பின்பே மரணதண்டனை

## சிறைச்சாலைகள் அமைச்சர் தகவல்

அலுக்கோஸ் நியமனத்தின் பின்னர் மரணதண்டனை நிறைவேற்றப்படும் என்று இலங்கையின் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரஸ்ரீ கஜதீர தெரிவித்தார்.


இலங்கையில் தூக்குத்தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படு கின்ற போதிலும் அவை நிறைவேற்றப்படுவதில்லை.எனவே நாட்டின் குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், தூக்குத்தண்டனை நிறைவேற்றத்துக்குரிய [illegible] வழங்கினால் அதனை நடைமுறைப்படுத்த தமது அமைச்சு தயாராக உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கந்தசாமி தர்மராசா (பொலிசர்)



சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், இல. 15, குட்செட் றோட், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தர்மராசா நேற்று முன்தினம் (01.09.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், செல்லையா- கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானாம்பிகையின் அன்புக்கணவரும், காசிராசா, மனோரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயா, காலஞ்சென்ற ஞானராசா (லண்டன்), உமா, வாணி (கனடா), மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இரவீந்திரன், தேவநளினி (லண்டன்), உருத்திரலிங்கம், உதயகுமார் (கனடா), சபேஷன் ஆகியோரின் அன்பு மாமானும், அனோஜன், நிரோஜன், டுலக்சன், கீர்த்தனா, கீர்த்திகா, அபிலாஷ், ஆகாஷ், பவித்திரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தோணிக்கல் மாயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக் கிரியை மேற்கொள்ளப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 15, குட்செட் வீதி,
வவுனியா.

தகவல்:
மனைவி

# தர்மலிங்கம் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,செப்.3

மானிப்பாய் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் 29 ஆவது நினைவுதினம் நேற்று முன்தினம் சனிக்கிழமை தாவடியில் உள்ள நினைவுத் தூபியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நினைவுத் தூபிக்கு தீபச் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன் மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. வலி.தென் மேற்கு உறுப்பினரும் நினைவுக்குழு தலைவருமான கே.கௌரிகாந்தன் தலைமையில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த அஞ்சலி நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பிரமுகர்களான சி.வி.கே.சிவஞ்ஞானம், வலிகாமம் மேற்கு பிரதேசசபை தலைவர் திருமதி ஐங்கரன், வலி.தென்மேற்கு, வலி தெற்கு மற்றும் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(16-115)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

வவுனியா, பண்டாரிக் குளம் பாடசாலை வீதியைச் சேர்ந்த ராஜன் நிஷாந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை உட்பட ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கொடிகாமம் ஏ-9 வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர் தொடர்புகொள்ளவும்.
தொ.பே. 077 0201 186 (21515) (45.6.7)

## விற்பனையை இலகுவாக்கிக் கொள்ள.....

எந்த வொரு வியாபாரத்திற்கும் விற்பனை மற்றும் களஞ்சியம் கையிருப்பு என்பவற்றை கணினியின் துணைகொண்டு தரவுகளை பேணுவதற்கு உங்கள் தேவைக்கு ஏற்றபடி (மென் பொருள்) Soft ware develop செய்து பெற்றுக்கொள்ள இன்றே அழையுங்கள். எமது சில வாடிக்கையாளர்

* The lover Jaffna
* Style park Jaffna
* Raaj wine Stores Chunnakam
* Mubarak Tex - Batticaloa
* Topaz Jaffna
* Digital Electronics Jaffna
* Alumex - Maruthanarmadam
* Mahanathi Tex - Batticaloa

தொடர்பு: 075 966 7588, 077 1028 593 (22304) (45.6.7)

## வீடு வாடகைக்குண்டு

பருத்தித்துறை வீதி, நுணாவில் மேற்கில் 8 அறைகள், இரண்டு இணைந்த குளியல் அறைகள் மற்றும் சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு வாடகைக்குண்டு நிறுவனங்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 077 195 2574
021 300 1177
(22465)(45-6-7)

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி - பால் பண்ணைக்கு அருகில் இரண்டு பரப்பு காணியில் அமைந்துள்ள சிறிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 1952 574
021 300 1177
(22461)(45-6-7)

# Infotech Computer Education



கணனிப் பாடநெறிகள் அனைத்திற்கும்

Microsoft Office
Desktop Publishing
Web Designing
Computer Hardware
Diploma in Office Automation
Diploma in Graphic Design
Diploma in Video Editing
Dip in Hardware & Networking
Tally Accounting Technician
Dip in Computerized Accounting
Dip in Application Development
Diploma in Software Engineering

Mega 2012
மெகா புலமைப் பரிசில்
பரீட்சை எதுவுமின்றி நேரடியாக
75% Offer
கட்டணக்கழிவு பெறும் வாய்ப்பு
After A/L Join


ENGINEERING DRAWING & AutoCAD
(க.பொ.த(உ.த) கணிதப்பரீட்சை முடிந்த மாணவர்களுக்கான புதிய விசேட பிரிவுகள்
05.09.2012 புதன்கிழமை மு.ப 9.00 முதல் ஆரம்பம்.)

# 3, Ramanathan Road,
Kaladdy Junction, Jaffna.
Phone: 021 492 2813


சிங்கள வகுப்புக்களுக்கான (Batch-IV) அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன (22166)(6-7)

# விசேட விலைக்கழிவில்

MASTER Generator 2.5 K.W
(Kerosene) மண்ணெண்ணெய்
Imported by :
Abbe (Pvt) Ltd Colombo



இப்போது யாழ் நகரில் கிடைக்கும் இடங்கள்



**Jaffna Electrical Show Room**
141, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 2225766


**Jaffna Electronic Mart**
279, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
T.P : 021 2227657

**Malabar**
81, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
T.P : 021 2222043

**கிளிநொச்சி நகரில்**
**Jaffna Electrical Show Room**
135, ஏ9 வீதி, கிளிநொச்சி
T.P : 021 2280008

(C/3054)(6.7.8)

# IIS CITY CAMPUS இல் இணைந்து புத்தம் புதிய TOSHIBA i3 LAPTOP கணனி ஒன்றினை பரிசாக பெற்றுக் கொள்ளுங்கள்



edexcel BTEC

# HND
in
COMPUTING
CIVIL ENGINEERING
QUANTITY SURVEYING
BUSINESS MANAGEMENT

மாணவர்களே!!!
September 2012 பிரிவிலே மேற்குறிப்பிட்ட HND கற்கை நெறிகளுக்கு தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்களுக்கு TOSHIBA i3 Laptop கணனி ஒன்றினை IIS பரிசாக வழங்குகின்றது. இது வரை எந்த நிறுவனமும் சிந்திக்காத வழங்காத இச்சலுகை இப்பிரிவிற்கு மட்டுமே.

புதிய பிரிவு ஆரம்பம் : 14.09.2012 காலை 10.00 மணி


மேலதிக விபரங்களுக்கு : 021 4 900 900

IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk
(பி/3060)(6-7)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் நடராசலிங்கம்
கேமளன் (மயூரன்)
(புடைவைக்கடை)

திதி: திருதியை



அன்னையின் மடியில்
14.08.1981

முருகனின் அடியில்
31.08.2007

பூவுலகில் என்னைப் படைத்த கடவுளே!
பாவியான் செய்த குற்றம் ஏதோ?
பாதியில் நீ பறித்ததேனோ?
வாழத் துடித்த எனக்கு
வடிவமைத்த விதியின் கோலம் இதுவோ?
என் குல ஒளி விளக்கு ஒளிமங்கி விட்டதுவே
ஏன் இந்தக் கொடுமையினைக் கொடுத்து இரசித்தாயோ?
அப்பா என்ற மொழியினைப் பிஞ்சு வாயால் அழித்துவிட்டு
அனல் பொங்கு மென் மனதில் ஆணியாய் அறைந்ததேனோ?
என் குடும்பம் சிறந்திடவே ஆதரிப்பார் யாரோ?
ஆத்மாவின் குரலாய் உனை நான் கேட்கின்றேன்.

"மயூறபதி"
கண்டுவில்லேன், டச்சு வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்
(21512)(45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும் பெரும் பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

2012 ஆம் ஆண்டிற்கான மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்ப மாகின்றன.

எனினும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப் பணிகள் இடம்பெறும் பாட சாலைகள் நாளை ஆரம்பிக் கப்படமாட்டாது.

நாடளாவிய ரீதியில் திருத் தப் பணிகள் இடம்பெறும் 22 பாடசாலைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது. (3)

# ஈழத் தமிழர்களை அரச செலவில் விரும்பும் நாட்டுக்கு அனுப்புங்கள்

## விஜயகாந்த் கோரிக்கை

ஈழத் தமிழர்கள் செல்ல விரும்பும் வெளிநாடுக ளுக்கு அரசே செலவுசெய்து அனுப்பிவைக்க வேண்டும் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்தார்.

சென்னை மாவட்ட தே.மு.தி.க. சார்பில் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா விருகம்பாக்கத்தில் நடைபெற்றது.விழாவில் நல உதவிகள் வழங்கி விஜய காந்த் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது:-

அ.தி.மு.க. ஆட்சியில் ஒளிமயமான எதிர்காலம் கிடைக்கும் என்று அமைச் சர் முனுசாமி கூறியுள்ளார். நிச்சயம் ஒளிமயமான எதிர் காலம் கிடைக்கப் போவ தில்லை. எலி மயமான எதிர் காலம் தான் கிடைக்கும். ஒரு குழந்தையை எலி கடித்த பிறகுதான் மருத்துவமனையை அமைச்சர் பார்வையிட்டு, நாய், பூனை, எலிகளைப் பிடிக்க உத்தரவிட்டுள்ளார். இதற்கு முன்பே அமைச் சர்கள் மருத்துவமனையைப் பார்வையிட்டு ஆய்வு செய் திருக்க வேண்டாமா?



புதிய தலைமைச் செயல கம், அண்ணா நூற்றாண்டு நூலகம் போன்றவற்றை மருத்துவமனையாக மாற்றப் போவதாகக் கூறி வருகின்ற னர். அதை மாற்றுவதற்குப் பதில் இப்போது இருக்கும் மருத்துவமனைகளை சுகா தாரமாக இயங்கச் செய்யுங் கள்.

ஈழத் தமிழர்களைத் திறந்தவெளி முகாமுக்கு அனுப்ப வேண்டும் என்று செந்தூரன் 20 நாள்களாகத் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்தார். சிறப்பு முகாம் களில் இருக்கும் ஈழத்தமி ழர்களுக்கு சாப்பாடு சரி யில்லை என்பது உட்பட பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்க்க அரசு முற்படவில்லை.

இலங்கைத் தமிழர்கள் ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளுக்குச் சென் றால், அதை எதற்கு அரசு தடுக்க வேண்டும்? அந்தத் தமிழர்கள் விரும்பும் நாட் டுக்கு அரசு செலவு செய்து அனுப்பவேண்டும். பிரபா கரன் உயிரோடு இருந்த வரை அவருக்கு ஆதரவாக யாரும் குரல் கொடுக்க வில்லை. இப்போது அவர் இல்லாத நிலையில், டெசோ மாநாடு நடத்தி தீர்மானம் நிறைவேற்று கின்றனர். இதனால்ஒருபயனும் இல்லை - என்றார். (3)

# உண்ணாநோன்பை கைவிட்டார் செந்தூரன் ஆர்ப்பாட்டத்தை நிறுத்தினார் வைகோ

ஈழ மைந்தன் செந்தூரன் உண்ணாவிரதத்தைக் கைவிட்டதைத் தொடர்ந்து ம.தி.மு.க. நடத்தி வந்த தொடர் உண்ணாவிரதம் மற்றும் இன்று நடைபெற இருந்த ஆர்ப்பாட்டம் என்பவற்றை ரத்துச் செய்வதாக வைகோ அறி வித்துள்ளார். இது தொடர்பாக வைகோ வெளியிட்ட அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:-

கடந்த 27 நாள்களாக உண்ணாவிரதம் இருந்த இலங்கை மைந்தன் செந் தூரன், உயிருக்கு ஆபத்தான நிலையில் அரசு அதிகாரி களின் வேண்டுகோளை ஏற்று உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்திக் கொண்டார். தமிழக அரசுக்கு இக்கட்டான ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்று கருதியதே இந்தப் போராட் டத்தை செந்தூரன் நிறுத்தி னார்.

**தமிழக அரசுக்கு இக் கட்டான ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்று அவர் கருதியதே இப் போராட்டம் நிறுத்தக் காரணமாகும்.**

சிறப்பு முகாமில் இருப்ப வர்களை திறந்தவெளி முகாம்களுக்கு அனுப்ப வேண்டும் என்பது அவரின் நியாயமான கோரிக்கை யாகும். எனவே ம.தி.மு.க நடத்திய தொடர் உண்ணா விரதத்தை நிறுத்திக்கொள் வதுடன், முன்னதாக அறி வித்த செப்ரெம்பர் 3ஆம் திகதி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெறாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது. (3)

## இந்தோனேசிய கடலில் மீட்கப்பட்ட இலங்கையர்கள் முகாமுக்கு மாற்றம்

இந்தோனேசிய கடற்பகுதியில் உணவு, குடிநீர் இல்லாத நிலையில் தத்தளித்துக் கொண் டிருந்த இலங்கையர்களை இந்தோனேசிய பொலிஸார் தடுப்பு முகாம் ஒன்றுக்கு மாற்றி யுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் 50 இலங்கை அகதிகள் இந்தோனேசி யாவின் சுமத்திரா தீவுக்கு அருகில், அவர்கள் பயணித்தபடகுபழுதடைந்த நிலையில் மீட்கப் பட்டனர். அவர்கள் கடந்த 9 நாள் களாக நீரோ, உணவோ இல்லாது இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அவர்களைக்கரை சேர்த்த மீனவர்கள், பின்னர் பொலிஸாரிடம்கையளித்தனர்.

தற்போது குறித்த 50 பேரையும் இந்தோ னேசியாவில் அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம் ஒன்றுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக் கப்படுகிறது. (3)

## அலங்காரத் திருவிழா

அராலி கிழக்கு மெய்ஞான வைரவர் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்ப மாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இறுதி நாளான 5 ஆம் திகதி புதன் கிழமை 108 சங்குகள் வைத்து சங்காபி சேகம் நடைபெற இருக்கின்றது. (3)

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி றோட் - யாழ்ப்பாணம்
2013 A/L
DAY CLASS
திங்கள் தொடக்கம் வெள்ளி
(2012 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது)
PHY - திரு. குகன்
CHE - திரு. சிவத்திரன்
COM.MATHS - திரு. செந்தில்ராஜ்
திரு. செந்தில்நாதன்
BIOLOGY - வழமையான ஆசிரியர்
திரு. கெங்காதரன்
01.09.2012
காலை 8.00 மணி ஆரம்பமாகிவிட்டது
(சி/3101)(6-7-8)

காணிவிற்பனைக்கு
சங்குவேலி தெற்கு, மானிப்பாயில் வீடு, கிணறு,தண்ணீர்த் தாங்கி போன்ற வசதி களுடன் பரப்பு 04, குளி 07 காணி விற்ப னைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 631 5965
021 321 7867
(சி/2993)(5-6-7)

வேலை ஆள்கள் தேவை
புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள வர்கள், பழக விரும்புபவர்கள் ஆண், பெண் இருபாலாரும் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தனம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
22 -A, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(22127)(45-6-7)

சிறு நீரகம் தேவை
35 வயதுடைய ஒருவருக்கு B+ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.
தொடர்பு: 077 9631 287
(22430) (6.7.45)

SHAALI MARKETING
Reg No. J/DS/BR/1396/2012
பதவி வெற்றிடம்
யாழ். நகரில் இயங்கிக்கொண்டிருக்கும் சாலி மார்கெற்றிங் (Shaali Marketing) நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
அலுவலக உத்தியோகத்தர் (Administration Officer)
பிரதேச விற்பனை முகாமையாளர் (Area Sales Manager)
கணக்காளர் (Accountant)
மேற்பார்வையாளர் (Supervisor)
விற்பனைப்பிரதிநிதி (Sales Rep)
இலிகிதர் (Clerk)
கணினி இயக்குனர் (Computer Operator)
விண்ணப்பிக்க தகுதியுடையோர் 10.09.2012 ஆம் திகதிக்கு முன்பதாக தங்கள் சுயவிவரக்கோவை உள்ளடங்கலான விண்ணப்பத்தினை சாலி மார்கெற்றிங், 11/5, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்
தகைமை :
1. க.பொ.த உயர்தர பரீட்சை தோற்றியிருத்தல்
2. முன் அனுபவம் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு:
021 2051060, 077 4299052
பணிப்பாளர்,
சாலி மார்கெற்றிங்.
(21514)(6.7.8)

புதுக்கடைத் திறப்பு விழா
ஹரிஷ் அன்பளிப்பு அகம்
HARISH GIFT CENTRE
இன்று (03.09.2012) திங்கட்கிழமை
இல. 18A, மின்சார நிலைய வீதி, நவீன சந்தை (வெளிப்புறம்) யாழ்ப்பாணம்.
நாகராஜா (ராஜன்) ( சிறிராஜன் பென்சி)
(சி/3051)(6.7.8)




உலக சுகாதார நிறுவனத்தின் (W.H.O) எச்சரிக்கை
செல்போன் பாவனையால்,
புற்றுநோய், மூளைக்கட்டி, மாரடைப்பு கருச்சிதைவு ஏற்படலாம் !!!
அறிமுகமாகிறது...
KEVA
ANTI R...
Tested & Endorsed by World Renowned Institutions
*Proprietary ...
& International Certifications by ASCB(E), UNITED KINGDOM
செல்போன் பாவனை பின்வருவனவற்றிற்கு காரணமாய் இருக்கின்றதென ஆராய்ச்சிகள் காட்டுகின்றன
மூளைக்கட்டி Source: International Encyclopedia of Neuro science, USA
மாரடைப்பு Source: Department of Heart Diseases, S. Filippo Neri Hospitel, Rome, Italy.
புற்றுநோய் Source: Institute of Medical Biostatistics, Germeny
கருச்சிதைவு Source: Kaiser Foundation Research Institute, Oakland, CA, USA
Rs.500 upward Islandwide pharmacies
நாடுபூராகவும் முகவர்கள் தேவை. www.nebosint.com
ABILA MARKETING SERVICES
Hotline :077 7795611 E-mail : info@abilamarketing.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளிநாடு சென்று அனைவரையும் பிரிந்திருந்து இயந்திரமாய் உழைப்பதைக்காட்டிலும் எமது ஊரில் கண்ணிறைந்த கணவரோடும் எமது உயிரான பிள்ளைகளோடும் எமது நிலைக்கேற்ற வகையில் உழைப்பது எவ்வளவு மனத்திருப்தியைத்தரும். எனவே அன்பான சகோதரிகளே கூடியபாகம் எமது நாட்டில் கிடைக்கின்ற உங்கள் ஆளுமைக்கேற்ற வேலைகளைச் செய்யுங்கள் அப்போது அனைவரும் சந்தோசமாக இருக்கலாம்.

சு.சிவாஜினி

# குடும்பப் பெண்கள் வெளிநாடு செல்லவேண்டாமே...



முயற்சித்து அயராது உழைத்து வாழும் பெண்களை நாம் போற்றுகின்றோம். இருந்தும் இன்று அநேகமான பெண்கள் தமது குடும்ப வறுமை காரணமாக தமது பிள்ளைகளை தமது உறவினரோடு விட்டு உழைப்பின் நிமித்தம் அரேபிய நாடுகளை நோக்கிச்சென்று உழைப்பது என்பது ஒரு தாய்மைக்கு ஆத்ம திருப்தியைத் தரப்போவதில்லை.

உண்மையில் எங்கள் சகோதரிகள் பணத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எதையுமே அலசி ஆராய்ந்து பார்க்காமல் தூரதேசம் சென்று விடுகிறார்கள். இதனால் அந்தக் குடும்பமே சிதைந்து சின்னா பின்னமாகி விடுகின்றது.

இந்த வகையில் இன்று நாம் வாழ்கின்ற எமது புனித பூமியில் எத்தனையோ வேலைவாய்ப்புக்கள் எம் வரவுக்காய் காத்துக்கிடக்கின்றன. இருந்தும் சில பெண்களுக்கு இங்கு வேலை செய்து தமது குடும்பத்தைக் காப்பாற்றுவது அறவே பிடிக்காது. இங்கு வேலைக்கு ஏற்ற ஊதியம் சில இடங்களில் கிடைப்பதில்லை என்பது உண்மை தான். இருந்தாலும் இங்கு இருப்பவர்கள் அனைவரும் எமது உறவுகளே. சாதி சமய வேறுபாடுகளை துறந்து வாழும் நிலையில் அனைவரும் எம் பாச உறவுகளே. அதனால் எமது பிரச்சினைகளை வெளிப்படையாக கதைக்கலாம். அன்னிய நாட்டில் நின்று அதுகும் அவர்களுக்குரிய மொழி தெரியாமல் கதைக்க முடியுமா?

குறிப்பாக எங்கள் சகோதரிகள் வெளிநாட்டுக்குச் சென்று செய்யும் வேலையை இங்கு செய்யமாட்டார்கள். ஏனெனில் வெட்கம், கௌரவக் குறைவு என எண்ணி விடுகிறார்கள். செய்யும் தொழிலே தெய்வம். அந்த வகையில் எமது நன்நடத்தைக்கும் குடும்ப நிலைகளுக்கும் கௌரவப்பாதிப்பேற்படாமல் எமது திறமைக்கு எற்ற வகையில், நாம் வாழ்கின்ற சமூகத்துக்கும் பயன் தரும் விதத்தில் தொழில் அமைந்தால் ஏன் வெட்கப்படவேண்டும்.

வெளிநாடு சென்று அனைவரையும் பிரிந்திருந்து இயந்திரமாய் உழைப்பதைக் காட்டிலும் எமது ஊரில் கண்ணிறைந்த கணவரோடு எ்மது உயிரான பிள்ளைகளோடும் இருந்து எமது நிலைக்கேற்ற வகையில் உழைப்பது எவ்வளவு மனத் திருப்தியைத்தரும். எனவே அன்பான சகோதரிகளே கூடியபாகம் எமது நாட்டில் கிடைக்கின்ற உங்கள் ஆளுமைக்கேற்ற வேலைகளைச் செய்யுங்கள் அப்போது அனைவரும் சந்தோசமாக இருக்கலாம். பெண்களான நாம் எப்போதும் எமது குடும்பத்துகாக அனைத்து சுகதுக்கங்களையும் துறந்து உழைக்கும் மகாசக்திகொண்டவர்களாக இருக்க வேண்டும். தியாகச் செயல்களைச் செய்கின்றபோது இருக்கின்ற ஆத்மதிருப்தி வேறுஎதிலுமே கிடைக்கப்போவதில்லை.



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .


# தேடித்தருவாயா?



தினமும் ஆயிரம் கனவுகளை
என்னுள் உருவாக்கி
என் இனிய வாழ்வை உனதாக்கி
இன்று என் மனதில்
வேதனையை கருவாக்கியவனே!
உன்னிடம் ஓர் வினா எழுப்புகின்றேன்
சீர்வரிசை தந்து தானே
உன்னை நான் கரம் பிடித்தேன்.
இருந்தும் என்னிடம் ஏது
குறை கண்டாய்
மாற்றாந் தோட்டத்து
மல்லிகையை மணப்பதற்காக
பத்தினி என் கற்பை சந்தேகித்தாய்.
இராமனென நீயிருந்தால்
தீக்குளித்து நிரூபிப்பேன்
சீதை நானென நீயோ கோவலனாய்
கோலம் கொள்கிறாய்.
தொடர்கதையான என் பந்தத்தை
அறுத்தெறிந்து புது சொந்தம்
தேடுபவனே
நான் வேண்டுவதும்
நான் கூறுவதும் இதுவே
நீ தொலைத்த என் வாழ்வையும்
உன்னால் தொலைந்த என் நின்மதியையும்
தேடித்தந்துவிட்டு செல்
உன் மாதவியுடன்

வந்தனா , கரவெட்டி

# பெண்களே தோழமைகளை தொலைத்து விடாதீர்கள்



பெண்கள் படிக்கும் போது ஒரு ஊரிலும் கல்யாணம் ஆனவுடன் இன்னொரு ஊரிலும் வாழ்கிறார்கள். வாழப் போகும் வீட்டில் இருக்கிறவர்களை அனுசரிப்பதற்கும் பிரச்சினைகளை சமாளிப்பதற்கும் குழந்தைகளை பெற்று வளர்த்து பள்ளி அனுப்புவதற்குள்ளும் திரும்பிப் பார்த்தால் ஐந்து வருடம் ஓடியிருக்கும். அதற்குள் தோழிகள் எல்லோரும் காணாமல் போயிருப்பார்கள்.

இதற்கிடையில் பெண்களும் சும்மா இருப்பதில்லை. பக்கத்து வீடுகளில், கடைக்குப் போகும் இடங்களில், குழந்தைகள் படிக்கும் பள்ளிகளில் பார்க்கும் பெண்களை எல்லாம் தோழிகளாக்கி விடுவார்கள். பார்த்தவுடன் பழகவும் ஒட்டி கொள்ளும் குணமும் இல்லாவிட்டால் என்றோ பெண்ணினமே ஒழிந்திருக்கும். இப்படி வாழ்நாள் முழுவதும் தோழிகளை ஏற்படுத்தி கொள்வதால் தான் தினமும் புதுப் புது எண்ணங்களுடன் அன்று பூத்த புது மலர் போல் வலம் வர முடிகிறது. குடும்பத்தை, சமுதாயத்தை புத்துணர்வோடு வைத்து கொள்ள முடிகிறது. ஆண்களால் நமக்கு ஏற்படும் மனக் குறைகளை எல்லாம் மறக்கமுடிகிறது. பகிர்ந்து கொள்ளமுடிகிறது. நாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைக்க முடிகிறது.

ஆனாலும் மனதின் எங்கோ ஒரு ஓரத்தில் நம் பள்ளி, கல்லூரி வாழ்க்கையின் சந்தோசங்கள் நிழல் படமாய் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன. எப்போதாவது ஒரு முறையாவது, என் இந்துவையோ, அமுதாவையோ, சரோவையோ, ஜீவாவையோ, வரலக்ஷ்மியையோ பார்க்கமாட்டோமா என்று தொலைந்து போன தோழிகளை தேடுகிறது மனது. இப்போது படிக்கும் பெண்களுக்கு எத்தனை ஊடகங்கள் தோழமையை பரிமாறிக்கொள்ள இருந்தாலும், திருமணமான உடன் அவர்களின் தோழமைகள் காணாமல் போய்விடுகிறது.

பெண்களே தோழமைகளை தொலைத்து விடாதீர்கள். தொலைத்து விட்டு பிறகு தேடாதீர்கள்.



# மகிழ்வாய் இருப்போமே

ஒரே மாதிரியான செயல்களாலும், அனுபவங்களாலும் வாழ்க்கை சலிப்படைந்து விடாமல் இருக்க ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான அனுபவங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

உங்களது அன்றாட நிகழ்வுகளைக்கூட சிற்சில மாறுதல்களுடன் வெவ்வேறு விதமாக பதிவு செய்யுங்கள். எப்பொழுதும் சுறுசுறுப்பாக ஏதாவது ஒரு செயலைச் செய்து கொண்டிருங்கள்.அந்தப் பழக்கம் உங்களை சலிப்படையாமல் இருக்கச் செய்யும்.

ஒரே மாதிரியான செயல்கள் உங்களை போறடிக்கச் செய்யாமல் இருக்க இடையிடையே வெவ்வேறு வேலைகளின் பக்கமும் கவனம் செலுத்துங்கள். நகைச்சுவை நிகழ்ச்சிகளை ரசியுங்கள். நகைச்சுவை உணர்வுடன் சந்தோஷமாகப் பேசுங்கள். நல்ல நகைச்சுவைப் புத்தகங்களைப் படித்து மனம் விட்டுச் சிரியுங்கள். மன இறுக்கத்தையும் சோர்வினையும் மாற்றிக்கொள்ளுங்கள். மகிழ்ச்சி உங்கள் வசமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விதை நெல் விற்பனை**

சிறிய இன விதைநெல்களான ஆட்டக் காரியும், 406 இலக்க நெல் உடன் விற்பனை

தொடர்பு : T.P : 077 2850554

(சி/3083)(6-8-8)

# எம்மைப் பார்த்து அஞ்சுகின்றனர் சிலர்

அட்டாளைச்சேனை,செப்.3

நாங்கள் மக்கள் மத்தியில் நடந்தவற்றை நடந்தவாறு உள்ளொன்று புறமொன்று வைத்துப் பேசாமல் நேர்மையான முறையில் தெளிவு படுத்தி வருவதனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையும் அதன் வேட்பாளர்களும் அச்சம் கொண்டுள்ளனர் என்று தேசிய காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஏ.எல்.எம். அதா வுல்லா தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸின் வேட்பாளர்களை ஆதரித்து அட்டாளைச்சேனையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:-

தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைமை எப்போதும் உண்மைகளையும் யதார்த்தத்தையுமே பேசிவந்துள்ளது. அதனைத் தான் எனது கட்சியின் அரசியல் தலைமைகளும் தொண்டர்களும் செய்து வருகின்றனர். எமது பெரும் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் எம்மோடு இருக்கின்ற போது பிரதேச அரசியல் தலைமைகள் அனைத்தும் தூங்கிக் கொண்டன. அந்தத் தலைமை தன்னந் தனியனாக நின்று எம் சமூகத்துக்குச் செய்யவேண்டிய விடயங்களைக் கச்சிதமாகச் செய்து வந்தது. - என்றார். (ச)

## 4 ஆம் ஆண்டு நினைவு நாள்



மண்ணில் 12 . 12 . 1944

விண்ணில் 19 . 08 . 2008

அமரர் **லீலறோஜினி இராஜகோபாலு**

(புவனம்)

திதி : திருதியை (03.09.2012)

ஆண்டுகள் நான்கு சென்றாலும்
எங்கள் நெஞ்சில் அழியாத சித்திரமாய்
நிறைந்திருக்கும் எங்கள் அன்புத்தாயின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மீனாட்சி அம்மன் கோவிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(சி/9361)(6.7.8)

## கடலில் மூழ்கி இருவர் சாவு

கல்முனை, பெரிய நீலாவணை கடற்பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை குளிக்கச் சென்ற இருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் கல்முனை மற்றும் பாண்டிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரது சடலங்களும் கல்முனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## விபத்தில் இளைஞன் காயம்

யாழ்ப்பாணம், செப்.3

மோட்டார் சைக்கிளும் - வீதி திருத்தப் பணியில் ஈடுபடும் நிறுவன வாகனமும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் இடதுகால் தொடை என்பு முறிந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து பளையில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் முல்லைத்தீவு நெடுங்கேணியைச் சேர்ந்த நடராசா மகேஸ் (வயது-31) என்பவரே விபத்தில் சிக்கி பாதிக்கப்பட்டவராவார்.

உடனடியாகப் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை நடராஜா

(ஓய்வுபெற்ற அதிபர்)



வேலணை கிழக்கை (2ஆம் வட்டாரம்) பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை நடராஜா (ஓய்வுபெற்ற அதிபர்), கடந்த (01.09.2012) சனிக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பாக்கியலட்சுமி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - செல்லமுத்து தம்பதியரின் அருமை மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், யோகராஜா, காலஞ்சென்ற சௌந்தரராஜன் ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற கோமளாதேவி, சியாமளா (கனடா), ஜெயகரன் (கட்டார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இலங்கநேசன் (கனடா), Dr.கிருஷ்ணகோபி (கட்டார்) ஆகியோரின் அன்பு மாமனும், திவாகரன் (கொழும்பு), Dr. சிவாகரன் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற ஜோதிகா ஆகியோரின் அன்புப்பெரியதந்தையும், அஜந்தன் (கனடா), அபிலாஷ் (கனடா), ஷைனுஜா (கட்டார்) ஆகியோரின் அன்புப்பேரனும், சிவசோதி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான இரத்தினம், செல்வராசா, குமாரசாமி, பராசக்தி (பிரான்ஸ்), இராசமணி (பிரான்ஸ்), தவமணி (டென்மார்க்), கமலாம்பிகை (வவுனியா), செல்லத்துரை (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.09.2012) திங்கட்கிழமை மு.ப. 9.30 முதல் காலி வீதி, கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (04.09.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மாலை 4 மணிக்கு கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

13A,3/1, பிரட்ரிக்கா றோட்,
வெள்ளவத்தை, கொழும்பு - 06
T.P : 011 2556584

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்.

(C/2688)(6.7.8)

## A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு

**IT Diploma Courses**

Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Dip. in Video Production & Multimedia
Master Diploma in Multimedia & Animation
2D & 3D Animation AutoCAD

DMI COMPUTER EDUCATION

அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு



(C/3064)

**Degree Courses** BIT
BIT, B.Sc.(Computer Science), BCA

**Veta Spoken English**

75% OFF

அனைவரும் கணினி கல்விக்கான கட்டணத்தில் 75% பணத்தை சேமியுங்கள்

☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு I - 5/9/2012 9.30 am
பிரிவு II - 8/9/2012 9.30 am
பிரிவு III - 10/9/2012 9.30 am

**DMI COMPUTER EDUCATION**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113. கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் நிகர்வ) Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி,(HNB அருகில்) Tel. : 021-227 0243 | கே. கே. எஸ். வீதி, JET ஸ்போட்ஸ் கட்டிடம், (NSB அருகில்) Tel. : 021-224 1970 |

## மரண அறிவித்தல்



### திருமதி மகேஸ்வரி அருணாசலம்

(சனற்ரறி அம்மா)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வியாபாரிமூலை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி அருணாசலம் கடந்த (01.09.2012) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் அருணாசலத்தின் (சுகாதார பரிசோதகர்) அன்பு மனைவியும், அம்புஜம், அருந்ததி, சாவித்திரி, கெங்காதரன், ஜோகலட்சுமி, தமயந்தி, வைஜந்தி, காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் வசந்தி, சாந்தி ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

(3065)(3.8.7)

## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1 Kg க்கு UK 650 /= Germany 710 /= France 765 /=
- யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம். (Door to Door Service)
- 24 மணி நேரத்தில் விநியோகிக்கும் சேவை (TDD Service)
- மருந்து பொருட்கள், கடலுணவு , மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.
- மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி , யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
International Courier & Cargo Service

(C/3062)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் பிறிமியர் லீக்

# ஸ்ரார் ஈகிள், விக்டரிஸ் பந்தாடின எதிரணிகளை



யாழ்ப்பாணம்,செப்.3

பெரியகடை ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் 'மன்னார் பிறிமியர் லீக்' கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆறாம் நாள் ஆட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

முதலாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியும் சென்.விக்டரிஸ் விளை யாட்டுக் கழக அணியும் களத்தில் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.அன்ரனிஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. அந்த அணி இலக்குகள் சரிவதை தடுத்துக்கொண்டு, ஓட்டங்களையும் குவித்தது. ஒரு பந்துப் பரிமாற்றத்துக்கு சராசரியாக 8 ஓட்டங்கள் என்ற வீதத்தில் அன்ரனிஸ் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் ஆட்டத்தைக் கொண்டு சென்றனர். 10 பந்துப்பரிமாற்றம் நிறைவில் அன்ரனிஸ் அணி 6 இலக்குகளை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிசார்பாக மேனன் 10 பந்துகளில் 18 ஓட்டங்களையும், ரஞ்சனோ 11 பந்துகளில் 15 ஓட்டங்களையும், பெற்றனர்.

பந்துவீச்சில் டேமியன் 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், மெர்லீன், விவேக், அஜித், செல்வராஜ் ஆகியோர் தலா ஒரு இல்க்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.விக்டரிஸ் விளையாட்டுக் கழக அணியின் ஆட்டத்திலும் அதிரடியே மேலோங்கியது. கடினமான இலக்கைத் துரத்திப் பிடிக்க வேண்டும் என்ற வெறியோடு விக்டரிஸ் வீரர்களின் துடுப்புகள் பந்துகளைப் பதம் பார்த்தன.

அன்ரனிஸ் பந்துவீச்சாளர்கள் எதிரணியின் ஓட்டக் குவிப்பை கட்டுப்படுத்த முயன்று தோற்றனர். இதனால் 9.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் விக்டரிஸ் அணி 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியைத் தமதாக்கினர்.

துடுப்பாட்டத்தில் அஜித், பிரதீப் ஆகியோர் 12 பந்துகளில் 23 ஓட்டங்களையும் விவேக் 8 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் லஜீப் 10 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ரஞ்சனோ, ஜோசியஸ் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

மற்றொரு போட்டி ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக் கழக அணிக்கும், யங் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக் கழக அணியினரின் ஆட்டத்தில் அனல் பறந்தது. பந்துகள் பவுண்டரிகளாகவும், சிக்ஸர்களாகவும் மாறிமாறி பறந்துகொண்டிருந்தன. 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அந்த அணி 3 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களை அதிரடியாக குவித்திருந்தது.

துடுப்பாட்டத்தில் ஸ்டார் ஈகிள் விளையாட்டுக்கழக அணிசார்பாக ஜோர்ஜ் 25 பந்துகளை எதிர்கொண்டு 7 சிக்ஸர்கள் 3 பவுண்டரிகள் அடங்கலாக 65 ஓட்டங்களையும், றோய் 13 பந்துகளில் 27 ஓட்டங்களையும் அணிக்கு பெற்றுக்கொடுத்தனர்

பந்துவீச்சில் பபிலன், மயூரன், செல்வா, ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யங் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியினர் ஆரம்பத்தில்இருந்தே இலக்குகளை இழந்த வண்ணம் இருந்ததோடு,. ஓட்டங்களையும் பெறத் தவறினர். இதனால் யங்ஸ்ரார் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 57 ஓட்டங்களை மட்டும் பெற்று 78 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் சுஜன் 19 பந்துகளில் 19 ஓட்டங்களையும், தனுசன் 17 பந்துகளில் 9 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்ரார் ஈகிள் அணியின் அஜித் 4 ஓட்டங்களுக்கு 3 இல்க்குகளையும், அமல், அருண் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர். (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.3

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் காலிறுதி ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 4. மணிக்கு

வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வதிரி மனோகரா விளையாட்டுக் கழகம்

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட முன்னணி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றுகின்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3.30 மணிக்கு

உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகம் எதிர் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம்

பி.ப. 4.30 மணிக்கு

நக்கீரன் விளையாட்டுக் கழகம் எதிர் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம். (ங-23)

## நெடுந்தீவுக் கழகங்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.3

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிகளை முதற்கட்டமாக பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே நடத்தி வருகின்றன.

இந்த வகையில் நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களின் 21 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 6ஆம் திகதி நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளன என்று நெடுந்தீவு பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் மயூரன் தெரிவித்துள்ளார்.(ங-23)

## கம்பஹா அணியை வீழ்த்தி முன்னேறியது யாழ். அணி

வலி.வடக்கு, செப் 3

பலத்த போராட்டத்தின் பின்னர் யாழ்.மாவட்ட உயர் அரச அலுவலர்களின் மென்பந்துக் கிரிக்கெட் அணி தனது முதலாவது வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சினால் நடத்தப்பட்ட பொது நிர்வாக அமைச்சின் செயலாளர்வெற்றிக்கிண்ணத்துக்கான மாவட்ட அணிகளுக்கு இடையேயான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், ஹம்பகா மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

இந்தப் போட்டி நுவரெலியா பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மாவட்ட அணி 47 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கம்பஹா மாவட்ட அணி 43 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. நான்கு ஓட்டங்களினால் வெற்றிபெற்ற யாழ்.மாவட்ட அணி இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

இந்தத் தொடரில் மாவட்ட பிரதேச செயலகங்களின் கணக்காளர்கள், பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடற் பணிப்பாளர்கள் மற்றும் பெண் அலுவலர்களையும் சகல அணிகளும் உள்வாங்கியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ங-86)

## உழவர் ஒன்றியம் சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.3

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து நடத்திவரும் தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிகளின் முதற்கட்டமாக பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடர் நடத்தப்பட்டு வருகின்றது.

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. (ங-23)

# கணுசன் 'ஹற்றிக்' கோல் றோயல் அடுத்த சுற்றுக்குள்



யாழ்ப்பாணம்,செப்.3

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிறிமியர் லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் பிரிவு மூன்றுக்கான ஆட்டம் ஒன்றில் ஊரெழு றோயல் அணி கோல் மழை பொழிந்து வெற்றியீட்டியது.

இந்த ஆட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

முதல்பாதியில் இரு அணியினரும் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஆட்டம் ஆரம்பமாகி இரண்டாவது நிமிடத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வீரன் கணுசன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார்.

ஆனால் றோயலின் கோல் பெற்ற மகிழ்ச்சியை அதிக நேரம் நீடிக்க பொம்மர்ஸ் அணி விடவில்லை. பதிலடி ஆட்டத்தில் இறங்கிய பொம்மர்ஸ் அணி வீரர்கள் ஆட்டத்தின் நான்காவது நிமிடத்தில் தங்கள் முயற்சியில் வெற்றியும் கண்டார்கள். அந்த அணியின் அனுரதன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி பொம்மர்ஸ் அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார். இதன்பின்னர் இரு அணியினரும் மாறி மாறி முன்னேறித் தாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆட்டம் தொடங்கிய முதல் ஐந்து நிமிடங்களுக்குள்ளேயே இரு அணியினரும் தலா ஒரு கோல் வீதம் அடித்ததால் பார்வையாளர் தரப்பில் பரபரப்புத் தொற்றிக்கொண்டது.

களத்தில் இரு அணியினரும் தத்தமது அணிக்கான கோலினைப் பெறுவதற்கான முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டனர். இந்த முயற்சியில் மீண்டும் றோயலை வென்றது. முதல் பாதி ஆட்டத்தின் இருபதாவது நிமிடத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வீரன் கணுசன் தனது அணிக்கான இரண்டாவது கோலினையும் அடித்து அசத்தினார்.

ஊரெழு விளையாட்டுக் கழக அணிக்கு பாடம் புகட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆக்ரோஷமாக ஆடத் தொடங்கிய வதிரி பொம்மர்ஸ் அணியினர் எதிர் அணியினரின் கோல் பரப்பினைத் தொடர்ந்தும் ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்..

ஆனாலும் அந்த முயற்சிகள் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தின் பின்கள வீரர்களால் தடுத்தாடப்பட்டது.

ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இடைவேளையின் பின்னர் இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கிய போது வதிரி பொம்மர்ஸ் அணி முதல்பாதி ஆட்டத்தில் விட்ட தவறுகளை நிவர்த்திசெய்யும் முகமாக ஆட்டத்தை வேகப்படுத்தி கோல் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டது. ஆனால் அந்த முயற்சிகள்எவையும்கைகூடவில்லை.


இந்த நிலையில் பொம்மர்ஸ் அணியின் பலவீனமான பகுதியூடாக ஊடறுத்த ஊரேழு றோயல் வீரன் கணுசன், 10 ஆவது நிமிடத்தில் தன்னுடைய 'ஹற்றிக்' கோலினை அடித்து அணியின் வெற்றியை உறுதிசெய்தார்.

இந்த நிலையில் ஆட்டத்தின் 25 ஆவது நிமிடத்தில் ஊரேழு றோயல் விளையாட்டுக் கழக அணியினருக்கு மூலை உதை (கோணர் கிக்) ஒன்று கிடைத்தது. அதனைச் சரியாகப் பயன்படுத்தி றோயல் வீரன் தர்சனன் கோல் அடித்தார். றோயல் அணி நான்காவது கோலையும் அடித்துவிட்டதால் அதன்பின்னர் பொம்மர்ஸ் அணி வீரர்கள் துவண்டுபோயினர்.

இதனால் போட்டி முடிவில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்குத் தகுதிபெற்றது. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறிபோகுமா
# நியூஸிலாந்தின் வெற்றி



நியூஸிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் இந்திய அணியை விட முன்னிலை பெற்ற போதும் இரண்டாவது இன்னிங்ஸில் தடுமாற்றத்துடன் ஆடி வருகின்றது. நேற்றைய மூன்றாம் நாள் நிறைவில் நியூஸிலாந்து அணி 9 இலக்குகளை இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் வெற்றி பெற்ற இந்தியா 1-0 என்று முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது டெஸ்ட் பெங்களூரில் உள்ள சின்னசாமி மைதானத்தில் நடக்கிறது.

முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி 365 ஓட்டங்கள் எடுத்தது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் ரெய்லர் 113, வன் விக் 71, குப்தில் 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இந்தியா சார்பில் ஓஜா 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.



பின்னர் முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி, இரண்டாம் நாள் முடிவில் 5 இலக்குகள் இழப்பிற்கு 283 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஹோக்லி (93), டோனி (46) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டத்தை தொடக்கிய இந்திய அணியின் விராத் ஹோக்லி சதம் அடித்து அசத்தினார். மறுமுனையில் இவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த அணித் தலைவர் டோனி தன்பங்கிற்கு அரைச்சதம் அடித்தார். ஆறாவது இலக்குக்கு 122 ஓட்டங்கள் பகிர்ந்த போது ஹோக்லி (103) ஆட்டமிழந்தார். சிறிது நேரத்தில் டோனி (62) பவிலியன் திரும்பினார். அடுத்து வந்த சகிர்கான் (7), பிரக்யன் ஓஜா (0), உமேஷ் யாதவ் (4) நிலைக்க வில்லை.முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 353 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்து 12 ஓட்டங்கள் பின்தங்கியது. அஷ்வின் (32) ஆட்டமிழக்காமல் இருந்தார். நியூஸிலாந்து சார்பில் ரிம் சவுத்தி 7இலக்குகளையும், பிரேஸ்வெல் 2இலக்குகளையும், டிரண்ட் பவுல்ட் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

12 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை தொடக்கிய நியூஸிலாந்து அணிக்கு பிரண்டன் மக்கலம் (23), மார்டின் குப்தில் (7), வில்லியம்சன் (13) ஏமாற்றினர். முதல் இன்னிங்ஸில் சதம் அடித்த ரோஸ் ரெய்லர் 35 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். மத்திய வரிசையில் களமிறங்கிய டானியல் பிளைன் (31), ஜேம்ஸ் பிராங்க்ளின் (41), வன் விக் (31), பிரேஸ் வெல் (22) ஓரளவு கைகொடுத்தனர். ரிம் சவுத்தி (2) நிலைக்க வில்லை.மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் இரண்டாவது இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி 9 இலக்குகளை இழந்து 232 ஓட்டங்கள் எடுத்து, 244 ஓட்டங்கள் முன்னிலை வகித்திருந்தது. பட்டேல் (10), போல்ட் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியா சார்பில் அஷ்வின் 5, உமேஷ் யாதவ், பிரக்யான் ஓஜா தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். (5)

# ஸ்ரோரஸ் சிறந்த மனிதர்



ஓய்வுபெற்ற இங்கிலாந்துக் கிரிக்கெட் அணியின் தலைவர் அன்ட்ரூ ஸ்ரோரஸ் மிகச்சிறந்த ஒரு மனிதர் என்று இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் அன்டி பிளவர் தெரிவித்துள்ளார். அத்தோடு அவருடன் பணிபுரிந்த காலம் மிகச்சிறப்பானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


இங்கிலாந்து அணியின் வெற்றிகரமான தலைவர்களுள் ஒருவராகக் கருதப்படும் அன்ட்ரூ ஸ்ரோரஸ் தனது மோசமான துடுப்பாட்டத் திறன் காரணமாக கிரிக்கெட் போட்டி அனைத்திலிருந்தும் ஓய்வுபெறுவதாக அறிவித்திருந்தார். இதன் காரணமாக 10 வருட சர்வதேசக் கிரிக்கெட் வாழ்வு நிறைவுக்கு வந்திருந்தது.

இந்த நிலையில் அன்ட்ரூ ஸ்ரோரஸ் ஓய்வுபெற்ற பின்னர் முதன்முறையாகக் கருத்து வெளியிட்ட அன்டி பிளவர், அன்ட்ரூ ஸ்ரோரஸ் மிகச்சிறந்த மனிதர் எனவும், என்ன நடக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ளும் மிகச்சிறந்த உணர்வைக் கொண்டவர் எனவும் தெரிவித்தார். அத்தோடு மற்றவர்களைச் சிறப்பாக புரிந்து கொள்ளும் இயல்பு படைத்தவர் எனவும் தெரிவித்துள்ளார்.

அன்ட்ரூ ஸ்ரோரஸ் இங்கிலாந்தின் மிகச்சிறந்த அணித்தலைவர்களில் ஒருவராக நினைவிற் கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்த அன்டி பிளவர், அவரது தலைமையில் கீழ் ஏனைய வீரர்கள் மிகச்சிறந்த வீரர்களாக மாறியுள்ளார்கள் எனவும் தெரிவித்தார். அத்தோடு மற்றையவர்களை இணைக்கும் மிகச்சிறந்த பண்பு அன்ட்ரூ ஸ்ரோரஸிடம் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அன்ட்ரூ ஸ்ரோரஸும், அன்டி பிளவரும் மிகவும் நெருக்கமான உறவைக் கொண்டிருந்த நிலையில் அது குறித்துக் கருத்துத் தெரிவித்த அன்டி பிளவர், இருவரும் எல்லா நேரங்களிலும் ஒரு போதும் ஒற்றுமையான கருத்தைக் கொண்டிருப்பதில்லை எனவும், மாற்றுக் கருத்துக்கள் எழுகின்றபோது அவற்றைக் கதைத்துத் தீர்த்துக் கொள்ளும் இயல்பு காணப்பட்டதாகவும், அதன் காரணமாக அன்ட்ரூ ஸ்ரோரஸோடு சிறப்பாக இணைந்து செயற்பட முடிந்ததாகவும் தெரிவித்தார். (5)

# எஸ்.எல்.பி.எல். தொடர் வெற்றி பெருமிதம் கொள்கிறார் ஆர்னல்ட்



இலங்கைக் கிரிக்கெட் சபையால் முதற்தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா பிறிமியர் லீக் போட்டி வெற்றியடைந்ததாக இலங்கை அணியின் முன்னாள் வீரரும், நேர்முக வர்ணனையாளருமான ரசல் ஆர்னல்ட் தெரிவித்துள்ளார். எனினும் முன்னேற்றங்கள் தேவைப்படுவதையும் அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கையால் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா பிறிமியர் லீக் தொடர் கடந்த 11 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை இடம்பெற்றிருந்தது. அந்தத் தொடரில் ஊவா நெக்ஸ்ட் அணி சம்பியன் பட்டம் வென்றிருந்தது. அந்தத் தொடருக்கான நேர்முக வர்ணனையாளர்கள் குழுவில் இடம்பெற்றிருந்த ரசல் ஆர்னல்ட், அந்தத் தொடர் தொடர்பிலான தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பிறிமியர் லீக் தொடர் வெற்றியடைந்ததாகத் தான் கருதுவதாகத் தெரிவித்த ரசல் ஆர்னல்ட், இன்னமும் முன்னேற்றங்கள் தேவைப்படுவதாகவும் தெரிவித்தார். இந்தியாவின் இந்தியன் பிறிமியர் லீக் தொடரோடு ஸ்ரீலங்கா பிறிமியர் லீக் தொடரை ஒப்பிட முடியாது எனத் தெரிவித்த அவர், ஸ்ரீலங்கா பிறிமியர் லீக் தொடர் இலங்கைக்கானது எனத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பிறிமியர் லீக் தொடர் மூலம் இளைய வீரர்கள் நாட்டின் மிகச்சிறந்த வீரர்கள், வெளிநாடுகளிலிருந்து பங்குபற்றிய சிறந்த வீரர்கள் ஆகியோரோடு இணைந்து அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்ததாகத் தெரிவித்த அவர், தங்களது திறமைகளை வெளிக்காட்டுவதற்கு இளைய வீரர்களுக்கு சிறந்த வாய்ப்பாக அமைந்ததாகத் தெரிவித்தார். அத்தோடு நிதி ரீதியாகவும் வெற்றிகரமானதாக அமைந்ததாக அவர் தெரிவித்தார்.

ரசிகர்கள் நேரடியாகச் சென்று போட்டிகளைப் பார்ப்பது குறைவாகக் காணப்பட்டது எனத் தெரிவித்த அவர், எனினும் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து ஸ்ரீலங்கா பிறிமியர் லீக்இற்கு ஏராளமான ஆதரவு கிடைக்கப்பெற்றதாகவும் தெரிவித்தார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RENT - A - CAR
* Self drive
* With driver
* Wedding & Special events
* Special tour packages
* Weekly, monthly & term rental

Please Contact :-
0772208048, 0771190011
(22467)(3.6)

## ஐ.பி.எல்லுக்கு அதிக முக்கியத்துவம்

இந்தியக் கிரிக்கெட் சபை இந்தியன் பிறிமியர் லீக் தொடருக்கு அதிகளவிலான முக்கியத்துவத்தை வழங்குவதாக இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான பிஷன் சிங் பேடி தனது விமர்சனத்தை வெளிப்படுத்தியுள்ளார். இந்தியக் கிரிக்கெட் சபை டெஸ்ட் போட்டிகளுக்காக தனது கவனத்தைச் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்த பிஷன் சிங் பேடி, இந்தியன் பிறிமியர் லீக் தொடரில் அதிக கவனத்தைச் செலுத்துவது இந்திய அணிக்குப் பின்னடைவுகளையே ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

இந்தியன் பிறிமியர் லீக் போன்ற தொடர்களில் அதிகம் கவனத்தைச் செலுத்துவதால் திறமையுள்ள வீரர்களை உருவாக்க முடியாது எனத் தெரிவித்த அவர், பொறுமையாக நிதானித்து ஆடக்கூடிய, உயர்தரமான வீரர்களை இந்தியன் பிறிமியர் லீக் உருவாக்காது எனவும் தெரிவித்தார்.

இந்திய டெஸ்ட் அணியில் சுரேஷ் ரெய்னா சேர்க்கப்பட்டமைக்கும் தனது விமர்சனத்தை வெளியிட்ட பிஷன் சிங் பேடி, அதற்குரிய தகுதிகள் சுரேஷ் ரெய்னாவிற்குக் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளை முக்கியமானதாக இந்தியக் கிரிக்கெட் சபை கருதாது விடுமாயின் இந்திய அணியால் இழந்த முதலிடத்தைத் திரும்பப் பெற முடியாது எனவும், இந்தியா தற்போதைய நிலையில் அதுபற்றி அதிகமாகக் கவலைப்படுவது போன்று காணப்படவில்லை எனவும் பிஷன் சிங் பேடி தெரிவித்துள்ளார். (5)

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?

எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
22337

## NEW SCIENCE HALL
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

யாழ். மாணவர்களுக்கான வரப்பிரசாதம்
A/L
Geography
Paper Class - 2013
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
By:-
S. ஐங்கரன் M.A
S. திவேஸ் B.A (Hons)

திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி 4 - 6 pm
* ஆரம்ப அலகிலிருந்து மீட்டலும் கடந்த கால வினாவும், மாதிரிவினாவிடையும் இடம் பெறும்
* ஒரு கட்டணம் மட்டுமே அறவிடப்படும்.

ஆரம்பம் - 3.09.2012 திங்கள் மாலை 4.00
(சி/3008)

## SUBRA -14

சித்தன்கேணி - வட்டுக்கோட்டை இரு இடங்களிலும்
2013 புலமைப்பரிசில் வகுப்புக்கள்
ஆரம்பம் 03.09.2012 (திங்கள்) மாலை 4.30

**வெற்றி தேர்வு வளவாளர்களுடன்**

ஆசிரியர்கள்
திருமதி ஜீவா
(முன்னாள் யாழ்ப்பாண கல்லூரி ஆசிரியை)
திரு. S. கைலைநாதன்

* வாரம் தோறும் பயிற்சிப் பரீட்சைகள்
* ஒரு பிரிவில் 40 மாணவர்கள் மட்டும்
* இன்று நேற்று அல்ல என்றென்றும் தனித்துவம் பெற்ற ஒரே நிறுவனம் SUBRA மட்டுமே.

(சி/3007)

## சல்லிகள் விற்பனைக்கு

தரமான கருஞ் சல்லிகள் (½", ¾", 1", 1½", 4", 9x6) போன்றவை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு
0775890730.

## FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புக்கள்
Easy Way to Learn French

French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட, சர்வதேச பரீட்சைக்கு எமது நிறுவனத்தின் ஊடாக தோற்றி சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம். சர்வதேச தரம் வாய்ந்த French மொழி வகுப்புக்களை மேற்கொள்ளும் ஒரே ஒரு நிறுவனம்.

France க்கு Tourist Visa வில் செல்லவுள்ளோர், France, Canada வுக்கு திருமணம் முடித்துச் செல்லவுள்ளோர், France க்கு செல்லவுள்ளோரும் கற்றுக் கொள்ளலாம்.

பல்கலைக்கழக, உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர்களுக்கு கட்டண கழிவு வழங்கப்படும்.

விரிவுரைகள் யாவும் பிரான்ஸில் ஆசிரியப் பயிற்சி பெற்றவரால் வழங்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு - 0779789456

83, Palaly Road, Kantharmadam, Jaffna.
(பீசா உணவகம் அருகில் உள்ள லேனில்)
ஆரம்பம் 08.09.2012 சனி 2 P.M

நெல்லியடி M.M.V வீதி, காளி கோவிலடிநெல்லியடி,
ஆரம்பம் 05.09.2012 புதன் 3 P.M

Deutsch வகுப்புகளும் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
விசேட கட்டணக் கழிவு

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 ½ Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◇ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◇ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◇ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◇ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◇ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

புதிய வகுப்புக்கள் Batch I - 10.9.2012
Batch II - 12.9.2012
Batch III - 15.9.2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Hot Line : 0777222422 0777585913, 0714299935, 0777730074
(சி/2996)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
08*12*1940

இறப்பு
15*09*2011

### அமரர் முருகேசு சிவப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ்/இந்துக் கல்லூரி,
பொது முகாமையாளர் யாழ். பல.நோ.கூ. சங்கம்)

அன்பின் திருவுருவாய்
அமைதியின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
ஊர் புகழும் உத்தமனாய்
பாசமும் பரிவுமுள்ளவார்த்தைகளை பேசி
எங்களை வாழ்வாங்கு வாழ வைத்து
மீளாத்துயில் கொண்டு ஓராண்டு ஆனதுவோ
அன்புத் தெய்வமே
உங்கள் பசுமை நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களைவிட்டு அகலாது அப்பா.

20/3, சுவாமியார் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
(சி/3049)(3.8.7)
குடும்பத்தினர்

## IIS கணனிக் கற்கை நெறிகளுக்கான விஷேட சலுகைகள் வழங்கும்

சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்




2012 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!!
உங்களுக்காகவே September மாதத்தில்
கணனிக்கற்கை நெறிகளுக்கான
விஷேட பிரிவுகள் ஆரம்பமாக உள்ளது.

மேலதிக விபரங்களுக்கு :
021 4 922 741

இப்பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்ளும்
மாணவர்கள் Kingston Flash Memory ஒன்றினை
இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.
இவ்வாய்ப்பு இப்பிரிவுகளுக்கு மட்டுமே.

ஒரு கற்கை நெறிக்கான கட்டணத்துடன்
இரு கற்கை நெறிகளை
பயின்று கொள்ளுங்கள்....

புதிய பிரிவுகள் ஆரம்பம்
05.09.2012
14.09.2012
15.09.2012
காலை 10.00 மணி

| Certificate Courses | Diploma Courses |
|---|---|
| Certificate in Office Solution Development | Diploma in Multimedia |
| Certificate in Multimedia | Diploma in Web Development |
| Certificate in Web Designing | Diploma in Computer Programming |
| Certificate in DeskTop Publishing | Diploma in Computerized Accounting |
| Certificate in Hardware Technology | Diploma in Eng. Drawing & AutoCAD |
| Certificate in Java Programming | Diploma in Software Development |
| Certificate in Visual Programming | Diploma in Business Information System |
| Certificate in Networking | Diploma in Computer Hardware & Networking |
| Certificate in Database Management | |

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
100 CLOCK TOWER ROAD,JAFFNA
T.P : 021 222 2831/021 492 2741 FAX : 021 222 6933
WEB : iis.edu.lk E-Mail : iis@iis.edu.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.